Deviyin KANMANI -Tamil Fortnightly march-15, 2009. Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No 49510/89 Published every 1st and 15th of every month.


# என்னைப் பற்றி



இனிய வாசக சகோதர, சகோதரிகளுக்கு... வணக்கம். கண்மணியில் ''நீயில்லாமல் நானும் நானல்ல...'' என்ற நாவலின் மூலம் உங்களையெல்லாம் சந்தித்த நான்... மீண்டும் ''என் உயிரின் உயிரே...'' என்ற நாவலின் மூலம் சந்திப்பதில் நிரம்ப சந்தோஷம்! நேசம் நுழையாத நெஞ்சமும்... நேசத்தை சுவாசிக்காத இதயமும் இவ்வுலகில் உண்டா...? நாயகன் அசோக்...நாயகி திவ்யப்ரியா...இருவரும் நேசத்தையே சுவாசிக்கிறார்கள்! அவர்களுடைய நேச சுவாசிப்பின் இடையில் பெண்ணொருத்தி புகுந்து விளையாட... இருவரும் ஆளுக்கொரு திசையாய் சென்று விட்டார்கள்! நேசம் அவர்களை இணைத்து வைத்ததா..? இல்லையா...? என்பதை நாவலைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள். என் எழுத்துப் பணிக்கு உதவிகரமாய் இருக்கும்... எனது அன்புக் கணவருக்கு.. இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்! இந்த நாவலின் நிறைகுறைகளை விமர்சித்தால்.. என்னை வளர்த்துக் கொள்ள.. அவை பேருதவியாய் இருக்கும்.

மிக்க அன்புடன்

ஆர்.மகேஸ்வரி



# என் உயிரின் உயிரே...

-ஆர்.மகேஸ்வரி

**தா**யின் கருவறையிலிருந்து வெளிவர அடம் பிடிக்கும் குழந்தையாய் சூரியன் இருக்க, வான் மங்கை இன்னும் சூரியனை பிரசிவிக்காத விடியற்காலை நேரம்.

ஊட்டியில் பனிக்காற்று. ஜிலுஜிலு தென்றலாய் வீச பஸ்ஸிலிருந்து குழந்தையோடு இறங்கினாள்.

'அவள்?'

'திவ்யப்ரியா!'

திவ்யப்ரியாவின் உள்ளம் மரத்துவிட்டது போல உடலும் மரத்து குளிரே தெரியாமல் இருக்க, ஆனால் அவள் கையிலிருந்த சின்னஞ்சிறு கைக்குழந்தை குளிரில் நடுங்கியது. அதனை ஆசையுடன் கட்டியணைத்து முத்தமிட்டு வாஞ்சையுடன் மார்போடு தழுவிக் கொண்டாள். குளிருக்கு அடக்கமாய் தாயோடு ஒட்டிய குழந்தை திரும்பவும் உறங்கி விட்டது.

சின்னப்பெட்டியை கையிலெடுத்துக் கொண்டு நடந்தாள். எந்த நம்பிக்கையில் வேலை கிடைக்கும் என்று அநாதையாய் சென்னையில் இருந்து வந்தாள் என்றே தெரியாமல் கைக்குழந்தை சிவானவை தோளில் போட்டுக்கொண்டு தவிப்போடுதான் நடந்தாள்.

''மனநிலை சரியில்லாத இளைஞரை பார்த்துக் கொள்ள வயதானவர்களோ அல்லது விதவைகளோ விண்ணப்பிக்கவும். நல்ல சம்பளத்தோடு தங்குமிடமும் இலவசம்'' என்று ஊட்டியைச் சேர்ந்தவர்கள் தங்கள் முகவரி கொடுத்து விளம்பரம் செய்து இருந்தனர். திவ்யப்ரியாவின் கடிதம் சென்றதுமே வரச்சொல்லி கடிதம் அனுப்பியிருந்தனர்.

இவளுக்கு இந்த வேலை கிடைப்பது சந்தேகம் என்றாலும் துணிச்சலோடு புறப்பட்டு விட்டாள். வயதானவர்கள் தேவையென்று இருக்க இவ்வளவு சின்ன வயதுக்காரிக்கு இந்த வேலையைத் தருவார்களா? ஆனாலும் கடவுளின் மேல் பாரத்தைப்போட்டு விட்டு கிளம்பி விட்டாள், விதவை என்ற நம்பிக்கையை வைத்துக்கொண்டு.

ஆட்டோ ஒன்று அவளருகே வந்து நின்றது.

''எங்கேம்மா போகணும்?'' ஆட்டோ டிரைவர் கேட்க, அவள் விலாசம் சொன்னாள்.

''ரொம்ப தொலைவாச்சே, நூறு ரூபாய் ஆகும்.''

''அதுல குறைக்க முடியாதா சார்?'' என்று கேட்ட திவ்யப்ரியாவின் மெலிந்த குரலைக் கேட்டதும் பரிதாபப்பட்டு, ''உனக்காக ஐம்பது ரூபாய்க்கு வரேன். உட்காரம்மா'' என்று பாசமாய் சொல்ல திவ்யப்ரியா நன்றி சொல்லி ஏறியமர்ந்தாள்.

ஆட்டோ சீரான வேகத்தில் புறப்பட்டது. அவளது மனமோ கடந்த காலத்திற்கு பயணித்தது. அவளின் கடந்த காலம் கண்களில் படமாய் தெரிய அப்படியே மூழ்கிப்போனாள்.

அப்போது திவ்யப்ரியாவும், அவளது தாய் மரகதமும் வாழ்க்கையின் அடித்தள வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர். தந்தை இருந்த காலம் வரை ஓரளவு நடுத்தர குடும்ப வாழ்க்கை நுரையீரல் புற்றுநோய் வந்து படுத்த படுக்கையாய் விழுந்தபோது அவளது தாய் தவியாய் தவித்தாள். பணமில்லாமல் கஷ்டப்பட்டுவிட்டு அவரின் மருத்துவ செலவிற்கு வீட்டையும் விற்று மருத்துவம் பார்த்தாள். அத்தனை பணத்தையும் வாரியிறைத்து செலவு செய்தும் பிழைக்காமல் இறந்து போனார், திவ்யப்ரியாவின் தந்தை.

மருத்துவ செலவுக்கும், அவரது இறுதி சடங்கிற்கும் செலவு செய்தது போக உயிரோடு உள்ள இருவருக்கும் மிஞ்சியது ஒரு லட்ச ரூபாய் மட்டுமே. அந்த தொகையை வங்கியில் செலுத்தி அதில் வரும் வட்டியிலும் மரகதம் வீட்டிலேயே ஊறுகாய், வடகம், வற்றல் என போட்டு வெயிலில் அலைந்து, திரிந்து விற்று சம்பாதித்ததிலும் வாடகை வீட்டில் குடித்தனத்தை நடத்தினர்.

அப்போது திவ்யப்ரியா பனிரெண்டாம் வகுப்பில் சென்னை மாவட்டத்திலேயே முதலாவதாய் மதிப்பெண் எடுத்து தேறினாள். அனைவரும் பாராட்ட தனது தகப்பனார் இருந்து பாராட்டவும், பார்க்கவும் இல்லையே என்று கண்கலங்கினாள். பள்ளியில் பரிசளித்தார்கள். முதலமைச்சர் பரிசளித்தார். இத்தனை மரியாதைகளுக்கும் புகழ்ச்சிகளுக்கும் கொஞ்சமும் தலைக்கனம் இல்லாமல் இருந்தாள்.

அம்மாவிடம் கெஞ்சி கேட்டாள்.

''அம்மா நான் மேலே படிக்கறேம்மா''

''படிச்சது போதும் திவ்யா. உன்னை காலேஜ் எல்லாம் அனுப்பி படிக்க வைக்க காசா இருக்கு? இருக்கிற தொகையையும் கரைச்சிட்டா நாளைக்கு உனக்கு கல்யாணம், காட்சின்னா என்ன செய்வேன்? ஒருவனிடம் எப்படி உன் கையைப் பிடித்துக் கொடுப்பேன்? சொல்லும்மா? நம்ம நிலைமைக்கு இவ்வளவு படிச்சதே அதிகம்!''

''அம்மா என்னை டாக்டருக்கோ எஞ்சினியருக்கோ படிக்க வைக்க வேண்டாம். எனக்கு அந்த அளவு ஆசையுமில்லே. ஒரு சாதாரண டிகிரி மட்டும் படிக்க வையும்மா. நீ கூட காசு கொடுக்க வேண்டாம். ஸ்காலர்ஷிப்ல படிச்சுடுவேன். உன்னோட செலவு வெறும் புத்தகம், நோட்டு பேனாதாம்மா. உன்னை தொல்லைப்படுத்த மாட்டேன். மற்ற பொண்ணுங்க மாதிரி ஆடம்பரமா ட்ரஸ் பண்ணிக்கணும், நகை போட்டுக்கணும், மேக்கப் பண்ணிக்கணும். ஸ்கூட்டியில போகணும்னு எல்லாம் ஆசையில்லேம்மா. பக்கத்துல இருக்க காலேஜ்னா ஒரு சைக்கிள் போதும். அது கூட வேணாம்மா நான் நடந்தே போயிடறேன். உங்களுக்கு இப்போது போலவே எந்த கஷ்டமும் கொடுக்க மாட்டேன். ப்ளீஸ்மா'' அழாத குறையாய் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

''சொன்னால் கேட்க மாட்டாயா திவ்யா? நமக்குன்னு யார் இருக்கா? ஒரே உறவுன்னு என் தம்பி இருக்கான். அவனும் ஆட்டோ ஓட்டி சம்பாதிப்பதை குடிச்சே அழிக்கிறான். பக்கத்தில் இருந்தாலும் சொல்லி சண்டை போடலாம். நான் சண்டை போடுவேன்னு பயந்தே தள்ளி இருக்கான். அதுவும் அவன் நம்மிடம் வாங்கிப்போகாமல் இருந்தாலே போதும். தடிமாடு கணக்காய் வளர்ந்துட்டு அவன் வரும் போதெல்லாம் நூறு, இருநூறுன்னு அவனுக்கு நாம் அறுக்கணும்.

என் விதி கட்டினவரும் சரியில்லே. கூடப்பொறந்த பொறப்பும் சரியில்லே. நீயாவது ஒழுங்கா பேச்சு கேட்பேன்னு பார்த்தால் மேலே படிக்கணும்னு அடம்பிடிக்கறே.'' வருத்தமாய் பேசினாள் மரகதம்.

''அம்மா... படிக்காமல் வீட்டில் என்ன செய்யட்டும்? உனக்கு துணையா வடகம், ஊறுகாய்ன்னு போடச்சொல்றீயா? அம்மா என்னை மட்டும் படிக்க வச்சிடும்மா. அப்புறம் உன்னை ராணி போல வைத்துக் காப்பாற்றுவேன். சம்பாதிப்பது அத்தனையுமே உன் கையில் கொடுத்துட்டு நீயா பார்த்து செலவுக்கு தருவதை வாங்கிக்



''கபாலியை குழந்தைக்கு பெயர் வைக்க சொன்னது தப்பா போச்சு''

''ஏன்?''

''குழந்தைக்கு 'மாமூல்ன்'னு பெயர் வைச்சுட்டானே''

-வெ.சித்ரா,
கும்மிடிபூண்டி.



கொள்வேன். என்னம்மா?''

''அப்படியே கன்னத்தில் ரெண்டு போட்டேனா? படிச்சிட்டு எனக்கு சம்பாதித்துப் போடுவாளாம். காலாகாலத்தில் உன்னை ஒருத்தன் கையில் பிடிச்சி கொடுத்துட்டாதான் என்னால நிம்மதியா கண்ணை மூட முடியும். இப்பவே ஆஸ்துமா, நெஞ்சடைப்புன்னு உடம்புல ஏகப்பட்ட நோய் இருக்கு''

''அம்மா நான் மேலே படிக்கணும்'' அடம்பிடித்தாள் திவ்யப்பிரியா சிறு குழந்தையாய்.

''உன்னை யார் நல்லா படிக்க சொன்னது? மக்கா இருந்து பெயிலாகி இருந்தா இப்படி என் மண்டையை உருட்டமாட்டே இல்லையா?'' சலித்துக் கொண்டாள்.

''அம்மா மாவட்டத்துக்கே முதலாவதா வந்து என் போட்டோ எல்லா பேப்பர்லயும் வந்தப்போ உனக்கு சந்தோஷமா இல்லையா?''

''ஆமாம் இருந்துச்சு''

''இதை விட ஒருபடி நல்லா படிச்சி உனக்கு இன்னும் பெருமை சேர்க்கறேம்மா. நீ எனக்காக செலவே பண்ண வேண்டாம். ஏதாவது தொண்டு நிறுவனம், ஸ்காலர்ஷிப்னு படிச்சிட்டு வந்துடறேம்மா. ஒத்துக்கோம்மா. நான் உன் பெண்ணில்லையா? உன் பெண்ணுக்கு பெருமையென்றால் அதுல உன் பங்கு தானே அதிகம். ப்ளீஸ்மா எனக்காக கொஞ்சம் இரக்கம் காட்டும்மா'' கண்களில் கண்ணீர் வழிய கேட்டாள்.

''காலேஜ்ல பிள்ளைங்கயெல்லாம் சரியிருக்காது. மோசம்னு சொல்றாங்களே''

''அப்படியெல்லாம் இல்லேம்மா. சினிமாவுலேயும், டி.வி.யிலேயும் காட்றதை நம்பாதீங்க. உங்க பெண் நான். நான் தப்பு பண்ணுவேனா? என்மேல் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?''

''இருக்குடி. ஆனாலும்'' என்று இழுத்தாள் மரகதம்.

''அம்மா உங்க நம்பிக்கையை பொய்யாக்க மாட்டேன். இது சத்தியம்மா. உங்கள் மேல் ஆணைம்மா. ப்ளீஸ்மா என்று பரிதாபமாய் திவ்யப்ரியா கேட்க, அம்மா அதற்கு மேல் பேசவில்லை.

தாய் நம்பினாள். அந்த ஏழைத்தாய்க்கு அதற்கு மேல் மகளின் படிப்பு ஆசைக்கு அணை போடத் தெரியவில்லை.




அம்மாவிடம் கெஞ்சி, கூத்தாடி அவர்களுக்கு அருகாமையில் உள்ள கல்லூரியிலேயே இடமும் வாங்கி விட்டாள்.

இன்று தான் முதல் முதலாய் கல்லூரி செல்ல வேண்டிய நாள். அவளிடம் இருந்த நல்ல சுடிதாரில் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு தளர தளர ஒற்றைப்பின்னல் பின்னி காதோரமாய் அழகிய ரோஜா ஒன்றை செருகி கல்லூரிக்கு சென்றது.

வானத்திலிருந்து இறங்கி வந்த நிலா கல்லூரிக்கு புறப்படுவது போல இருந்தது.

அம்மா பயந்து கொண்டு தான் அனுப்பினாள்.

''திவ்யா யாரிடமும் அநாவசியமாய் பேசக்கூடாது. முக்கியமாய் ஆண் பிள்ளைகள் பக்கமே திரும்பிப் பார்க்கக்கூடாது. அவர்கள் பேச வந்தாலும் நிமிர்ந்து பாராமல் சென்று விட வேண்டும். நீ போவது படிக்க மட்டுமே. அது மட்டும் உன் நினைவில் இருக்க வேண்டும். நம் குடும்பம் கஷ்டப்படுவது உனக்கு மனதில் இருக்க வேண்டும். பெண்களிடம் கூட அளந்தே பேசும்மா. நட்பு வச்சிக்கோ.

ஜாக்கிரதைம்மா. உன் அப்பா இருந்தால் எனக்கு இவ்வளவு பயம் இருக்காது. தகப்பனில்லாமல் வளர்ந்த பிள்ளை தருதலை அப்படின்னு சொல்லக்கூடாதும்மா. என்னோட பயத்தை புரிஞ்சுக்குவேன்னு நம்பறேன். ஏதாவது தப்பான பேச்சு என் காதில் விழுந்தால் கூட உன் படிப்பை நிறுத்திடுவேன். புரிஞ்சதா?'' கண்டிப்பாய் கூறினாள்.

''அம்மா புரியுதும்மா. அநாவசியமா ஏன் பயந்து நடுங்கறே? நான் என்ன சின்ன பிள்ளையா? நல்லது எது? கெட்டது எது?ன்னு தெரியாமல் இருக்க'' அம்மாவுக்கு நம்பிக்கை வரும்படி தன்மையாய் கூறினாள்.

''சரிடி. பஸ்ஸுக்கு காசு இருக்கா?

''பஸ்ஸையா? வேண்டாம்மா. கூட்டம் ரொம்பி வழியும். நான் நடந்தே போறேன். அப்புறமாய் உனக்கு முடியும்போது சைக்கிள் மட்டும் வாங்கி தரியா?'' மகள் கெஞ்ச.

''வாங்கிதரேன் திவ்யா. நீ படிப்பில் மட்டும் கவனம் செலுத்தினால் பேங்கில இருக்க பணத்தைக்கூட எடுத்து உனக்கு செலவு பண்ணுவேம்மா'' அம்மா உருகினாள் பாசத்தில்.

''அதெல்லாம் வேணாம். அந்த பணம் முழுக்க உனக்கு தான். ரெண்டு மூன்று மாசம் உன்னோட காலை மாலை வேலை செய்யறேன். அதிகப்படியான சம்பளம் வந்தால் வாங்கிக் கொடும்மா. நான் வரேம்மா...''

புத்தகத்தை எடுத்துக் கொண்டு திவ்யா கிளம்ப மகளின் அழகைக் கண்டு அந்த தாய் வயிற்றில் பயப்புயல் கிளம்பியது.

கல்லூரி.

மிகப்பிரமாண்டமாய் இருந்தது. அழகிய தோட்ட வேலைப்பாடு கண்களுக்கு குளிர்ச்சியைத் தந்தது. அபூர்வமான மலர்ச்செடிகள் பாதையின் இருபுறமும் வெள்ளையாய் சிரித்து வரவேற்பது போல தலையாட்டியது.

''ஏய் திவ்யா காலேஜ்ல பசங்களெல்லாம் மோசமா இருப்பாங்க. புதியவர்களை பழைய மாணவியோ, மாணவனோ கண்டால் கிண்டல் பண்ணாம விடமாட்டாங்க. நீயோ பயந்தாங்கொள்ளி. இப்படி பயப்பட்டால் அதிகமா கிண்டலும், கேலியும் செய்து சித்ரவதை செய்வாங்க. பயமே வந்தாலும் பயப்படாதவள் போல நிமிர்ந்து நின்று எட்டிக்கு போட்டியாய் பேசினால் அப்புறம் உன்னிடம் வாலாட்டவே மாட்டாங்க. நிச்சயமாடி திவ்யா'' என்று பள்ளித்தோழி கிருபா கூறியது நினைவில் வந்தது.



திவ்யா குனிந்த தலை நிமிராமல் பயத்துடனே சென்றாள். ஏராளமான மாணவர்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இருந்தனர்.

வழி நடையில் உள்ள பெஞ்சில் அசோக்குமார், தினேஷ், ராம், கிஷோர் நால்வரும் அமர்ந்திருந்தனர். முதுகலை இரண்டாம் ஆண்டு படிக்கும் சீனியர் மாணவர்கள்.

அசோக் இவர்களுக்கெல்லாம் தலைவன். தலை கொள்ளாத அடர்ந்த கேசத்துடன் வசீகரிக்கும் பளீர் பற்களுடன் தூண்டில் போடும் கண்களுடன் அவனுக்கு அழகுக்கு அழகு சேர்க்கும் அடர்ந்த மீசையுடன் சிவந்த உதடுகளோடு நல்ல நிறத்தில் இருந்தான். விலை உயர்ந்த ஆடை; கழுத்தில், கையில் கோல்டு செயின் என்று சகல அலங்காரத்துடனும் கட்டான உடலோடும் உயரமாய் இருந்தான்.

எல்லோரும் இரண்டு வருடம் ஊரைச்சுற்றிவிட்டு பின்னர் படிக்கும் ஆசையில் முதுகலை சேர்ந்த மாணவர்கள். ஆனால் ராம் இவர்களை விட சின்னவன். அசோக்கை பிடித்துப் போனதால் அவர்களோடு நட்பாய் இருக்கிறான்.

அசோக்கோ இரண்டு வருடங்கள் தனது அண்ணனோடு பிசினஸ்ஸைப் பார்த்துவிட்டு இவர்களின் வற்புறுத்தாதலால் படிக்கிறான். படிப்பு ஒருபுறமும், பிசினஸ்சில் அண்ணனுக்கு உதவியும் வரும் அசோக் மிகவும் நல்லவன்.

கல்லூரி மாணவிகளுக்கு அவனென்றால் ஒரு கவர்ச்சி மோகம். மேலே விழாத குறையாய் பேச வருவார்கள். ஆனால் அவன் இதுவரை யாரிடமும் மாட்டவில்லை. சும்மா பொழுதுபோக்குக்கு சைட் அடிப்பான். வம்படியாய் அவனோடு சினிமாவுக்கு வருவேன் என்று அடம் பிடிக்கும் பெண்களை ஏற்றிக் கொண்டு போய் படம் பார்க்கும் போது அவர்கள் செய்யும் சில்மிஷங்களை சகிக்க முடியாமல் பாதியிலேயே விட்டுவிட்டு வந்துவிடுவான்.

அதிலும் அசோக் ஒரு இடத்தில் இருந்தால் அவனைக்கடக்கும் எந்த பெண்களுமே திரும்பி பாராமல் பெருமூச்சு விடாமல் 'ஹாய்' சொல்லாமல் செல்ல மாட்டார்கள். ஏக்கத்தோடு பார்வையாலேயே தூண்டில் போட்டுவிட்டுத்தான் கடந்து போவார்கள்.

திவ்யப்ரியா அவனைப் பாராமல் அலட்சியப்படுத்தி போனது அவனுக்கும், அவர்களுக்கும் ஈகோவில் அடியாகப்பட்டது.

''ஏய் அசோக் யார் அவள்? மாப்பிள்ளை நீ இருப்பது கண்ணிலேயே படவில்லை? அல்லது நம்மையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு போறாளா?'' என்றான் தினேஷ்.

''ஏய் மச்சான். உனக்கும், உன் அழகுக்கும் அவமானமில்லையா?'' இது கிஷோர்.

''டேய் அசோக். புதுசு போல இருக்கு.

ரொம்ப அலட்டுது. விடக்கூடாதுடா. அதை கூப்பிட்டு ஒரு வழி பண்ணலேன்னால் அவள் நம்மை மதிக்கமாட்டா.

அசோக்! நீ கூப்பிட்டு மிரட்டற மிரட்டல்ல அப்படியே பயந்து நடுங்கிடணும் மச்சான். செய்டா'' கிஷோர் உசுப்பேத்தினான்.

''வேணாம்டா. காலேஜுக்கு புதுசு. நம்ம மாவட்டத்துக்கே முதல்

மதிப்பெண் பெற்ற பெண். பேப்பர்ல இவள் படம் பார்க்கலையா? வேண்டாம் நல்ல பெண்ணாய் தெரிகிறாள். அநாவசிய வம்பு வேண்டாமே'' என்று ராம் கெஞ்சினான்.

''மாவட்டத்துக்கே முதல்ல வந்த திமிர் அவள் உடம்புல தெரியுது மச்சி. விட்டால் இந்த காலேஜ் குயின் ஆனாலும் சந்தேகமில்லை. நீ டம்மியாயிடுவே. மாப்ள நீ சிங்கம்டா. விடலாமா ஒரு அழகிய மானை மடக்குடா நாம யார்ன்னு காட்டணும்'' கிஷோர் இன்னும் சூடேற்ற.

''என்னடா மாப்பிள்ளை யோசனை?''

''புதுசு போல இருக்கு. இன்னைக்கு விட்டுடலாம். நாளைக்கு கவனிச்சிடலாம். என்ன கிஷோர்?'' என்றான் அசோக்.

''உனக்கு எல்லாம் மீசை ஒரு கேடா? எதுக்குடா மாப்பிள்ளை? நாளைக்கே ஷேவிங் பண்ணிட்டு பொட்டு வச்சிட்டு வா. பயந்தாங்கொள்ளி'' கிஷோர் அவனுக்கு சூடு ... அப்பவாச்சும் துள்ளி எழ மாட்டானா?

''யாரைடா பயந்தாங்கொள்ளிங்கறே?'' அசோக் முறைத்தான்.

''நீ பயந்தாங் கொள்ளி இல்லையா? வீரனா அப்படின்னா உன் ஆம்பிள்ளைத்தனத்தை அவள்கிட்ட காட்டி பயப்பட வை. கேவலம் பசங்கெல்லாம் தரையில விழுந்து கும்பிட்டுட்டு போக... ஒரு பொண் உன்னை கேவலப்படுத்தறதா?'' தினேஷ் மேலும் வெறியேற்ற அசோக் திவ்யாவை அழைத்தான்.

''ஏய்...'' வேகமாய் கத்தினான். வேறு ஒருத்தி திரும்பி சிரித்தபடி ''என்னையா?'' எனக்கேட்க ''ச்சைப் போடி'' என்று விரட்டினான்.

''ஏய் கூப்பிடறது காதுல விழலை?'' திவ்யப்ரியா பயத்துடன் நின்று திரும்பிப்பார்த்தாள்.

''ஏய் உன்னைத்தான் நீதான். வா இங்கே'' என்று கையசைத்து அழைக்க அருகில் பயப்படாதவள் போல நடித்தாலும் உள்ளூர பயந்து கொண்டு வந்து நின்றாள்.

''செவிடா நீ? ஆமா இங்கே ஒரு பிரின்ஸ் உட்கார்ந்து இருப்பது கண்ணில் படலையா? மரியாதையா ஒரு வணக்கம் வச்சிட்டு போகணும்னு அறிவில்லையா?'' என்று அசோக் அதட்ட...

''ஏய் என் பேரில்லையே'' என்றாள் நிமிர்வாய்.

''ஏய் இங்கே வாடி...'' என்றான் அலட்சியமாய்.

''எதுக்குடா கூப்பிட்டே?'' என்றாள் திவ்யப்ரியா.

''வாடா போடான்னா பல்லை உடைப்பேன். திமிராடி?'' கோபம் பொத்துக்கொண்டுவர சீறினான்.

''ரொம்ப திமிர் போலடா மச்சி. என்னடி துள்றே?'' என்று அசோக் எகிற...

''ஆமாம் நீங்க தினமும் பிரியாணி செய்து போட்டதுல திமிரும், கொழுப்பும் வந்துடிச்சு'' திவ்யப்ரியா பதிலடி கொடுக்க அசோக்கே கொஞ்சம் அசந்து போனான்.

''வாய் ரொம்ப நீளம் போல''

''ஆமாம் உங்களுடையது போலவே''

''சீனியர்கிட்ட எப்படி நடந்துகிறணும்னு தெரியாதா?''



''அதெல்லாம் எனக்கு யாரும் கத்துக்கொடுக்கலை'' அலட்சியமாய் சொன்னாள்.

''மரியாதைன்னா என்னன்னே தெரியாத ஜென்மம் போல'' அசோக் எரிமலையாய் கேட்க.

''அது கடையில கிடைக்குமா சார்? கிலோ என்ன விலைக்கு வாங்கினால் மரியாதையைப் பற்றி தெரிஞ்சுக்கலாம்? ம்?'' என்று அப்பாவியாய் கேட்க.

''ஏய்... ஜோக்கடிச்சது போதும். விஷயத்துக்கு வரேன். நாங்க இருந்ததே கண்ணில் படலையா?''

''அக்கம் பக்கம் பார்க்கவெல்லாம் என் அம்மா கத்துத்தரல. நேரா போகணும். படிக்கணும். திரும்பிடணும்னு சொல்லித்தான் அனுப்பி இருக்கா?''

''சரியான மண்டைக்கனம் பிடிச்சதா இருக்குதே'' என்று தினேஷ் சொல்ல

''என்ன டிஸ்ட்ரிக் பஸ்ட் வந்த திமிரா? காலேஜ்ல மச்சான் முடிசூடா மன்னன். மச்சானை பகைச்சிட்டே இந்த காலேஜ்லயே படிக்க முடியாது. தெரியுமா?'' கிஷோர் சொல்ல.

''அப்படியா? சொன்னாத்தானே தெரியும்'' அலட்சியமாய் பதில் வந்தது.

''இப்போ தெரிஞ்சிட்டே இல்லையா? மச்சானுக்கு ஒரு வணக்கம் போடு'' இது தினேஷ்.

''வணக்கம் தலைவா'' என்று எட்டுப்பட்டி பண்ணையார் ஸ்டைலாய் சொல்லி தோள்பக்கம் கைகளை உயர்த்தி கைகூப்பிட்டாள். ''என்ன ராகிங்கா? இந்த புக்கை பிடிங்க'' என்று அசோக்கின் மடியில் வைத்தாள்.

''என்ன தலைவா செய்யணும்? நின்ன இடத்திலே சைக்கிள் ஓட்டணுமா? கார் டிரைவிங் பண்ணணுமா? தவளை போல கத்தவா? நாய் போல குரைக்கணுமா? கழுதைப்போல கத்தணுமா? என்ன செய்யணும்? சொன்னால் தானே தெரியும்.

''ஏய் ஏய்'' அசோக் சீற...

''திரும்பவும் சொல்றேன். ஏய் என் பேரில்லே! என்ன நீச்சலடிக்கணுமா? தம் அடிச்சி காட்டணுமா? தண்ணி அடிச்சி காட்டணுமா? பாட்டா, டான்ஸ் ஆடவா? என்ன சார் செய்யணும்?



நீ ஏன் தொடர்ந்து ஒரே கடையில் திருடினாய்?

நான் அந்தக்கடைக்கு ரெகுலர் கஸ்டமர்.

-கிருஷ்ணன், கோயம்புத்தூர்.

நான் ரெடி. சொல்லுங்க?

''சரியான பொம்பளை ரவுடி அசோக்'' கிஷோர் கூற நீங்களெல்லாம்'' என்று திவ்யா கூற வாக்கு வாதம் முற்றி அசோக் எரிமலையானான்.

''யாருடா இந்த அரை லூசை கல்லூரியில விட்டது?'' கத்தினான்.

''ஏன் உங்களைப்போல முழு லூசை விடும்போது என்னை விடமாட்டாங்களா?'' திரும்பி திவ்யா கேட்கவும்.

''ச்சைப் போடி'' கையை நீட்டி கோபத்தில் சொன்னான்.

''ச்சைப்போடா'' அசோக் கையிலிருந்த புத்தகத்தை பிடுங்கிக் கொண்டு அழகாய் இடையசைய மயில்தோகையாய் ஜடையசைய நடந்தாள் திவ்யப்ரியா.

அசோக்குக்கு பத்திக் கொண்டு வந்தது. இது போல யாருமே எதிர்த்து வாயாடியதில்லை. இவனைக் கண்டாலே தண்ணீரைக் கண்ட கொள்ளியாய் அணைத்துவிடுவார்கள். அப்படிப்பட்ட ஒருவன் முகத்தில் இன்று ஒருத்தி கரிபூசி விட்டாள்.

எத்தனை பெண்கள் இவன் கடைக்கண் பார்வைக்கே தவமிருக்க காதல் கடிதங்கள் நீட்டி பதிலுக்கு ஏங்கி தவித்திருக்க அப்படி இருப்பவனை ஒருத்தி அவமானப்படுத்திவிட்டு செல்வதா?

''மச்சான் பேர் என்ன?'' ராமைப் பார்த்து அசோக் கேட்க

''எங்க ஏரியாதான். பேர் மறந்துடிச்சி. வேணாமே அசோக்'' என்று ராம் சொல்ல.

''மச்சான் இவன் பேச்சை கேட்காதே. நாங்கள் சொல்வதைக் கேள். சாதுவான குதிரை மேல பயணம் செய்வதை விட, முரட்டு குதிரையை அடக்கி பயணம் செய்வதில் தான்டா 'தில்' இருக்கு. வீரன்டா நீ. உன் அழகில் மயங்கி உன் மேல் விழுந்து புரள வருபவளை விட வீராப்பா முறைத்து ஒதுக்கறாளே. இவளை அடக்கி நீ யாருன்னு காட்டணும்''

''தானா கையில் விழும் பழத்தை விட உச்சாங்கிளையில் இருக்கும் பழத்துக்காக ஏறி பறித்து உண்பதில் தான் சுகமே. இவள் எட்டாத உச்சியில் இருக்கிற பழம். ஏறி கிளை வளைச்சி பறிக்கணும்டா. அவள் உன் வீரத்துக்கே இல்ல. சவால் விட்டுட்டு போகிறாள். விடலாமா அசோக்? நீ ஆம்பிளைங்கிறதை அவகிட்ட காட்ட வேண்டாமா?''

''குட்டி ஜோரா இருக்கா! என்ன கலர்! எத்தனை நீளம் அவள் முடி. என்ன அழகு. இதுவரைக்கும் நீ இதுபோல பார்த்திருக்கியா?

''இவளை விடக்கூடாது அசோக். இவள் உன்னையே சுத்தி சுத்தி வரணும். உன்னையே நினைச்சி பைத்தியமா அலையணும். அசோக் அசோக்குன்னு உருகணும். உயிரா இருக்கணும். உங்கிட்ட மயங்கணும். உனக்காக தவமிருக்கணும். உன்னால் முடியாததுன்னு எதுடா இருக்கு? மாப்ளே நீ சிங்கம்டா'' ஆள் ஆளுக்கு அவனை உரமேற்றினார்கள்.

''செய்யறேன்டா. செய்து காட்டறேன். அப்போ தெரியும். இந்த அசோக் பத்தி'' சிரித்தான் பெருமிதத்தில்.

அவனே பின்னர் அவள் மேல் பைத்தியமாய் அவள் பின்னாடி அலையப்போவது தெரியாமல்.



# 3

மறுநாள் காலையில் அந்த குல்மொஹர் மரத்திற்கு கீழே அசோக்கும், நண்பர்களும் கூடிவிட்டனர்.

''என்னடா அவள் பெயர் தெரியுமா?'' அசோக் கேட்டான். விசாரிச்சீங்களா?''

''ம். பேர் திவ்யப்ரியா''

''பி.எஸ்ஸில என்ன மேஜர் சப்ஜெட்?''

''நம்ம மேத்ஸ்தான்டா! படிப்புல சூரப்புலி. ரொம்ப புத்திசாலியான பெண். அநாவசியமான பேச்சில்லே. பெண்களிட்டகூட கேட்ட கேள்விகளுக்கு மட்டுமே பதில் சொல்லிட்டு அவள் வேலையை பார்க்கிறாள். அப்படிப்பட்டவள் நேத்து ஏன் அந்த அளவு வாயாடினான்னு தெரியலையே'' ராம் அவளை அறிந்தவனாய் கூறினான்.

திவ்யப்ரியா கூட மனம் வருந்தினாள். ஆண்களிடம் அதிகம் பேசி அறியாதவள் ஏன் அந்த இளைஞர்களிடம் மட்டும் அவ்வாறு நெருக்கமாய் சவாலுக்கு சவாலாய் பேசினோம் என்று இரவெல்லாம் தன்னிடமே நொந்து கொண்டாள்.

அந்த இளைஞனை கோபப்படுத்திவிட்டோம். என்னமாய் கோபத்தாலும், அவமானத்தாலும் அவன் முகம் சிவந்து கறுத்தது. பார்க்க நல்லவனாய் தெரிகிறான். கூடாத சவகாசத்தால் விளையாட்டுப்புத்தியும், வேடிக்கையும் வந்து ஒட்டிக் கொண்டு தான்.

நேற்று அவன் தன்னை அழைத்து ரேகிங் பண்ணியிருக்கிறான். நாமும் அதை சீரியஸாய் எடுத்துக் கொண்டு கிருபா சொன்னாள் என்றில்லாமல் கிறுக்குத்தனமாய் உளறிவிட்டோம். அவன் அதை சீரியஸாய் எடுத்துக் கொண்டு தன் படிப்பிற்கு இடைஞ்சல் விளைவித்து விட்டால் ஓ... நோ... இது கூடாது. ஆபத்து. அவனைப்பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும். அவர்கள் அங்கே இருப்பார்களா?

அந்த இடம் வந்த போது... கடைக்கண்ணால் எடைபோட்டுப் பார்க்க... அவர்கள் இன்றும் அவ்விடத்தில் அமர்ந்து இருந்தனர். அப்படியே அசோக்கைப் பார்த்து பயந்து நடுங்கி விட்டாள். அவன் அவளை கோபத்துடன்.. குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருக்க... மன்னிப்பு கேட்டு மீண்டும் மாட்டிக் கொள்ள வேண்டாம்.

இனி அவர்கள் பக்கமே திரும்பி விடக் கூடாது. இவர்களோடு இனி எந்த பேச்சும் வைத்துக் கொள்ளக் கூடாது. 'கடவுளே காப்பாற்று! முருகா காப்பாற்று! காக்க காக்க கனகவேல் காக்க... நோக்க நோக்க நொடியில் நோக்க... தாக்க தாக்கத் தடையறத் தாக்க... பார்க்க பார்க்க பாவம் பொடிபட' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே... குனிந்த தலை நிமிராமல் நடக்க...

''திவ்யபிரியா...'' என்று கோபமாய் அசோக் அழைக்கும் குரல் கேட்டது. ''ஏய் திவ்யபிரியா...''

அவள் வேகமாய் ஓடினாள்.

''பிரியா... ஏய் பிரியா...'' என அழைக்க ஆணி அடித்தது போல நின்றாள். எல்லோரும் 'திவ்யா...' என அவளின் பெயரில் முன்பாதியை அழைக்க அவன் வித்தியாசமாய் 'பிரியா...' என்று அழைக்கவும் அவள் திகைத்து நின்று விட்டாள்.

இந்த சந்தர்ப்பத்தை புத்திசாலித்தனமாய் பயன்படுத்தி... மன்னிப்பு கேட்டு விட வேண்டும் என அருகில் நடுங்கிக் கொண்டே சென்றாள்.

அவளின் மிரண்ட பார்வையினைப் பார்த்து... திருப்தியாய் புன்னகைத்தான் அசோக்.

திவ்யபிரியா புத்தகத்தை கீழே வைத்து விட்டு கையெடுத்துக் கும்பிட்டாள்.

''ஸாரி சார். என்னை மன்னிச்சிடுங்க சார்! நேற்று வாய் துடுக்காய் பேசியதற்கு என்னை மன்னிக்கணும். இனி இது போல் ஒரு நாளும் நடந்து கொள்ள மாட்டேன். நேற்றைய தப்புக்கு மனப்பூர்வமாய் வருந்துகிறேன். நான் அது போல பேசியிருக்கவே கூடாது. பிழையைப் பொறுத்து... என்னை நீங்கள் மன்னித்து அனுப்பணும் ப்ளீஸ்....''

நேற்று புயலாய் இருந்தவள்... இன்று தென்றலாய் மாறியதன் காரணம் புரியாமல் விழித்தான் அசோக்.

''நான் படிக்க மட்டுமே வந்தேன் சார். இது போல வம்பு செய்ய வரவில்லை. தவறுதலாய் அவ்வாறு நடந்துக் கொண்டேன் ப்ளீஸ் சார்....'' கண்களில் நீருற்றாய்.... கண்ணீர் பெருக்கெடுத்து ஓட.... கைக்கூப்பி கெஞ்சியது.... அசோக்கை அசைத்து விட்டது. மனம் இளகிப் போனான்.

''ஏய் பிரியா... என்ன இது அழுதுட்டு? முதல்ல தேம்புவதை நிறுத்தி கண்ணைத் துடைத்துக் கொள். சின்ன பிள்ளையா நீ? போ... போ... மன்னிச்சுட்டேன்! ஆனால், இனி ஐயாகிட்ட வாலாட்ட கூடாது என்ன?'' வெற்றி பெற்ற திருப்தியில் கூறினான்.

''சரிங்க சார். தேங்க்யூ சார்'' அவன் விட்டால் போதும் என்று புத்தகத்தை அள்ளிக் கொண்டு... கண்களால் மீண்டும் மன்னிப்பு கேட்டு விட்டு ஓட இருந்தவளை, திரும்பவும் அழைத்தான்.

''பிரியா... நில்! இவ்வளவு நல்லப் பெண்ணாய் இருக்கிறாய்! ஏன் நேற்று அப்படி நடந்து கொண்டாய்? ம்?''

''என் பிரண்ட் கிருபா தான் சார் காலேஜ்ல கிண்டல் பண்ணும் போது பயந்தால், விரட்டு விரட்டென்று விரட்டி விடுவார்கள். பயப்படாமல் திரும்ப திரும்ப வாயாடினால்.... உன்னிடம் மீண்டும் வம்பு வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று சொல்லி கொடுத்தாள். அதை மனதில் வைத்துக் கொண்டு தான்... உங்களிடம் கடுமையாய் வாயாடி விட்டேன்.

நானாக இப்படி ஒரு தப்பை செய்யல சார். அவளால்... அவளால் தான் அப்படி நடந்துக் கொண்டேன்.''

''பொய்யில்லையே!''

''உங்க மேல சத்தியமா சார்!'' அப்பாவியாய் கூற... ''சரி சரி போ!'' என்று அனுப்ப... ஓட்டமாய் வலைக்கு தப்பிய மானாய் ஓடி மறைந்தாள்.

''ஏய் அசோக்.... அவள் கண்ணீரைப் பார்த்து கரைஞ்சுட்டியா?''



''குட்டி பொய் சொல்றாடா!''

''புலி பாய்வதற்கு பதுங்குதுடா!''

''நம்பாதேடா மடையா!''

தினேஷ் ம், கிஷோரும் மாற்றி மாற்றி அவன் மனதை கலைக்க முயன்றனர். ராம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''பின்னே நேற்று அந்த அளவு பேசியவள், இன்று கண்ணீர் வடித்து கெஞ்சினால் என்ன அர்த்தம்?''

''உன்னை இளிச்சவாயன்னு நினைச்சுட்டா! கவுந்துடாதேடா மச்சி!''

''சிங்கத்துக்கு தண்ணீர் காட்டி... புல்லைப் போட்டு... கூண்டுல அடைக்கப் பார்க்கிறாள்!''

''சிரிக்கும் பெண்ணைக் கூட இந்த காலத்தில் நம்பலாம்! ஆனால் கண்ணீர் விடும் பெண்களை நம்பக் கூடாது அசோக்!

''கண்ணீர் விட்டு டிராமா பண்றா... நம்பாதேடா! கொஞ்சம் அவள் மேல் சந்தேகம் இருக்கட்டும்!''

பால் மனதில் விஷம் சேர்க்க பார்த்தனர்.

''போங்கடா... நீங்களும் உங்க பேச்சும்! அசோக் இவனுங்க எதாவது உளறினால் நம்பாதே! எதாவது சொல்லி ஏத்தி விட்டுட்டு... வேடிக்கைப் பார்க்க காத்திருக்கானுங்க. பாவம் அவள்! இவனுங்க சொல்வதை வைத்து அவள் கண்ணீரை சந்தேகப்படாதே! அவள் மன்னிப்பு கேட்டதும் கண்ணீர் விட்டு வருந்தியதும் நிஜம்! நீயும் மனுசன் தானே பொய் எது? நிஜம் எது?ன்னு தெரியாதா! இடியட்டுங்க சொல்றாங்கன்னு நம்பாதே அசோக்!'' பொறுத்து பொறுத்துப் பார்த்து ராம் ஆவேசமாய் கூறினான்.



''போஸ்ட் மேனா இருந்தவரை ஓட்டல் சர்வர் வேலைக்கு சேர்த்தது தப்பா போச்சுனு எதை வைச்சு சொல்றீங்க?''

''சார் ரோஸ்ட்னு விசிறி அடிச்சுட்டு போறாரே''.

-க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

''போச்சுடா! வேதாந்தி வேதம் கற்பிக்க வந்துட்டார். டேய் சாமியாரே! 'சும்மா இருக்க மாட்டாயா? நீயெல்லாம் ஏன்டா எங்க தோஸ்த் ஆனே! பேசாமல் காவியை உடுத்திட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தா கொஞ்சம் சில்லறையையாவது தேத்தலாம்! அதை விட்டுட்டு பெரிசா புத்தி சொல்ல வந்துட்டான்.'' என்று கிஷோர் அலுத்துக் கொள்ள.

''ஏய் அசோக் நீ இது போல குடும்ப பாங்கான பிகரைப் பார்த்திருக்கியா? மேக்கப் இல்லே! பவுடர் இல்லாமலே எவ்வளவு இயற்கையா பளபளன்னு அவள் முகம் மினுக்குது. ஒரு வண்டி மேக்கப்பும் ஒரு டப்பா லிப்ஸ்டிக்கும் பூசிட்டு வரும் பெண்களில்... இந்த

திவ்யபிரியா மட்டும் வித்தியாசமாய் தெரிகிறாள்! ஜீன்சும், கொசு வலையில் தைத்த பனியனுமாய் வர்ற பெண்களில்... திவ்யா மட்டும் வித்தியாசமாய் சேலையில் இன்று சூப்பர் இல்லையா?'' என்று தினேஷ் கூற ''கூடுதலாய் அந்த காதோரம் சிரிக்கும் ரோஜா கூட அவளுக்கு அழகு தான்டா.'' இவ்வளவு நேரம் கம்மா இருந்த அசோக் கூறி... மந்தகாசமாய் புன்னகைக்க....

''அப்போ அழகு தானே திவ்யபிரியா?''

''ஆமாம்டா. தேவதைக் கணக்கா இருக்கா!''

''அந்த அழகு தேவதையை உனக்கு சொந்தமாக்கிக்கணும் தானே?''

''ம்ம்....''

''அவளைக் கண்டால் மயக்கமா இருக்கா?''

''நேற்று இல்லை. பட் இன்றைக்கு மிரண்ட பார்வையோடு... கைக்கூப்பி கண்ணீர் விட்டப்போ... கண்ணைத் துடைத்து, என் நெஞ்சில் சாய்ச்சிக்க துடிச்சது!''

''அப்போ நிச்சயமா மயங்கிட்டே தானே அவளிடம்!''

''யெஸ்டா...''

''மயங்கிட்டா போதுமா? வலைவீச வேண்டாமா அந்த பட்டாம்பூச்சிக்கு! வேற எவனாவது தட்டிட்டு போறதுக்கு முன்னாடி... அவள் உனக்கு வேணுமில்லே?''

''ஆமாம்டா.''

''நேற்று அவளை வெறுத்தாய்! இன்று அவளை விரும்புகிறாய்! விருப்புக்கும், வெறுப்புக்கும் இடைவெளி அதிகமில்லைன்னு சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! அவள் உன்னை சதா இம்சித்தால்... உனக்கு அவளைப் பிடிச்சி போச்சுன்னு அர்த்தம். சதா அவள் நினைவு நேரிலும்... கனவிலும் வந்து தொல்லைக் கொடுத்தால்... கன்பார்ம்மா காதல் தான்டா.''

''அசோக்.... அசோக்.... இவனுங்க காதல்... கத்திரிகாய்ன்னு சொல்லி வெறுப்பேத்தி... அவள் பின்னாடி நாயா அலைய வச்சுடுவானுங்க! இவனுங்க பேச்சை கேட்காதே! வேண்டாம் உன் ஜாலியான வாழ்க்கையை கெடுத்துக்காதே! அவள் அப்படிப்பட்ட பெண்ணும் அல்ல!''

''என்னடா தெரிந்தவன் போலப் பேசுகிறாய்?''

''எங்க ஏரியா பொண்ணு! அவளுக்கு ஒரு கெட்டதோ... மான அவமானமோ நடந்தா பார்த்துட்டு இருக்க மாட்டான் இந்த ராம். பொல்லாதவனாயிடுவேன். ஜாக்கிரதை!''

''அட மச்சிக்கு ஏன் இப்படி கோபம் வருது. அந்த பொண்ணுக்கு புதுசா பரிஞ்சிட்டு வரானேன்னு பார்த்தா... கதை அப்படி போவுதா? உங்க ஏரியா பொண்ணு என்பதால் கண்ண பரமாத்மாவா மாறி காப்பாற்றப் பார்க்கறியா? போடா... போய் வேலையைப் பார்!'' என்று தினேஷ் எகிற...

''வேணாம்... அசோக்கை கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கிடாதீங்கடா!''

''ஏய் ராம் அவர்கள் கெடுத்தால் நான் ஒன்றும் கெட்டு விட மாட்டேன்! இதுவரைக்கும் பொண்ணுங்களைப் பார்த்து சைட்



அடிச்சிருக்கேன்! வலிய வந்தால் தியேட்டர், பார்க், பீச்ன்னு கூப்பிட்டு சுத்தியிருக்கேன்.

அதுங்ககிட்ட வெல்லாம் வராத ஒரு உணர்ச்சி... இவளைப் பார்த்தவுடன் வருது! அவள் மன்னிப்பு கேட்டு மிரள மிரள பார்த்தாளே ஒரு பார்வை அப்படியே கம் இல்லாமல் இதயத்துல ஒட்டிகிச்சிடா ராம்.'' அசோக் உணர்ச்சி பொங்க கூறவும்

ராமின் மனதில் கவலை ரேகை இருளாய் சூழ்ந்து கண் சிமிட்டியது!

## 4

**வா**னம்... குழந்தையைக் காணாமல் தவித்த தாயாய் கலங்கி பின்னர், தன் குழந்தையைக் கண்ட மகிழ்ச்சியில் இரு கை நீட்டி, அள்ளியெடுத்து, உச்சி முகர்ந்து, அணைத்து, ஆனந்தக் கூத்தாடுவது போல சூரியக் குழந்தையை வரவேற்று, அணைத்து ஆனந்தக் கூத்தாடிய மாலை நேரம்!

அசோக்கை தனியே அழைத்துப் போனான் ராம்.

''அசோக் நான் சொல்வதை கேட்பாயா?''

''சொல்லுடா! என்னன்னு தெரியாமல் எப்படி கேட்பது? மடையா என்ன தயக்கம்? நீ என் நண்பன், நீ சொன்னால், எல்லாம் என் நன்மைக்கு தான் சொல்லுவாய்! ம்... கமான்யா...'' என்று அசோக் உற்சாகமாய் கேட்கவும்...

''திவ்யபிரியா பற்றித்தான்!''

''அட வெரி இன்ட்ரஸ்டிங்! எனக்கு புடிச்சதை பற்றி சொல்லும் போது... கேட்காமல் இருப்பேனா?'' என்று ஆர்வமுடன் கேட்டான் அசோக்.

''திவ்யபிரியாவுக்கு அப்பா இல்லே! அம்மா மட்டும் தான்!''

''அப்படியா? ஐயோ...!''

''அம்மா படிக்க வேண்டாம்ன்னு சொல்ல கெஞ்சி பர்மிஷன் வாங்கி படிக்கிறாள்!

''அடப்பாவமே! இது தெரிந்து இருந்தால் அந்த முதல் நாள் சந்திப்பை பகையை தவிர்த்து இருக்கலாமே!''

''பகையா நினைத்து இருந்தால் மன்னிப்பு கேட்டிருப்பாளா?

''ஆமாம் ராம்!'' தலையாட்டினான் அசோக்.

''அம்மா வேலை பார்த்து வரும் வருமானம்! பத்தாததுக்கு ஏதோ பேங்கில கொஞ்சம் பணமிருக்காம். அந்த வட்டியையும் வச்சி.. இந்த சிட்டியில நல்லா வாழ முடியுமா? பாவம்டா தாயும், பொண்ணும் ஏதோ வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.''

''அந்த பிரியா இவ்வளவு கஷ்டப்படறாளா? அது தெரியாமல் போச்சேடா! இப்படி ஒரு வாழ்க்கையிலே மாவட்டத்தில பர்ஸ்டா வந்து சாதிச்சி இருக்காளே! இதையெல்லாம் பார்க்கும் போது அவள் மேல் பக்தியும், மரியாதையும் கூடுதே ராம்!'' அசோக்

உணர்ச்சிவசப்பட்டு கூறினான்.

''போதாக் குறைக்கு குடிகார மாமன் தொல்லை வேறு! சொந்தம்னு சொல்லிக்க அவன் ஒருவன் மட்டுமேன்னு... வெட்டி விடவும் முடியாமல்... ஒட்டிக்கவும் பிடிக்காமல்... ஒப்புக்காய் அவனோடு உறவாடுகிறார்கள்.

பாவம்டா. உன் விளையாட்டுக்கெல்லாம்... அவள் வேணாம்டா! விட்டுடுடா! கிஷோர், தினேஷ் பேச்சைக் கேட்டுட்டு.... ஒரு பெண்ணோட வாழ்க்கையை கெடுக்க வேண்டாம். பிளீஸ்டா... என் தங்கை போலடா! எங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டுப்பெண்... திவ்யாவைப்பற்றி கதை கதையாய் கூற... கண்ணீரே வந்துடிச்சிடா. வேண்டாம் அசோக்! அவர்கள் உன்னை உசுப்பேற்றி விடுகிறார்கள்.



''சாமி கோயில் உண்டியலை உடைத்து யாரோ திருடிட்டாங்க சாமி

''அடக் கடவுளே இப்ப வெளியில் இருந்தும் திருட ஆரம்பித்து விட்டார்களா?''.

-எம்.அசோக்ராஜா, திருச்சி.

இதுவரை எதிலுமே சிக்காமல் உன் போக்குல சந்தோசமாய் இருந்தாய்! அப்படியே எப்பொழுதும் இருந்தால் உனக்கும் நல்லது. திவ்யாவுக்கும் நல்லது!'' நீண்ட நேரம் பேசி முடித்தான்.

''தூங்கினால் கனவுல, முழிச்சிட்டு இருந்தால் எதிர்லன்னு... அவள் கண்ணும், முகமும் என்னை இம்சிக்குதுடா ராம்.'' என்று அசோக் விவரிக்க...

''அப்பா இல்லாத பெண்! வேண்டாம் அசோக்! பாவம்!'' என்று ராம் கெஞ்சினான்.

''அப்பா இல்லாத பொண்ணுன்னா காதலிக்க கூடாதா என்ன?''

''காதல்னு நீயா தப்பர்த்தம் செய்துக்கிட்டிருக்கேடா.''

''நிஜமா ராம்! அவளை எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு!''

''உன் மனசை அந்த ராஸ்கல்ங்க கெடுத்திருக்கானுங்க!''

''நான் என்ன விபரம் தெரியாதவனா? அவர்கள் என்னை கெடுக்க!''

''வேண்டாமே! படிக்க வந்த ஒரு ஏழைப்பெண்ணின் மனசை காதல், கூதல்னு கலைக்க வேண்டாமே!'' அசோக்கிடம் கெஞ்சினான் ராம்.

''சரிடா. அவள் திசைப்பக்கமே திரும்ப மாட்டேன்! அவளுக்கு தொல்லை கொடுக்க மாட்டேன்! அவளை எவனாவது தொல்லை பண்ணினால்... நான் தான் அவனுக்கு எமன்! போதுமா...?''



''நிஜம் தானா? உன்னை நம்பலாமா?''

''அசோக் நாக்கு சுத்தம்! வாக்கு தவற மாட்டேன். புரியுதா?''

சிரியசாய் அசோக் கூற... அவன் வார்த்தையை நம்பி சந்தோசமானான் ராம்.

ஒரு பெண்ணை காப்பாற்றி விட்ட பெருமையில்!

அசோக் ஒரு பத்து நாட்கள் அவளைப் பாராமல் இருந்தான். பின்னர், அவனால் அவனுடைய மனதை கட்டுப்படுத்த முடியாமல், அவள் போகும் போதும், வரும் போதும் அவளுக்கே தெரியாமல் பின் தொடர்ந்தான்.

அவனுக்கு தெரிந்து விட்டது... அவளில்லாமல் அவனில்லை என்று!

அவள் நினைவுகள் சாப்பிட முடியாமல்... தூங்க முடியாமல்... படிக்க முடியாமல் வேதனைப்படுத்த.. தாங்க முடியாமல்... அங்கே, இங்கே அவளுக்கே தெரியாமல் ஆசைதீர நின்று பார்த்தான்.

பைக்கை நண்பர்களிடம் கொடுத்து விட்டு... அவளின் பின்பு அவனும் பின் தொடருவான். இதெல்லாம் திவ்யபிரியாவுக்கு தெரியாது! அவள் அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தால் தானேத் தெரியும்!

இதனை கண்ட ராம் அசோக்கிடம் கேட்டான்.

''என்ன அசோக் அவளை வேதனைப்படுத்த மாட்டேன். தொல்லைக் கொடுக்க மாட்டேன்னு சொன்னாயே மறந்துடிச்சா...?''

''மறக்கலடா. நான் அவளுக்கு எங்கே தொல்லைத்தரேன்?''

''பின்னே இப்படி அவளைப் பின் தொடருவதற்கெல்லாம் என்ன பெயர்?' அசோக்கின் மேல் கோபப்பட்டு பேசினான்.

''ராம் அவளை எனக்கு பிடிச்சிருக்குடா. அவளை என்னால் மறக்கவே முடியலை. பார்க்காமலும் இருக்க முடியலை. இதுவரை எந்த பெண்ணிடமும் வராத உணர்ச்சி, மரியாதையெல்லாம் அவளைக் கண்டபின் வந்துடிச்சி! மத்தப் பொண்ணுங்களைக் கண்டால் சைட் அடிக்க தோன்றும்! கிண்டலடிக்கத் தோன்றும்! ஆனால் முதல் முதலா காதல் செய்யத் தோன்றியது... என் பிரியாவிடம் மட்டுமே! என் வாழ்க்கை முழுமைக்கும் பிரியா வேண்டும் ராம்! பிரியா இல்லாத வாழ்க்கையை நினைச்சிக்கூட பார்க்க முடியலை! பிரியா... பிரியான்னு என் இதயம் தவிப்பது தெரியலையா?'' அசோக் கலங்கியக் குரலில் கூறினான்.

''என்னடா அசோக் இப்படியெல்லாம் பேசறே! எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து அவள் வருகிறாள். அவள் மேல் காதல் என்றெல்லாம் டயலாக் விடறியே!''

''இது வெறும் வசனம் இல்லேடா இடியட்! என் இதயப்பூர்வமா வெளி வரும் வார்த்தைகள் என்னைப் புரிஞ்சிக்கோ ராம்!''

''நீயோ பணக்காரன். உனக்கெல்லாம் அந்த ஏழைப்பெண் சரிப்பட மாட்டாள். விலகிக்கோ! வேறு வேலை ஏதுனா இருந்தால் பார். பிசினஸ்

பார்த்தவள் அப்படியே இருந்திருந்தால் பிரியாவிற்கு இப்படி ஒரு தொல்லை வந்திருக்காது அல்லவா? உன் அண்ணனின் தலையில் கட்டி விட்டு வந்து... பிரியாவின் வாழ்க்கையில் விளையாடப் பார்க்கிறாய்!'' எரிந்து விழுந்தான்.

''பிரிஸில்லைப் பார்த்திருந்தால்... என் மனதிற்கு பிடித்தவளை எப்படி சந்தித்து இருப்பேன்? ம்? என் பிரியாவை சந்திக்கவும், காதல் கொள்ளவும் கடவுள் இழுத்துட்டு வந்து'' காலேஜில் விட்டிருக்கான். அது தெரிந்து கொள்ளாமல் எதாவது உளறாதே!'' அசோக்குக்கும் ராம் கேட்கும் கேள்வியால் கோபம் எட்டிப் பார்த்தது.

''டேய் திரும்பவும் சொல்கிறேன் உனக்கு அவள் சரிப்பட மாட்டாள். அப்படியே அவளும் உன்னைக் காதலித்தால் உன் வீட்டில் அவளை ஒத்துக் கொள்வார்களா? பின்னால் வரப்போகும் விபரீதம் தெரியாமல் எதையாவது பைத்தியக்காரன் போல பேசிட்டு திரியாதே அசோக்!''

''பிரியாவை எப்பேர்ப்பட்ட சூழ்நிலை வந்தாலும் கை விடவே மாட்டேன் மச்சி! உன் தங்கை மேல் உள்ள பாசத்தை விட என் பிரியாவின் மேல், என் காதலியின் மேல் நிறையவே அன்பும், அக்கறையும் எனக்கு இருக்கு! நான் பிரியாவிடம் பழகி அவள் நன்மதிப்பை கொஞ்ச கொஞ்சமாக பெற்று அவள் மனதில் இடம் பிடிக்கப் போகிறேன்! நீ குறுக்கே நிற்காதே! ப்ளீஸ்டா.'' அசோக் கெஞ்சும் குரலில் கூறினான்.

''எனக்கென்னவோ அவள் உன்னை காதலிக்க மாட்டாள்ன்னு தோணுது!'' பட்டென்று ராம் சொல்ல அசோக் கோபமானான்.

''அது என் கவலை! உனக்கு ஏன் வீணானபயம்? ஒன்று மட்டும் தெரிஞ்சுக்கோ ராம். பிரியா தான் என் காதலி! பிரியாத்தான் என் மனைவி! அதை அந்த கடவுளாலும் மாற்ற முடியாது!''

''எனக்கு கவலையா இருக்கே!''

''கவலையேப்படாமல் போடா மச்சி!'' என்று சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான்.

கொஞ்ச நாட்களாய் திவ்யபிரியாவிற்கு யாரோ பார்வையால் தன் முதுகை துளைப்பது போல உணர்ச்சி. திரும்பிப் பார்க்க பயம்! அதனால், அக்கம் பக்கம் திரும்பிப் பாராமல் அவள் உண்டு.. தன் வேலை உண்டு என்று இருந்தாள்.

தமிழ் மீடியம் படித்து விட்டு... இப்போது ஆங்கில மீடியத்தில் படிக்கவும்... கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல இருந்தது. ஒரு முறைக்கு நான்கு முறையாய் படிக்க எளிதாய் மனதில் ஒட்டிக் கொண்டது.

இரண்டு மாதம் கஷ்டப்பட்டவளுக்கு இப்போது பாடங்கள் எளிதாய் இருந்தது. ஆங்கில மீடியத்தில் பாடங்கள் எளிதாய் புரிந்தது. நெஞ்சில் ஏறி உட்கார்ந்து மறக்கவே முடியாமலும் பதிந்தன.

ஒரு நாள் மதியம் சாப்பிட்டு முடித்தவள் டெஸ்டிற்கு படிக்க கல்லூரியின் பின்புறம் இருந்த பூங்காவிற்கு சென்று அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

திவ்யபிரியாவை கவர்வதற்காகவே அங்கும், இங்கும் பறப்பது



போல ஒரு பட்டாம் பூச்சி பறந்து செல்ல புத்தகத்தை தூக்கிப் போட்டு விட்டு அதை ஆசையாய் பிடிக்க மெதுமெதுவாய் போக அது பறந்தேப் போய் விட்டது. ஏமாற்றத்துடன் மீண்டும் சென்று, படிக்க புத்தகத்தை எடுக்க... அசோக் அங்கே பின்புறமாய் கைக்கட்டிக் கொண்டு... கம்பீரமாய் வந்து நின்றான். அப்படியே அவனைக் கண்டதும் நடுங்கி, முகம் வெளிறி கேட்டாள்.

''நா... நான் எ...எந்த த...தப்பும் செய்யலையே என்று வாய் குழறி கேட்க....

''என்னைக் கண்டதும் ஏன் அப்படி பயப்படுகிறாய்? நான் என்ன புலியா? சிங்கமா? உன்னை கடித்து முழுங்கி விட! ம்? புருவம் உயர்த்தி கேட்டது அழகாய் இருந்தது.

''ஆமா... ஆமாம்!'' புரியாமல் பயத்தில் உளற...

''என்ன ஆமாவா? நான் சிங்கமா என்ன? ஏய்... பிரியா என்ன? என்ன சொல்கிறாய்?''

''இல்லே... இல்லே!''

அசோக் பின்புறமாய் கட்டியிருந்த கையை அவள் புறமாய் நீட்ட...

''ஐய்! என் பியூட்டி!'' என்று அவன் கரத்தில் இருந்த வண்ணத்துப் பூச்சியை கண்டு குதுகலித்தாள்.

''என்ன பிரியா.. பட்டாம்பூச்சின்னா அவ்வளவு இஷ்டமா?'' அவள் மகிழ்ச்சியைக் கண்டு சந்தோசித்தான்.

''ஆமா சார். கொள்ளை கொள்ளையான கலரோட... அழகோட இருக்கிற பட்டாம்பூச்சியை எனக்கு ரொம்பவே பிடிக்கும்! அதுல உள்ள கலர்களை கையில தீட்டிக் கொள்ள ரொம்பவே பிடிக்கும். அப்புறமா பறக்க விட்டுடுவேன். பாவமில்லையா?'' பயம் போய்.. குழந்தையாய் பேசினாள்.

''ஆமாம்... உயிரை சித்ரவதை செய்வது எனக்குமே பிடிக்காது!''

''தேங்க்ஸ் சார்...! என்னால் பிடிக்க முடியாமல் இந்த பியூட்டி... எனக்கு கண்ணாமூச்சி காட்டிடிச்சு! நீங்க பிடிச்சி தர்லேன்னா.. என்னை ஏமாற்றி விட்டு போயிருக்கும்!''

''அப்படியா?'' ஆச்சரியமாய் கேட்டான். அவனும் அவள் வயதுக்கு இறங்கி வந்து அவளுக்கு பிடித்தமாய் பேசினான்.

''ரொம்ப நேரமாய் இதனை பிடிக்க முயற்சி பண்ணினேன். கையில சிக்கவே இல்லை! ஆமாம் உங்களுக்கும் இதைப் பிடிக்குமா?'' இமைகளை படபடவென பட்டாம் பூச்சியாய் கொட்டிக் கேக்கவும் அசோக் அந்த அழகில் விழுந்து விட்டான்! அப்படியே மயங்கியும் விட்டான்!

''ஓ.... ரொம்ப பிடிக்குமே!''

''இங்கே எதற்கு வந்தாய்?''

''டெஸ்ட் சார்! படிக்க வந்தேன் சார்!''

''நான் என்ன உனக்கு வாத்தியாரா? சார் சார்ன்னு சொல்கிறாய்! என் பெயர் தெரியுமா?

''ம்கூம்....'' காதில் அணிந்திருந்த ஜிமிக்கிகள் ஆட சொன்னாள்.

''என் பெயர் அசோக் குமார்! அசோக்குன்னு கூப்பிடேன்.''

''ம்கூம்... மாட்டேன்! பெரியவங்களை மரியாதையில்லாமல் அழைப்பதா?'' அவசரமாய் கூறினாள்.

''பெரியவன் தான்!'' உன்னைப் போலவே இங்கு படிக்கும் ஸ்டூடண்ட். பெயர் சொல்லி அழைத்தால் தப்பில்லே! என்ன?''

''சரிங்க அசோக்!'' என்று மெதுவாய் சொல்லவும்,

''குட்! இப்போதான் நீ நல்லப்பெண்! பிரியா... கல்லூரிக்கு வந்த முதல் நாள் நானும் அப்படி நடந்திருக்கக் கூடாது! மன்னிச்சிக்கோ பிரியா...'' வருத்தத்தோடு கூறினான்.

''நான் அதை எப்போதே மறந்துட்டேனே!'' என்று கூறி சிரிக்கவும்.. பிரியா சிரிக்கும் போது மனதை கொள்ளைக் கொண்டாள். பட்டாம் பூச்சியை பறக்க விட்டாள்.

''கணக்கெல்லாம் நல்லா செய்வியாமே! ராமுக்கு கூட சொல்லிக் கொடுத்தாயாம்! சொன்னான். எனக்கும் இதுல டவுட்! கொஞ்சம் சொல்லித்தருகிறாயா?'' என்று நிஜமான சந்தேகத்தை கேட்க அவன் அந்த புத்தகத்தை வாங்கிப் பார்த்தாள். பின்னர் உட்கார்ந்து தனது நோட்டில் போட்டுக் காட்டினாள். அவள் எளிமையாய் விவரிக்கும் விதத்தை... ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டே கவனித்தான்.

திவ்யபிரியாவும், அசோக்கும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். எதிர்படும் போது சிரிப்பாள். பின்னர் விலகிச் சென்றுவாள். அசோக்கே வலிய வந்து பேசினாலும்... அளவாய் பேசுவாள்.

அவன் அவளை தன் பைக்கில் ஏறிக் கொள்ளுமாறு வற்புறுத்துவான். வேண்டாம் என்று விலகி ஓடுவாள். அவளின் ஒவ்வொரு நல்ல குணத்தையும் கண்டு அவன் மேல் பற்றுதல் அதிகமானது. காதலும் கண் மண் தெரியாமல் வளர்ந்தது. அவனுக்கு!

## 5

அன்று இரவு அவள் படித்துக் கொண்டிருக்க தாய் மரகதம் சமைத்துக் கொண்டிருந்தாள். வாசலில் ஆட்டோ சத்தம் கேட்க இவள் எட்டிப்பார்க்க அவளுடைய மாமன் சேகர் ஆட்டோவை நிறுத்தி விட்டு லேசான தள்ளாட்டத்துடன் போதையில் வந்து அவளருகில் அமர்ந்தான். பிராந்தி வாசனையும், சிகரெட்டின் நாற்றமும் அவளைத் தாக்க மூக்கைப் பிடித்துக் கொண்டாள்.

''தூர போங்க! எத்தனை முறை சொல்லியிருக்கேன். குடிச்சிட்டு வீட்டுக்குள்ள வராதீங்கன்னு!'' திவ்யபிரியா முறைத்துக் கொண்டு கேட்டாள்.

''என்னடி கண்ணு... உன்னை ஆசையாய் மாமன் பார்க்க வந்தால் விரட்டறியே!'' குழறி குழறி பேசினான்.

''நீங்க பார்க்க வர்லேன்னு யார் அழுதா?''





''பொண்ணு வீட்டுக்காரங்க கிட்ட பொண்ணுக்குப் பாட தெரியுமான்னு கேட்டது தப்பா போச்சு!''

''எப்படி?''

''மாப்பிள்ளைக்கு ஓடத் தெரியுமான்னு கேட்டுட்டாங்க!''

-எஸ்.டி.கேசவன், கு.கமுகாசலபுரம்.

''அக்கா பொண்ணை நான் பார்க்க வராமல் யார் பார்க்க வருவதாம்? ம்?''

''போங்க... போய் உங்க அக்கா கிட்ட மட்டும் உறவை வச்சிக்கங்க! என் கிட்ட வேண்டாம்! உங்களைப் பிடிக்கலே! அதுவும் இப்படி பார்க்க வெறுப்பா இருக்கு!''

''இனி மேல் இங்கே வந்தால் குடிக்காமல் வருவதற்கு முயற்சி பண்றேன்! போதுமாடி என் தங்கம்!'' என்றவன் கன்னத்தில் தட்டி விட்டுச் சென்றான்.

வயது நாற்பது. இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளாத தனிக்கட்டை. நாள் முழுக்க சம்பாதிப்பதை இரவு குடிச்சே அழிப்பதே அவனுடைய முக்கிய வேலை! திவ்யாவின் மேல் ஒரு கண்! ஆசை! அக்கா தனக்கு கட்டி வைக்க மாட்டாளா என்று ஒரு நப்பாசையில் தான் இங்கு அடிக்கடி வருவதே! வயதைச் சொல்லி மறுத்தால் ஆசையெல்லாம் வயதைப் பார்த்தா வருது? என்று சேகர் சொன்னால் மரகதம் சட்டையே செய்ய மாட்டாள்.

''முருங்கைக்காய் சாம்பார் வாசம் ஊரையே கூட்டுதேக்கா.''

''என்ன சாப்பாடு போடவா.?'' பாசமாய் கேட்டாள்.

''போடுக்கா. பயங்கர பசி. ஒரு பிடி பிடிக்கப் போறேன். ஆமா உங்களுக்கெல்லாம் இருக்குதா?''

''சேர்த்து தான் செய்திருக்கேன். நீ ஏன் கவலைப்படறே?''

''நான் வருவேன்னு முன்னமே தெரியுமா?''

''ம்... கூரை மேல காக்கா வந்து கத்திட்டு போச்சே... உன் தம்பி வரப்போறானேன்னு!'' கிண்டலாய் கூற...

''இந்த நக்கல் தானே வேணாங்கிறது! ஆமாம் திவ்யா எப்படி படிக்கிறாள்?''

''நல்லாவே படிக்கிறாள்!''

''என் அக்கா பொண்ணாச்சே! படிப்புல கெட்டிக்காரியாத்தான் இருப்பாள்.''

''ஏண்டா தம்பி இப்படி சம்பாதிப்பது அத்தனையும் தண்டமா, கருதலையா குடிக்கும், சீட்டாடியும் அழிக்கறியே! உனக்குன்னு ஒரு பைசா சேர்த்து வைக்கக் கூடாதா? நாளைக்கு படுக்கையில விழுந்துட்டால் உனக்குன்னு யார் இருக்கா?''

''ஏன் நீயும், திவ்யாவும் இல்லையா?''

''நான் நிலையாடா? நோய் காரி! எப்போ சாவேனோன்னு கிடக்கறேன். அவளும் ஒரு வீட்டுக்கு வாழப் போறவள். உனக்குன்னு ஒருத்தியை கட்டிக்க கூடாதா? உனக்கு ஒண்ணும் அவ்வளவு வயசாகலையே!''

''எனக்கு அவ்வளவு வயசாகலைன்னு சொல்றியே! உன் பொண்ணைக் கொடேன்! அப்படியே ராசாத்தி மாதிரி வச்சித் தாங்குவேன்!''

''போடா... போக்கிரி! உன் வயசென்ன? அவள் வயசென்ன? ம்... உனக்கு அறிவே இல்லையா...? படிக்கற பொண்ணைப் போய் கேட்கிறாயே! அவள் காதுல விழுந்துடப் போகுது... பத்ரகாளியா மாறி பேயாட்டம் ஆடிடுவாள்!''

''நீயே எனக்கு பெண் கொடுக்கலைன்னா வேற யார் கொடுப்பா? வருத்தமாய் கேட்க...

''சேகர் இந்த பேச்சை இதோட விடுடா! தேவதை கணக்காய் என் பெண்ணிருக்க உன்னைப் போல குடிகாரன் கையிலையா பிடித்துக் கொடுப்பேன்! உனக்கு கொடுக்கணும்ன்னு ஒரு நிலை வந்தால் அவள் கழுத்தை நெரித்து கொல்லுவேனே தவிர, உனக்கு கொடுக்க மாட்டேன்.

உனக்கு எத்தவளா, ஏதாவது ஒரு பெண்ணை பண்ணிக்கோ! உன் தகுதிக்கு படிக்காத பெண் கிடைப்பதே கஷ்டம். என் பெண் படிப்பிலே கெட்டிக்காரி!

அவளைப் போய் கேட்கிறாயே? வந்தியா பசிச்சா சாப்பிட்டியா? செலவுக்கு ஏதுனா பணம் வேண்டுமானால் கேட்டு வாங்கிட்டு திரும்பி பார்க்காமல் போ! அதை விட்டுட்டு இன்னொரு முறை பொண்ணுன்னு கேட்டு வாயைத் திறந்துடாதே! நான் பொல்லாதவளாயிடுவேன்! ஜாக்கிரதை!'' எரிமலையாய் வார்த்தைகளை கக்கினாள்.

''என்னக்கா இப்படி பேசறே?'' போதை குறைவாய் இருப்பதால் தணிவாய் கேட்டான்.

''பின்னே, அந்த நினைப்பு மனசுல இருந்தா... இந்த பக்கம் வராதே! எனக்கு பிடிக்கலை. இளங்குருத்தை... குரங்கு கிட்டையா கொடுப்பேன்! புத்தியில்லே? உன் தகுதி தெரியலே? என் பொண்ணு தகுதிக்கு பத்து பர்சன்ட் கூட தேறுவியா? ஏன்டா... உனக்கு கொஞ்சம் கூட அறிவில்லையா? என் பொண்ணு கால் தேய நடந்து போறாள்.

அது எல்லாம் கண்ணில் படலையா? ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்க துப்பில்லே! பெரிசா பேச வந்துட்டான்! சம்பாதிப்பதை குடிச்சே அழிக்கிறாய். சின்ன பெண் காலேஜ்க்கு போய் கஷ்டப் படறாளேன்னு ஒரு சைக்கிள்

வாங்கிக் கொடுக்கணும்னு எண்ணம் வந்ததா?'' சீறினாள்.

''சைக்கிள் தானே வேணும். கத்தாதே! நாளைக்கே வாங்கித் தரேன்! உன் பெண்ணை எனக்கு கட்டி வைப்பாயா?''

''அடி செருப்பாலே! திரும்பவுமா பொண்ணு பொண்ணுன்னு பாடறே! சைக்கிள் வாங்கி கொடுத்துட்டா பொண்ணைக் கொடுத்துடுவேனா? நீ தங்கமா அவள் மேலிருந்து கீழ்வரைப்



பூட்டினாலும், அவளை உனக்கு கட்டி வைக்க மாட்டேன்! போடா... வெளியே! இனிமேல் இந்த திசைப்பக்கம் திரும்பாதே!'' கத்தினாள் மரகதம் ஆங்காரத்தில்!

''நீ இப்போ பேசுவதற்கெல்லாம் ஒரு நாள் வருத்தப்போறேக்கா...''

''வருத்தமாட்டேன். வருத்தப்படறாப்போல... அப்படி ஒரு நிலை வந்தால்.. பார்த்துக்கலாம். நேரம் ஆகுது! இடத்தை காலிப் பண்ணு! சீக்கிரம்! படுக்கணும்!''

சேகர் முறைத்துக் கொண்டே வெளியேறினான்.

இப்படி பேசியதற்கு ஒருநாள் வருத்தப் படப்போவது தெரியாமல் மகளை சந்தோசமாய் சாப்பிட அழைக்கப் போனாள் மரகதம்.

## 6

மறுநாளே... ஒரு விலையுயர்ந்த லேடீஸ் சைக்கிளை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான் சேகர்.

''ஏய் திவ்யா... கழுதே.. என்னடி செய்யற உள்ளே?'' என்று உரிமையாய் அவன் அழைக்கவும்... கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டு இருந்தவள்... வெளியில் வந்து எட்டிப் பார்த்ததும் பூரித்துப்போனாள்.

''ஐயோ... எவ்வளவு அழகா இருக்கு! புது சைக்கிள் வேற! சூப்பர் மாமா...'' துள்ளிக்குதித்தாள் திவ்யபிரியா.

''புடிச்சிருக்காடி?'' சேகர் கேட்டான்.

''ரொம்ப... ரொம்ப புடிச்சிருக்கு மாமா!'' என்றவளின் முகம் ஆனந்தத்தில் பளபளத்தது.

''என் அக்கா பொண்ணுக்காக... இது மட்டுமில்லே... எது வேண்டுமானாலும் செய்வேன்!''

''விலை நிறைய இருக்குமே மாமா! பணத்துக்கு என்ன செய்தீங்க?'' கவலையுடன் கேட்டாள்.

''விலையா பெரிசு? உன் சந்தோசம் தாண்டி பெரிசு! நீ ரொம்பவே நடந்து கஷ்டப்படறதாக என் அக்கா ராத்திரி கத்தினாள். ரோசம் பொத்துட்டு வந்துடுச்சி! எப்படா கடைத்திறப்பான்னு.. கடை வாசல்லே போய் உட்கார்ந்து, இருந்து... கடைக்காரனுக்கு முதல் வியாபாரம் நானாக்கும்!''

''அடடே சேகரா... என்னடா இது மாயம்? ராத்திரி விம்பா போனவன்.... சைக்கிளோட வந்து நிக்கறே!'' என்று வாய்பிளந்து கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள்.

''பின்னே அந்த திட்டு திட்டினால் எனக்கு சொரணை வராதா? பார்த்தியா இந்த சேகரை குறைச்சி எடைப் போட்டியே! ஏதோ குடி போதையில பொண்ணு வேணும்னு கேட்டா... அந்த அளவு அசிங்கமா.. பேசி கத்துவியா? எனக்கு மட்டும் அறிவில்லையா? நான் என்ன மடையனா? எனக்கும் திவ்யாவுக்கும்... ஏணி வச்சாக்கூட

எட்டாதுன்னு.. தெரியாத ஜென்மமா நான்? அவ அழகுக்கும், கலருக்கும் கோகுல்வரன் இல்ல மாப்பிள்ளையா வருவான்! குடிபோதையில உளறினதை மனசுல வச்சுக்காதேக்கா! என்ன டிபன்? பசிக்குதே! வாசலிலேயே வச்சி பேசிட்டு இருக்கியே!''

''வாடா... வாடா சேகர்! இந்த அக்கா திட்டினதை உன் மனசுல வச்சுக்காதே!'' என்று சேகரை உள்ளே அழைத்துப் போனாள் மரகதம்.

குடிகாரன் பேச்சு.... விடிஞ்சாலே போச்சு! என்ற கணக்காய்... திரும்பவும் ஏற்றிக் கொண்டு வந்து... பழைய பல்லவியையே பாடுவான் என்று தெரிந்தாலும் அக்கா தம்பி பாசம் விட்டுப் போகமாட்டேன் என்கிறது!

திவ்யபிரியா சைக்கிளை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு.... கல்லூரிக்கு வந்தாள்.

திவ்யாவின் புத்திசாலித்தனம்... அறிவு.. பழகும் பண்பு... குணம் என்று அத்தனையுமே கவர்ந்து விட... இப்போது அசோக், ராமோடு தினேஷ், கிஷோரும் நண்பர்களாயினர். அவர்களோடு... அன்பாய் நல்ல முறையில் பழகினாள். அவளோடு அவர்கள் நண்பர்களாய் இருப்பதால்... கல்லூரியின் எந்த மாணவனின் பிரச்சனைக்கும், அசிங்கமான பார்வைக்கும், கிண்டலுக்கும் திவ்யா ஆளாகவில்லை. அவளுக்கு அவர்களுடைய நட்பு... பாதுகாப்பு வளையமாய் இருந்தது.

கல்லூரி கேட்டருகே நண்பர்கள் நால்வரும் நிற்க... சைக்கிளில் கிட்டேப் போய் நின்று... இறங்கினாள். ''எல்லோருக்கும் வணக்கம் சார்!''

''ஏன் பிரியா.. இந்த சாரை நீ விடவே மாட்டியா? அசோக் குறைப்பட்டுக் கொண்டான்.

''ஸாரி சார்... வாய்ல தெரியாமல் வந்துடிச்சி!''

''திரும்பவுமா? போச்சுடா? உன்னைத் திருத்தவே முடியாதா? ஆமாம் சைக்கிள் என்ன புதுசா?'' ராம் கேட்க...

''ஆமாம்''

''யார் வாங்கி கொடுத்தா?''

''என் மாமா!''

''அப்போ இன்று ஹோட்டலுக்கு கூட்டிப் போய் பார்ட்டி வைப்பாய் இல்லையா?'' அசோக் கேட்க....

''ஐயோ... வசதி பத்தாது! என்னிடம் வெறும் டென் ருபீதான் இருக்கு!''

''ஒரு கப் டீ யாவது எங்களுக்கு கிடைக்குமா?''


''டீ விலை தெரியாதே! போதுமா?''

''டீ விலைக் கூட தெரியாமல் நீ யெல்லாம் எதுக்கு காலேஜ் படிக்கறே? உன் டென் ருபீ பத்தாது!'' என்று கிஷோர் கூற... பிரியா முகம் அவமானத்தில் சின்னதாகிப் போக.. இதனைக் கண்ட அசோக் சொன்னான்.

''நான் வாங்கித் தரேன். உன் புது சைக்கிள் கொண்டாட்டத்தை ஐஸ்கிரீம், பப்ஸ்லோட கொண்டாடிடலாம்.. வாங்கடா கேன்டீனுக்கு!''

''வேணாமே! நாளைக்கு நானே வாங்கித் தரேன் பிளீஸ்...''





''வேணாம்னு சொல்லலையே! நாளைக்கு நீ வாங்கிக் கொடு! மாப்பளைங்க காய்ந்துப் போய் கிடக்கறானுங்க! இன்று என் செலவு. என்ன பிரியா தயங்கறே? ம்.. சும்மா வா! பிளீஸ்...'' அவனும் அவளைப் போலக் கெஞ்ச... கொல்லெனச் சிரித்து விட்டாள். அந்தச் சிரிப்பில் சொக்கிப்போனான் அசோக்!

இப்படியே அசோக்கும், திவ்யபிரியாவும் நெருங்கிப் பழகினர்.

காலேஜோடு... அண்ணனின் தொழிலிலும் மாலை, விடுமுறை நாட்களில், இல்லை என்றால் விடுப்பு போட்டு விட்டே அசோக் உதவுவான். அதுப்போலத் தான் ஒரு முறை தங்கள் ஆபிஸில் அதிக வேலை இருந்து விட... பிரபாகரனுக்கு உதவ என்றே ஐந்து நாட்கள் லீவில் இருந்தான்.

அந்த பிரிவின் போது தான் திவ்யபிரியாவிற்கு தன்னுடைய மனசும் புரிந்தது. அசோக்கைப் பார்க்காமல் தவித்துப் போனாள். அவன் குரல் கேட்காமல் கலங்கிப் போனாள். அவன் அருகாமை இல்லாமல் உருகிப் போனாள். அப்போது தான் தன் மனதிலும் அசோக்கின் மேல் ஒரு ஈடுபாடு இருந்தது.... புரிந்துப் போயிற்று. ஆனாலும் இது தப்பு, அசோக்கின் அந்தஸ்துக்கு தான் ஈடாகமாட்டோம் என்று அவ்வளவு சொல்லியும்... சமாதானம் ஆகவில்லை அவள் மனசு!

நான்கு நாட்களில் வேலை முடித்து.. ஐந்தாம் நாளே அசோக்கும் தலையை பிய்த்துக் கொண்டு.... இதயம் கலங்கி அவளைப் பார்க்க ஓடிவந்தான்.

''திவ்யா... நான் உன்னிடம் தனியே பேசணும்! மதியம் சாப்பிட்டு முடித்ததும்..., பின்னாடி இருக்கும் பூங்காவில் காத்திருப்பேன். நீ வரவேண்டும்!''

''மதியம் ஒரு டெஸ்ட் இருக்கே!'' அவள் மறுக்க

''மண்ணாங்கட்டி... நான் உன்கிட்டே பேசணும்! முக்கியமாய் பேசணும். என்னால் அடைச்சி அடைச்சி வைக்க முடியலே! பிரியா புரிஞ்சிக்கோ... நான் உன்னை தனிமையில சந்திக்கணும். பிளீஸ் டிரைடு அண்டர்ஸ்டேண்ட் மீ!'' என்று சொன்னான்.

''நீ வரலேன்னா.. கிளாசுக்கே வந்து உன் கையைப் பிடிச்சி தரதரன்னு இழுத்துட்டு வரவும் தயங்க மாட்டேன். ஆமாம்!'' மிரட்டி விட்டுப் போனான்.

அசோக் பிடிவாதக்காரன். சொன்னதை நடத்தியே பழகியவன். அதனால் பயந்துக் கொண்டு... சாப்பாட்டை பாதியிலேயே மூடி வைத்து விட்டு ஓடிவர.. அவளுக்கு முன்பே... அவன் வந்து சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து காத்திருந்தான். அவள் ஓசைப்படாமல் வந்து நின்று தொண்டையைக் கனைத்தாள். அவன் நிமிர்ந்து பார்த்து புன்னகைத்து...

''குட்... வா... வந்து உட்கார்!'' அருகில் இருந்த இடத்தைக் காட்ட... அவள் அமர்ந்தாள்.

அவன் பார்த்துக் கொண்டே இருந்தான்!

அவளும் பார்த்துக் கொண்டே இருந்தாள்!

இமைக்காமல்! இருவரும் இமைக்கவே மறந்துவிட்டனர்!





நான் நீச்சல் கத்துக்கறேன்...
எங்கே...
தண்ணியிலே தான்
-கிருஷ்ணன்,
கோயம்புத்தூர்.

பின் மெல்லக் கேட்டாள். ''பேசணும்னு வரச்சொல்லிட்டு... பார்த்துட்டே இருந்தா என்ன அர்த்தம்?''

''நாலுநாளாய் பார்க்கலே இல்லையா? உன்னை ஆசைத் தீர பார்க்கணுபோல வெறியா இருக்கு!''

''எதுக்குப் பார்க்கணும்?''

''எதுக்குப் பார்க்கணுமா? தெரியாதா? இல்ல தெரியாதது போலக் கேட்கிறாயா? ம்?''

''சொல்லுங்க?''

''நாலு நாளாய் பார்க்காமல் எவ்வளவு ஏங்கிப் போயிட்டேன், தெரியுமா பிரியா?'' இதயத்திலிருந்து தவிப்புடன் வார்த்தைகள் வரச் சொன்னான் அசோக்.

''எதுக்கு ஏங்கணும்?'' தெரியாதவளாய் கேட்க...

''சின்ன பாப்பா பாரு! ஒன்னுமே தெரியாது பாரு!

உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியலே! உன்னிடம் பேசாமல் இருக்க முடியலே! இந்த அழகு முகத்தை நாலு நாளாய் தரிசிக்காமல்... நான் பட்ட வேதனை சொல்ல முடியாது பிரியா! அனுபவிச்சவனுக்குத் தான் தெரியும்! இதுக்கு மேல என்னுள்ளே போட்டு மூடி வைக்கவும் முடியலே! ரொம்ப வேதனையாவும்.. கஷ்டமாவும் இருக்கு. அதனால ஒரு முடிவுக்கு வந்துட்டேன். குறுக்கே பேச முயற்சி செய்யாதே! முழுவதும் சொல்லிடறேன். அதைச் சொல்லிட்டால் என் மனசு பிரியாயிடும்னு நினைக்கிறேன். ஐ லவ் யூ பிரியா.... ஐ லவ் யூ பிரியா! கண்கள் பளபளக்க... காதல் வழிய அசோக் கூறினான்.

இவ்வளவு சீக்கிரம் அவன் காதலைச் சொல்லுவான்... என்று எதிர்பார்க்காத பிரியா... அதிர்ச்சியுடன்... ஆச்சரியப்பட்டு என்ன பேசுவதென்றே புரியாமல் ஊமையாய் இருந்து விட்டாள்.

''ஐ லவ் யூ கண்ணம்மா!'' காதலில் கசிந்துருகி மீண்டும் சொன்னான். அவள் மவுனமாய் இருக்க...

''என்ன பிரியா அதிர்ச்சியா? ஆச்சரியமா? ஆனந்தமா? ம்? உன்னைப் பார்த்ததுமே... அந்த நொடியே காதல் வந்துடிச்சி! நீ திரும்ப திரும்ப வாயாடவும் வெறுப்பாயிடிச்சி! நீ மீண்டும் மன்னிப்பு கேட்டு... கண்ணீர் சிந்தினாய் பார்...! அப்போது உன் கண்ணீரை துடைத்து.. என் மார்பில் சாய்த்து... 'அழாதேடா' என்று தட்டிக் கொடுக்கணும் போல தவிப்பா இருந்துச்சி! கட்டுப்படுத்த கஷ்டப்பட்டேன் தெரியுமா? சொன்னால் புரிஞ்சிக்குவியா?'' அசோக் உருக்கமாய் சொன்னான்.

''இது தப்பில்லையா?'' திவ்யபிரியா மெல்ல கேட்டாள்.

''காதலிப்பது தப்பில்லையே!''
''காதலிக்கற வயசா எனக்கு அசோக்? ம்?''
''காதலிக்கறது தப்பில்லே! கல்யாணம் பண்ணிக் கொள்வது தான் தப்பு!''
''என்ன பேசறீங்க?'' அதிர்ச்சியுடன் அவள் கேட்க...
''தப்பா அர்த்தம் புரிஞ்சிட்டியா? இந்த வயசுல காதலிக்கலாம். ஆனால் கல்யாணம் செய்துக் கொள்வது தான் தப்பு. என்னைப் பிடிக்கலையா?''
''நான் சொன்னேனா?'' திரும்பவும் புன்னகையுடன் கேட்க...
''அடிக்கள்ளி! நீ காதலிப்பதை.... உன் வாயால் சொல்லக்கூடாதா? பிளீஸ்... பிளீஸ்...'' என்று அசோக் கெஞ்ச...
''ம்கூம்...'' என்று திவ்யா மிஞ்ச...
''என்னடி ஊகூம்? ஏய் பிரியா சொல்லமாட்டாயா...? ஐ லவ் யூ அசோக்ன்னு.''
''சொல்லணுமா ராஸ்கல்?''
''சொன்னால் சந்தோசப்படுவேன். சொல்லுடா?''
''ஐ லவ் யூ அசோக்!'' என்று அவள் மொட்டு விரித்தது போல... வாசனையாய் கூற... அசோக் அப்படியே பூரித்து விட்டான்.
''உன் மனசுல நானும் இருந்தேனா?'' சந்தேகமாய் கேட்டான்.
''ஆமாம்!'' பிரியா ஒத்துக் கொள்ள...
''எப்போதிருந்து?''
''கொஞ்சகாலமாய்! அது இந்த நாலுநாளில் தான் வெளிப்பட்டது! அசோக் இது தப்பில்லையா?'' பனியில் நனைந்த ரோஜாவின் குளிர்ச்சி அவள் குரலில் தென்பட்டது.
''என்ன இது மடத்தனமான கேள்வி மீண்டும்? காதலிக்கறது குற்றம்னு யாரும் சொல்லலையே! அப்படின்னா உலகத்து மக்களுமே இல்ல காதலிச்சிட்டு இருக்காங்க. அப்போ அவங்க எல்லாம் முட்டாளா? என்னடி ராட்சசி பேசறே? நாலுநாளும் உன்னைப் பாராமல் தவிச்சிட்டேன். தெரியுமா?''
''நானும் தான்!'' அவள் முனக...
''அடிச்சக்கை! மகாராணிக்கும் நான் என்றால் பிடிக்குமா? கண்ணடித்து புன்னகையுடன் கேட்க...
உயிரா? ''இப்படியெல்லாம் கிண்டல் பண்ணினால் போயிடுவேன்!''
''லேசுல விடுவேனா? என் வாழ்க்கை முழுக்க நீ என்னோட வரணுமடி! வருவியா டீ கண்ணம்மா?''
''நீயும் வருவியாடா கண்ணா?'' என்று அவளும் அவனைப் போலக் கேட்க..
''என் செல்லம்!'' என்று அவன் கைப்பற்ற... அவள் கையை உதறிக் கொண்டாள்.
''ஏன்?'' தவிப்புடன் கேட்டான்.
''வேண்டாம்!'' அழுத்தம் திருத்தமாய் சொன்னாள்.
''தொட்டால் குறைந்து போய் விடுவாயா?''



''மாட்டேன். ஆனால் என்னை அடையணும்னு வேகம் தொட்டாலும், கட்டிகிட்டாலும் அடங்கிவிடும்!''
''இது என்னடி பிரியா புது பழமொழி? அப்போ சின்ன கிஸ் கூட பண்ணமாட்டியா?'' அவன் அப்பாவியாய் கேட்க...
''உதை விழும்! அசிங்கமாய் பேசினால் உதை விழும்!'' சுட்டு விரல் நீட்டி எச்சரித்தாள். பின்னர் எதையோ நினைத்தவளாய் கேட்டாள். ''நம்ம ஆசை நிறைவேறுமா அசோக்?''
''நிறைவேறாமல்... உனக்கு ஏன் சந்தேகம்? என்னை காதலிச்சி கைவிடற கயவன்னு சந்தேகப்படறியா?'' அவன் எரிச்சலாய் கேட்டான்.
''ஐயோ... நீங்களா ஏதாவது கற்பனைப் பண்ணிட்டுப் பேசாதீங்க! நீங்க பணக்காரவங்க! உங்க வீட்டுல ஒத்துப்பாங்களா?''
''ஒத்துக்கிட்டா தெரிஞ்சி கல்யாணம்! ஒத்துக்கலைன்னா திருட்டு கல்யாணம்!'' சிரித்தான்.
''ஐயோ... ஏன் அசிங்கமா திரும்ப திரும்ப பேசறீங்க?'' காதைப் பொத்திக் கொண்டாள்.
''பின்னே இந்த பயம் பயப்படுபவளிடம் எப்படி பேசுவது?''
''பயப்படலை! என் வீட்ல அம்மா நான் சொன்னால் கேட்டுக்குவாங்க. பிரச்சனை இல்லை! உங்க வீட்டில்...?''
''இங்கே பார்! என்னைப் பற்றி முழுசா தெரிஞ்சுக்கோ! பணக்காரன்தான்! அப்பா இல்லே. அண்ணா குடும்பத்தையும், பிசினஸ்ஸையும் பார்த்துக்கிறான். ரெண்டு வருடம் அவனோட பிசினஸ் பண்ணினேன். படிக்க ஆசைவந்ததால் வந்துட்டேன். இப்பவும் உதவிட்டு இருக்கேன். அண்ணாவுக்கு திருமணமாகலே! பார்த்துட்டு இருக்காங்க. அம்மா இருக்கா. அப்புறம்?...
''அப்புறம் அக்கா ஜெயந்தி. மாமா கண்ணன். அம்மாவின் பேச்சு கேளாமல்... அவரை எதிர்த்துட்டு... வேற ஜாதி பையன். இத்தனைக்கும் அவர் என்ஜினியர் அவரை கல்யாணம் பண்ணிட்டா மாமாவை அம்மா மதிப்பது இல்லை! அதனால் அதிக தொடர்பு இல்லை. நான்மட்டும் மாசம் ஒரு முறை அக்காவைப் போய் பார்த்துட்டு வருவேன். நான் என்றால் அவளுக்குபிரியம்!''
''அக்காவோட காதலை ஏற்றுக் கொள்ளாதவர்கள்.. நம்ம காதலை மட்டும் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?'' பயத்தோடு கேட்டவளுக்கு சொன்னான்.
''நான் கடைக்குட்டி! அம்மாச் செல்லம்! அடம்பிடித்தால் ஒத்துக் கொள்வார்கள். அப்படியே ஒத்துக்கலைன்னா அக்காவோட வழியைத்தான் பின்பற்றுவேன். அவர்களைப் பகைத்துக் கொண்டு... உன்னைக் கைப்பிடித்து... உனக்கு ராணி போல சம்பாதித்துப் போட்டு, வச்சிக்க முடியும்.
அந்த நம்பிக்கை இருக்கு. பயப்படாதே! நீ சந்தோசமா என்னை லவ்விட்டு இருந்தாலேப் போதும்!''
''ஏய்...'' என்று திவ்யபிரியா அதட்ட...
''இந்த வருடம் படிப்பை முடிச்சிட்டுப் போய் பிசினஸ் பார்க்கறேன். நீ

அடுத்த இரண்டு வருடமும் படிப்பை முடிச்சிட்டு வா! அண்ணாவுக்கு அதற்குள் முடிச்சிடுவாங்க! அப்புறம் எனக்குத் தான். நான் உனக்காக காத்திட்டு இருப்பேன். காத்து இருப்பதிலும் சுகம்தான்! அப்படியே இந்த சந்தோசத்தை கொண்டாட... எங்காவது ஓட்டலுக்கு போகலாமா?''

''இதுபோல வெளியே கூப்பிட்டு... தொல்லைக் கொடுக்கற வேலையெல்லாம் என்னிடம் வச்சுக்காத'' பட்டென்று சொன்னாள்.

''சரி. நீ கிளாசுக்கு போ! இன்று ஒரு நாள் பட்டினியிருந்தால்... நான் செத்துவிடமாட்டேன்'' என்று அசோக் பட்டென்று கூறவும்,

''ஐயோ... என்ன பேசறீங்க?'' அவன் வாயைப் பொத்தினாள். ''சாப்பிடலையா? ஏன்? போங்க... போய் சாப்பிட்டு விட்டு வாங்க.''



'மூணு மணி நேரம் முக்கியமான வேலை இருக்கு உள்ளே யாரையும் அனுப்ப வேண்டாம்'

'அப்ப சரியா நாலு மணிக்கு வந்து உங்களை எழுப்பி விடலாமா சார்?'

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

''நான் மாட்டேன். உன் பிடிவாதத்தை விட என் பிடிவாதம் சற்றும் குறைஞ்சது இல்லே! நான் பட்டினி இருந்தால் உனக்கென்ன வந்தது?''

''சரி... வந்து தொலைக்கறேன்! இன்று ஒருநாள் மட்டும் தான்! பீச், பார்க்ன்னு என்னைக் கூப்பிடாமல் சமத்தா இருக்கணும்! புரிஞ்சதா?''

''பீச், பார்க்ன்னு கைகோர்த்துட்டு சுத்தலேன்னா... அது என்ன காதல்?'' அவன் புருவம் உயர்த்தி கேட்க....

''ம்..'' என்று அவள் முறைக்க... ''புரிஞ்சது தாயே!'' என்றவன்... அவளை அழைத்துப் போய் பைக்கை ஸ்டார்ட் செய்ய... அவள் ஏறி அமர்ந்தாள்.

''இவ்வளோ இடைவெளிவிட்டு நீ உட்கார்ந்து வருவதை விட... வராமல் இருப்பதே மேல்! ஒட்டி உட்கார் பிரியா... என்தோளை கெட்டியா அணைத்துக் கொள். விழுந்துடப்போறே! கைகால் முறிஞ்சிட்டா... ஊனமான பொண்ணை வச்சிட்டு... நான் இல்லே அவஸ்தைப் படணும். ம்?'' என்று புன்னகைக்க...

''ரொம்பத்தான் அக்கறை! முதுகில் ஒன்று பட்டுன்னு போட்டால் தான் அடங்குவீங்களா?'' என்று சொன்னவள் இன்னும் இடைவெளிவிட்டு உட்கார்ந்தாள்.



''பிரியா... என்ன சோப்பு யூஸ் பண்றே? இவ்வளோ வாசம் உன்மேல்!'' ரசனையுடன் கூறினான்.

''கிண்டல் பண்ணியது போதும்! ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க!'' என்றவள் சாலையின் பின்னாடி வந்த ஆட்டோவில் தன் மாமன் சேகர் வருவதைக் கண்டு பதறினாள்.

''ஐயோ வில்லன்! பார்த்துடப் போறார். வேகமாப் போங்க!'' என்று சொன்னவள்... அவன் முதுகில் முகம் புதைத்து கண்ணை மூடி... அவனைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள். காற்று புககூட அங்கே இடைவெளி இல்லை.

பிரியாவின் அருகாமையில், அணைப்பில் சொக்கிப் போய்.... ''வாழ்க அந்த வில்லன்! என்ன சுகம்? யார் பிரியா? என்று கேட்டான் அசோக்.

''பின்னால் வரும் ஆட்டோவில் எங்க மாமா சேகர் பார்த்துட்டா அம்மாவிடம் செய்திப் போயிடும்! அப்புறம் என் படிப்பு நின்னுடும்! ஏதாவது குறுக்கு சாலையில் புகுந்துடுங்களேன். ப்ளீஸ்...'' கெஞ்சினாள்.

''குறுக்கு சாலையில் புகுந்தால்.... நீ என்னை விலகிடுவியே! அப்புறம் தேவியோட கட்டிப்புடி தரிசனம் கிடைக்காதே!''

''உங்களை என்ன செய்தால் தகும்?'' என்றவள் அவன் இடுப்பில் நறுக்கென வேகமாய் கிள்ளினாள்.

''ஏய் வலிக்குதுடி... பிரியா... ஏய்... ஏய்'' அவளின் கிள்ளிற்கு பயந்து ஒரு குறுக்கு சாலையில் கட் பண்ணி, புகுந்து, வண்டியை முடுக்கினான்.

## 7

அன்று மாலை 4.00 மணி.

கல்லூரி பூங்காவில் அசோக்கும், திவ்யபிரியாவும் சந்தித்தனர். அவன் பேசப்பேச... வைத்த விழி அகற்றாமல்... தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். இடையே ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து... ஆழமாய் புகையை இழுத்து... வெளியே விட... இதைப் பார்த்த திவ்யபிரியா... கோபத்தில் கண்கள் சிவந்தாள்.

''என்ன இது கெட்டப் பழக்கம்?'' கேட்டுக் கொண்டே... அந்த சிகரெட்டை, அவன் வாயிலிருந்து பிடுங்கி எறிந்தாள்.

''எத்தனை காஸ்ட்லி? அநியாயமாய் கசக்கிப் போட்டுட்டியே! சிகரெட் பிடிப்பது கெட்ட பழக்கமா? தொடர்ச்சியாய் பிடித்தால் தான் கெட்டப்பழக்கம். தெரியுமா?''

''ஒரு நாள் திருடினாலும்... பல நாள் திருடினாலும் திருடன் திருடன் தானே! நிகோடின் உடலுக்கு எவ்வளவு கெடுதி? நுரையீரல் புற்றுநோயும்... ஹார்ட் அட்டாக்கும் அதிகமாய் வருவது இந்த நிகோடின்

நீங்கினால்தான்! தெரியுமா?''

''தெரியுமே!'' அவன் சாதாரணமாய் சொல்ல....

''தெரிஞ்சுமா?'' மீண்டும் ஆவேசப்பட்டான்.

''சரி. உனக்கு பிடிக்காததை நிறுத்திடறேன். சிகரெட் குடிக்கணும்போல ஆசை வந்தால் என்ன செய்வது?'' அப்பாவியாய் கேட்க...

''எதுவுமே செய்ய வேண்டாம். சும்மாகிடங்க!''

''சிகரெட் பிடிக்கணும்போல ஆசைவரும் போது... உன் உதட்டுல சின்னதாக கிஸ் பண்ணிக்கட்டுமா?'' அவன் குறும்பாய் கண்சிமிட்டி, கேட்டு, சிரிக்க...

''ஆசை தான்! உதைவிழும்! ஆமாம், இதுதவிர இன்னும் என்னென்ன கெட்டப்பழக்கம் இருக்கு? ம்?''

''தண்ணியடிப்பேன். எப்பவாச்சும் பண்டிகையில! அதுவும் மாப்பிள்ளைங்க வற்புறுத்தினால் தான்!

''இனிமே தண்ணியடிப்பேன்! தம்மடிப்பேன்! அப்படி சொன்னாலே பத்ரகாளியா மாறிடுவேன். மறைக்காதீங்க! சொல்லுங்க? இன்னும் என்னவெல்லாம் கெட்டபழக்கம் இருக்கு?''

''பொண்ணுங்களை லுக் விடுவேன்! என் லுக்குல மயங்கி என்பின்னாடி வருபளை தள்ளிட்டுப் போய்...'' என்று முடிக்காமல், நிறுத்தி, கண்ணடிக்க...

திவ்யபிரியா அவன் முடியைப் பிடித்து ஆட்டி... அவனைக் கீழே தள்ளி.. மார்பிலும், வயிற்றிலும் குத்தினாள், ஆவேசம் வந்தவளாய்!

''ஐயோ... வலிக்குது பிரியா... விடுடி.. வலிக்குதுடி!''

''அடித்தால் வலிக்காமல் என்ன செய்யும்? உண்மையா? நீங்க சொல்வது உண்மையா? பொம்பளை பழக்கமிருக்கா? எனக்கு தெரிஞ்சாகணும்! இவ்வளவு மோசமானவரா இருந்துட்டு... நடிச்சீங்களா? நல்லவனா ஆக்ட் கொடுத்தீங்களா?'' கீழே கிடந்தவனின் முடியை கொத்தாய் பிடித்து... இழுத்து உட்கார வைத்து... திரும்பவும் ஆவேசம் வந்தவளாய் கேட்டாள்.

''பொம்பளை பழக்கமிருக்கா? இருக்கா?'' சத்தம் போட்டாள்.

''ஐயோ... இல்லடி! 'சும்ம்மாடி...' விளையாட்டுக்குச் சொன்னேன்!''

''விளையாடுவீங்களா? என்கிட்ட விளையாடுவீங்களா?''

''மாட்டேன்... மாட்டேன்!''

''என்னைப் பத்தி முழுசா தெரியாதில்லே?''

''தெரியுமே! நீ ஒரு அழகான ராட்சசின்னு!''

''ச்சீப்போடா...'' என்றவள் கோபமாய் வேறுபுறம் திரும்பி உட்கார்ந்துக் கொண்டாள்.

''இந்த வருடமே முடியப்போவுது! பரீட்சை எழுதிட்டுப்போயிடுவேன். இவ்வளவு நாளில் ஒரு சின்ன கிஸ்ஸ¨க்கு கூட உன்கிட்ட பஞ்சமா? உன்னை காதலிச்சதுக்கு பதிலா.. என்னையே சுத்தி சுத்தி வந்தாளே சந்தியா அவளைக் காதலிச்சு இருந்தால்... அவள் உடம்புல எத்தனை மச்சங்கள் இருக்குன்னு தெரிஞ்சிட்டு இருப்பேன்...



இவ்வளவு நாளில்!'' அவன் சொல்லி முடிக்கவும்... கோபத்தில் கத்தினாள்.

''போங்க... போய் அவளையே காதலியுங்கள்! அவளையே கல்யாணமும் பண்ணிக்கங்க! இந்த நிமிஷத்துல இருந்து நீங்களும், நானும் யாரோவோ!'' என்று கண்கள் சிவக்க எரிந்து விழுந்தாள்.

''ஏய் சும்மாடா... கோபிச்சுட்டியா?'' அருகில் போய் மண்டியிட்டுக் கேட்க...

''யார் நீங்க? உங்களை தெரியவே தெரியாது! உங்ககிட்ட கோபிக்கக்க நான் யார் சார்? என்கிட்ட விளையாட நீங்க என்ன என் அத்தானா? இல்லே என் மச்சானா? ம்?''

''என்னடி சும்மா தமாஷ¨க்கு சொன்னதை சீரியஸா எடுத்துக்கறியே! மன்னிச்சுக்கோடி...!''

''உங்களைப் பார்க்கவே பிடிக்கலை! தூரப்போங்க! எனக்கு கோபம் கோபமா வருது! நான் பேயாட்டம் ஆடிடுவேன்! அதுக்குள்ள என் கண்முன்னாடி நிற்காமல் போயிடுங்க!'' பின்னர் என்ன நினைத்தாளோ விம்மி விம்மி... இதயம் வெடிக்க அழுதாள்.

''என்னடி அழறே? நீ எப்போ நெருப்பா மாறிபொசுக்குவே? எப்போ பனியா மாறி குளிர்ச்சி தருவேன்னு தெரியலையேடி கண்ணம்மா! இந்த அளவு கஷ்டப்படுவேன்னு தெரிஞ்சிருந்தால்... உன்கிட்ட விளையாடி இருக்க மாட்டேன். ஸாரி... ஸாரி டி...''

கெஞ்சினான்.

''உங்களுக்கும் எனக்கும் உறவே வேணாம் சாமி! என்னை விட்டுட்டுப் போயிடுங்க!'' குலுங்கினாள். கண்களில் கண்ணீர் மடைத்திறந்த வெள்ளமாய் வந்தது.

''பிரியா... அப்படி சொல்லாதடி! நான் அவ்வளவு மோசமானவனாய் இருப்பேன் என்று எப்படி நம்பலாம்? நான் நீயல்லவா? உன்னையே நம்பலேன்னா என்ன அர்த்தம்? இந்த மனம், உடல் உன் ஒருத்திக்குத்தான் சொந்தம். இந்த உயிர் எப்போதுமே பிரியா... பிரியான்னு தான் துடிச்சிட்டு இருக்கும்!

நான் பொறந்ததே உனக்காகத்தானடி! உன் கூட வாழத்தான் கண்ணம்மா! எத்தனை பேர் போட்டி போட்டு மயக்க பார்த்தாளுங்க! நான் மயங்கினேனா? நான் மயங்கிய ஒரே பெண் நீதான்டி செல்லம்மா! சத்தியமா... உன்னைத் தவிர வேறு ஒரு பெண் என் வாழ்க்கையில் இல்லே. தெரியுமா? நான் உன்னை உருகி உருகி காதலிக்கும் போது... கனவிலும் வேறு ஒரு பெண்ணை நினைப்பேனா? என் ஏழேழு ஜென்மத்துக்கும்... நீதானடி! இந்த பொம்பளை கழுத்தை தவிர... வேறு ஒருத்தி கழுத்துல தாலிகட்ட மாட்டேன்! என் பொண்டாட்டி நீதான்டி கண்ணம்மா! ப்ளீஸ்... இப்போ இந்த மச்சானை மன்னிச்சிடுவியாம்! மச்சான் மனசு வருத்தப்படுதுடி... உன் அழுகையான முகத்தைப் பார்த்து!''

மண்டியிட்டு இருந்த அசோக்கை அப்படியே மல்லாக்க தள்ளி மீண்டும் வயிற்றிலும் நெஞ்சிலும் ஆத்திரம் தீரும் மட்டும் குத்தினாள்.

''பிரியா... சொன்னாக்கேள்! நிஜமாவே வலிக்குதுடி! விடுடி

ராட்சசி!'' கெஞ்சியவனைப் பார்க்க பாவமாய் இருந்தது.

''எழுந்து உட்காருங்க'' ஆணையிட்டாள். அவன் எழுந்து அருகில் வந்து உட்கார்ந்தான்.

''விளையாட்டுக்குக் கூட வேற பெண்ணை நினைக்கவோ... பேசவோ கூடாது. சரியா?'' சின்னப்பிள்ளையாய் கேட்டவளிடம் சொன்னான்.

''மாட்டேன்... மாட்டேன்! சொல்லிட்டு உன்கிட்ட யார் வாங்கி கட்டிக் கொள்வது? புரட்டி எடுத்துட்டியே! பார் சட்டையே அழுக்காயிடுச்சி! என்னை இந்த அளவு அடிச்சதில் கோபமே இல்லை பிரியா! அதற்கு பதிலா ரொம்பவே சந்தோசம் தான் செல்லம்மா! உன் தீவிரமான நேசத்தை தெரிஞ்சுக்கிட்டேன். நம்மை இனி எந்த ஒரு சக்தியாலும் பிரிக்க முடியாது! திரும்பவும் சொல்றேன்... இந்த அசோக்கோட பொம்பளை நீதான்டி கண்ணம்மா! என் இதயம் சும்மாக்கூட வேறு ஒருத்தியை நெனச்சே பார்க்காதுடி கண்ணம்மா! என்னை நம்புடீ! கொஞ்சமாய் சிரிக்கலாமே! பிளீஸ்... பிளீஸ்'' அவன் கெஞ்ச... அவள் சிரிக்க...

''இது பெட்டர்! என்றான் ரசனையுடன்.

அதன் பிறகு பரீட்சை எழுதி, பாஸ் செய்து... தன் பிசினஸ் பார்க்க சென்றான் அசோக். திவ்யபிரியா இரண்டாம் வருடப் படிப்பை தொடர்ந்தாள். தினமும் அவளைப் பார்க்க வந்தவனிடம் 'மாதத்தில் இரண்டாவது ஞாயிறு மெரினா பீச்சில் சந்திக்கலாம்' அதுவேப் போதும் என்று கட்டுப்படுத்தினாள். அதிகம் பார்க்காமல் இருந்தாலோ என்னவோ அவர்களுக்குள் அப்படி ஒரு ஆழமாய் காதல் வளர்ந்தது.

அவள் கல்லூரியில் மூன்றாம் வருடம் படித்தப்போது... ஒரு நாள் பத்திரிகையை நீட்டினான்.

''அதிராதே! என்னோடது அல்ல! அண்ணாவுக்கு மேரேஜ்! ஞாயிறுதான். வரியா பிரியா நீ?'' சிரித்தான்.

''வரணுமா?''

''வந்தால் சந்தோசம் தானே! அப்படியே அம்மா, அண்ணாவிடம் லேசாய் சொல்லி வைக்கலாம். இல்லையா?''

''வேண்டாம் அசோக்! என்னை ஒருவேளைப் பிடிக்காமல், மறுத்துட்டால் என்னால் தாங்கிக்க முடியாது! படிப்பும் பாழாய்ப் போயிடும்! அப்புறமாய் வருகிறேன். அந்த வீட்டுக்கு வாழவராமல் எங்கேப் போயிடப்போறேன்? ம்?

''......''

''கோபமா?''

''ஆமாம்னு சொன்னால் கட்டியணைத்து அப்படியே கன்னம், நெற்றி, உதடுன்னு முத்தம் கொடுத்துடப் போறீயா என்ன?''

''உங்களுக்கு எப்போதுமே இதே நினைப்புதானா?''

சலித்துக் கொண்டாள்.

''வேறு எதை நினைப்பதாம்? ம்? உன்னைப் பற்றியும்... நீ என்னோடு வாழப்போற வாழ்க்கையைப் பற்றியும், உனக்கும் எனக்கும் வரிசையா.. வருசத்துக்கு ஒண்ணுன்னு



பிறக்கப்போகுதே... அந்த பிள்ளைகளைப் பற்றியும் தான்.. என் நினைப்பே!'' என்று சொல்லிவிட்டு மந்தகாசமாய் புன்னகைத்தான்.

''வருஷத்துக்கு ஒண்ணா? நான் மாட்டேம்பா'' மிரண்டாள்.

''உனக்கு என் கவலை?''

''பெத்துக்கப் போறது நான் இல்லையா?''

''அதுங்களுக்கு சம்பாதிக்கப்போறது நானில்லையா?''

''ரெண்டையே பெத்து, நோய் நொடியில்லாமல் காப்பாத்தி... நல்லபடிப்பு தருவதே இந்த காலத்தில் பெரிசு. அதுங்க படிப்புக்கு மூட்டை மூட்டையா இல்லே பணத்தை கொட்டி அழவேண்டியிருக்கு!''

''ஏன் பிள்ளைங்க படிக்க மட்டுமே தனியா கான்வென்ட் கட்டுவேனாக்கும்!''

''ரொம்பத்தான் கற்பனை! போதும். பொழுதோட வீடு போகணும்! அம்மா சந்தேகப்படுவாங்க. வரட்டுமா?''

''ஒரு கிஸ் பண்ணிட்டுப்போயேன்!''

''அலையாதீங்க! ஒண்ணு என்ன ஓராயிரமே தரேன். கல்யாணமாகட்டும்!''

''இந்த மூன்று வருடத்தில் உன்னிடம் ஒரு கிஸ் கூட கிடைச்சதில்லே!''

''வழியாதீங்க... ஓவரா ஒழுகுது! மூச்! எல்லாம் பத்திரமா பார்த்துக்கங்க! உங்களுக்கு ஒண்ணு ஆனாலும் எனக்கு தெரியவே தெரியாது! ஜாக்கிரதை உடம்பு பத்திரம். அதிகமா வேலையை இழுத்துப் போட்டுட்டு செய்யாதீங்க! என்ன?''

''தேவி உத்தரவு படியே நடக்கிறேன்! போதுமா?''

அவன் கேலியாய் கூறி செல்ல... சிரிப்போடே கண் கலங்கினாள். அவன் போகும் வரை வைத்தவிழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அண்ணி ரம்யா நல்லவள் என்றும் சொல்ல முடியாது. அவ்வளவு மோசமானவள் என்றும் சொல்ல முடியாது! இடைவெளி விட்டு பழகினாள். அவளோடு சொத்துக்கள் அத்தனையும் வர, அதனை பிரபாகர் பார்த்துக் கொள்ள

அசோக்குக்கு, பிரபாகர் இதுவரை பார்த்திருந்த பிசினஸ்ஸையும் பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை! முதலில் கொஞ்சம் வேலை பளுவால்



''அப்பா சொல்றதை கேக்கணும், இல்லேன்னா உருப்பட முடியாது.''

''அதுக்கு இப்ப வருத்தப்பட்டு என்னப்பா பிரயோஜனம். உங்கப்பா சொல்லும் போது கேட்டிருக்கணும்.''

?!?!?!

-ஆர்.மதுமதி, மதுரை.

இறைஞ்சியவன். பின்னர் சமாளித்து விட்டான்.

படிப்பு முடிந்து திவ்யப்பிரியா காத்திருக்க...

பிரபாகர் திருமணம் முடிந்த கையோடு.. தரகர் கொடுத்த போட்டோக்களை பார்த்துக் கொண்டிருந்தாள் சாரதா.

ஒரு நாள் வேலை முடிந்து வந்த அசோக்குமாரை அம்மா அழைத்து அருகில் உட்கார வைத்தாள். போட்டோக்களை எடுத்து கொடுத்தாள்.

''என்னம்மா?''

''போட்டோப்பா, தரகர் எப்பவோ கொடுத்துட்டுப் போனது. இன்று தான் எடுத்தேன். அண்ணாவுக்கு முடிஞ்சிடிச்சி! அடுத்தடுத்து நீ! உனக்கும் கல்யாணத்தை முடிச்சிட்டால்.. நானும் அப்படியே ராமா... கோவிந்தான்னு பூஜையறையில முடங்கிடுவேன்..''

அசோக்குக்கும் கல்யாண ஆசை வந்துவிட்டது. திவ்யப்பிரியா படிப்பு முடிஞ்சது ஒரு பக்கம் ஆசையை மூட்ட.. இங்கே அண்ணனும், அண்ணியும் அடிக்கும் கூத்து வேறு! அவை இம்சித்தது! நடு ஹாலில் கட்டிப்பிடித்துக் கொள்வதும்.. உரசிக் கொண்டு டி.வி.பார்ப்பதும்.. அவர்களின் அறையைத் தாண்டி தன்னுடைய அறைக்கு செல்லும்போது.. திறந்து போட்டுக் கொண்டே ஆசையாய் தழுவிக் கொண்டு நிற்பதையும்.. அவன் பார்க்காமல் போனாலும்.. அவனுடைய கண்ணிலும், கருத்திலும் பட்டு.. அவனுடைய ஆசைத்தீயை தூண்டி விட்டது.

திவ்யபிரியாவை பார்க்க சென்றாலும்.. ஒரு கைகொடுத்தால் இல்லை. எதாவது கேட்டாலும் 'கல்யாணம் ஆகட்டும்' என்ற முகத்தை காட்டுவாள்.

''என்னடா அசோக் யோசனை? இந்த போட்டோக்களைப்பார்! அண்ணியைப் போலவே பெரிய இடம்!'' என்று பேராசையுடன் சொன்னாள் சாரதா.

''பிடிக்கலே..!''

''பார்க்காமல் பிடிக்கலேன்னா.. என்ன அர்த்தம்?''

''காதலிக்கிறேன்னு அர்த்தம். ஏற்கனவே எனக்கான பெண்ணைப் பார்த்துட்டதா அர்த்தம்'' என்று சொன்னாலும் அம்மாவிடம் சொல்ல வேண்டியது தான். பயந்தால் வருமா? என்று துணிச்சலாய் பேசினான்.

''ஐயோ.. என்னடா இப்படி ஒரு குண்டைத் தூக்கி போடறே?'' அம்மா மைக்கில்லாமல் அலறினாள்.

''ஆபீஸ்ல இருந்து அலுத்து வந்தா ஒரு சொம்பு தண்ணீர்.. ஒரு கப் காபி கொடுக்காமல்.. வந்ததும் வராததுமாய் என்ன இது தொல்லை? ம்? கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை வந்துடிச்சி என் தேவையையும் பார்த்து பார்த்து கவனிக்க ஒரு ஆள் வேணுமில்லையா? அந்த ஆளை எப்போதோ பார்த்துட்டேன்!''

''எப்போடா?''

''காலேஜ்ல படிக்கும் போதே!''

''அவள் குடும்பம் எப்படி?''



''அவள் குடும்பம் பற்றி சொன்னால் உனக்குப் பிடிக்காது! ஆனால் பெண் ரொம்ப அழகு! குணத்திலே தங்கம்!'' என்றான்.

''அழகையும், குணத்தையும் கொண்டு போய் குப்பையில் போடு! ஆமாம் என்ன செய்வார்கள்?''

''ஒன்னுமே செய்யமாட்டாங்க! பெண்ணை மட்டும்தான் அனுப்புவாங்க!'' முகத்தில் அறைந்தது போல பட்டென்று சொன்னான்.

''என்னடா இடக்கா பேசறே?'' சீறினாள்.

''இடக்கா நான் பேசலை! நீங்க பேசறீங்க!''

பொண்ணு ஏழை! அம்மா மட்டும் தான்! எனக்கு பிடிச்சிருக்கு! நான் தானே அவளோடு வாழப்போறேன்.

பணம், சொத்து மட்டுமா சந்தோஷம்?''

''ஐயோ.. ஐயோ.. முதல்ல பொறந்ததுக்கும், கடைசியில பொறந்ததுக்கும் புத்தி ஏன்தான் இப்படி கோணலாப்போச்சோ! அவன்தான் என் பேச்சைக் கேளாமல் பஞ்சப் பரதேசியாய் அலைகிறான் என்றால், நீயுமா அசோக்?'' என்று சாரதா அலற... பிரபாகரும், ரம்யாவும் அறையிலிருந்து வந்தனர்.

''எம்மா... இப்படி பொழுது போன வேளையில் கத்தறே? விளக்கு வச்ச பின்னாடி இப்படி அலறாதேன்னு எத்தனை நாள் சொல்லியிருக்கேன். ஏய் அசோக்.. என்னடா சொன்னே?

எல்லாவற்றையும் புலம்பிக் கொண்டே சொல்லி முடித்தாள் சாரதா.

''அவனுக்கு பிடிச்சிருந்தா.. நாம் என்ன செய்ய முடியும்? அவன் இஷ்டத்துக்கே விட்டுடுங்க!''

''என்னடா நீயும், அவனுக்கு சப்போர்ட்டா பேசறே? அடித்து திருத்தாமல்!''

''சின்ன பிள்ளையா? பிசினஸ் கூடப்புலியாட்டம் இருக்கான். தனக்கு எது நல்லது? எது கெட்டதுன்னு அவனுக்கு தெரியாதா? அவன் போக்கிலே விடுங்க!''

''உன்னைப்போல வசதியான சம்பந்தம் வரும்னு ஆசைப்பட்டேனே எந்தகண்டாலியோ.. என் ஆசையில் மண் அள்ளிப்போட்டுட்டாளே!''

திவ்யபிரியாவை சொன்னதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது அசோக்குக்கு.. ''நாக்கை அடக்கிப் பேசுங்க'' என்றான்.

''கல்யாணத்துக்கு முன்னாடியே இப்படி கெடுத்து வச்சிருக்காளே! முடிஞ்சா அவள் பேச்சை கேட்டுட்டு என்ன ஆட்டம் போடுவானோ?'' அம்மா ஆடினாள்.

''எம்மா உயிர் போயிட்டாப்ல கத்தற! நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டான். விடும்மா. ஏய் அசோக்.. அந்த பெண் யாரடா? சொன்னால் சீக்கிரமே உன் மேரேஜை முடிச்சிடலாம். என்ன சந்தோஷமா? கவலைப்படாதே நான் இருக்கேன்!'' என்று பிரபாகர் கூற.. அசோக் மகிழ்ச்சியில் இரண்டு, இரண்டு படியாய் தாவி ஏறினான்.

இந்த மகிழ்ச்சி நிலைக்குமா? இந்தக் கேள்விக்கு உரிய பதில் அப்போது அவனுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

## இ

அசோக் தன் அம்மாவுடன் வர 'யார்? என்ன?'' எனத் தெரியாமல் மரகதம் விழிக்க...

''வீட்டுக்கு வந்தவளை வாங்கன்னு சொல்லி அழைக்கத் தெரியாத மரியாதை கெட்ட குடும்பத்தில் பெண் எடுக்க வந்துட்டான்'' என்று சாரதா முணகினாள்.

''ஆமாம், எங்கள் அசோக்கை கவர்ந்தவள்.. இந்த குடிசையிலா இருக்கா?'' என்று வெளிப்படையாய் கேட்டாள் சாரதா...

பிரியாவை அசோக் காதலித்த விபரத்தை பிரபாகர் சொல்லி முடிக்கவும்.. மரகதம் மகிழ்ந்து போனாள்.

''வணக்கம்மா.. வாங்கம்மா.. ஏய் திவ்யபிரியா.. என்ன செய்கிறாய்? வாடி!'' என்று குரல் கொடுக்க .. திவ்யா வந்தாள், வணங்கினாள். கீழ்க்கண்ணால் அசோக்கைப் பார்க்க. கண் சிமிட்டின.

''என் தம்பி அசோக்கின் உள்ளம் கவர்ந்த கன்னி நீதானோ? டேய் மடையா.. பெண் லட்சணமா இருக்கா! உன் தேர்வு அற்புதம்! ரியலி பென்டாஸ்டிக் அசோக்! '' வெளிப்படையாய் பிரபாகர் சொல்ல.. திவ்யபிரியாவின் முகம் அந்தி வானமாய் சிவந்தது.

''என்ன செய்வது? என் மகன் ஆசைப்பட்டுட்டான்! அடம் பிடிக்கறான். கடைசியாய் செல்லமாய் வளர்த்த பிள்ளை வேறு! எங்கள் தகுதிக்கும், அந்தஸ்துக்கும் ஈடு இல்லேன்னாலும் அதான் அவன் போக்குக்கே விட்டுட்டேன்! வாடிம்மா.. நீதான் எங்கள் அசோக்கை மயக்கி முடிந்து கொண்டவளா? ம்.. உன் யோகம் எங்கள் மாளிகையில வந்து வாழணும்ன்னு இருக்கே!''

திவ்யபிரியா, மரகதம் இருவரும் இந்த குதர்க்கப் பேச்சைக் கேட்டு துடித்துப் போய் விட்டனர்.

''அம்மா...!'' என்று அசோக் அதட்ட....

''என்ன ஜென்மமோ!'' என்று பிரபாகர் அலுத்துக் கொள்ள''

''என்னத்தே இப்படி பேசறீங்க?'' என்று ரம்யா கேட்க..

''உன்னையும் மதிச்சி அழைத்து வந்தது தான் பெரிய தப்பு!''

''என்னடா அசோக்.. மரியாதை இல்லாமல் அடுத்தவங்க முன்னாடி அவமானப்படுத்தறே?'' என்று சாரதா எரிந்து விழ...

''விடுங்க தம்பி! பெரியவங்க! தன் பிள்ளைக்கு பெரிய இடத்தில் இருந்து பெண் எடுக்கணும்ன்னு ஆசைப்பட்டிருப்பாங்க! அது நிறைவேறாமல் போன ஆதங்கத்தில் பேசுகிறார்கள். பெரிசு படுத்தாதீர்கள்'' என்ற தன்மையாய் மரகதம் சொன்னாள்.

''காலண்டரில் மிக நெருக்கத்தில் ஏதாவது முகூர்த்த நாள் இருந்தால் பாருங்கள்!'' என்று கட்டளையிட பிரபாகர் பார்த்தான்.

''இன்னும் பன்னிரெண்டு நாளில் முகூர்த்தம் இருக்கு! சரியாம்மா?''

''சரிடா, என்ன மரகதம் சரியானா?'' ராஜதோரணையில் கேட்டாள் சாரதா.

''விருப்பம், ஆனால் எங்களால் உங்கள் தகுதிக்கு செய்ய



முடியாதும்மா''

''நீங்க நினைச்சாலும் முடியாதுன்னு எனக்கும் தெரியும். நீயும், உன் மகளும் கையை வீசிட்டு மண்டபத்துக்கு வந்தாப் போதும்!'' என்று சாரதா கூற...

''ச்சோ!'' என்று அசோக் தலையில் தட்டிச் சொன்னான்.

''தாலி, கூறை பட்டு எல்லாம் உனக்கு பிடிச்சாப் போல் எடுத்துடலாம். நாங்க வரட்டுமா?'' என்று பிரபாகர் சொல்ல..

''பட்டு வேண்டாம் மாமா.. ஆயிரக்கணக்கான உயிரில் தான் பட்டு சேலை கிடைக்குதுன்னு, விபரம் தெரிஞ்சி.. படிச்ச பின்னாலேயே, பட்டு மேல ஆசையை விட்டுட்டேன். சாதாரண சேலையே போதும் மாமா!'' என்றாள் திவ்யபிரியா.



''உங்க வீட்டுக்கு வந்து, உங்களைக் கேட்காமலேயே ரொம்ப உரிமையோட நாளிதழை எடுத்துண்டு போறாரே! யாருங்க அவரு?''

''அவர்தாங்க அந்த நாளிதழை சொந்தமா வாங்கினவரு!''

-அனன்யா, திருச்சி.

அசோக்கும் அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

எல்லோரும் விடைபெற்றுப் போக... அசோக் தயங்கி நின்றான். பின் திவ்யாவைப் பார்த்து சொன்னான்.

''என்ன பிரியா? இப்போ சந்தோஷமா? பெரிசா பயந்துட்டு இருந்தாயே! எப்போர்ப்பட்ட அம்மாவையே அடக்கி இழுத்துட்டு வந்துட்டேன்! இப்போ தெரியுதா இந்த ஐயாவோட திறமையை!''

பிரியா கையெடுத்து கும்பிட்டாள். தாங்க முடியாமல் விம்மினாள். ''என்ன பிரியா? இது? சந்தோஷமான நேரத்தில் அழுகிறாயே! கண்ணைத்துடை! உன் அம்மா வர்றாங்க. நான் வரேன்'' என்று கூறிவிட்டு சென்றான்.

மறுநாளே டெல்லியிலிருந்து முக்கியமான போன் வந்தது. பெங்களூரில் ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த புதிய தொழிற்சாலையை கூட்டாக நடத்து பற்றி நடத்தி ஒப்பந்தம் தயார் செய் என்று!

''என்னடா அசோக் செய்வது?''

''தெரியலையே அண்ணா!''

''இது சம்பந்தமான டீடெய்ல் எல்லாமே உனக்குத்தான் தெரியும். இன்னும் பத்துநாளில் கல்யாணம்! அவங்க ஒப்பந்தம் கேட்கறப்ப போகலைன்னா.. அனுமதியையும் ரத்து செய்தாலும் செய்துடுவாங்க. என்ன செய்யலாம்?'' பிரபாகர் கையைப் பிசைந்து கொண்டான்.

அம்மா சொன்னாள்.

''ஏய் அசோக் இப்போ விட்டியானால் முடியாது. வேலையை

முடிச்சிட்டு கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்போ.. அல்லது கல்யாணத்துக்கு முதல் நாளே வந்து சேர்! மண்டபம் பிரச்சனை இல்லை! பத்திரிக்கை, சேலை, தாலி வாங்குவதை பிரியாவை அழைத்துக் கொண்டு அண்ணனும், அண்ணியும் பார்த்து வாங்கி விடுவாங்க!''

''அம்மா சொல்லறதும் சரிதானே அசோக்! கொஞ்சம் சிரமம் பாராமல்.. கஷ்டப்படாமல் போனால் நன்றாய் இருக்கும்!'' அண்ணா கெஞ்சினான்.

''சரிபோறேன். சீக்கிரமே வேலை முடிந்து திரும்பறேன்! பிரியாவைப் பார்த்து சொல்லிட்டு வந்துடறேன்.'' அசோக் கிளம்பினான்.

''மணி ஏழு ஆச்சு! இந்த ராத்திரியில் எதுக்கு? நாளை சொல்லிக்கலாம் அசோக்!'' அம்மா சொல்ல...

''இல்லேம்மா.. இது சம்பந்தமான டிடெயில்ஸ், பைல்லை திரட்டி.. கிளம்பவே நேரம் நாளை சரியாய் இருக்கும் வந்துடறேன்!''

அசோக் அங்கே வந்தபோது அவள் மட்டுமே படுக்கையறை கட்டிலில் படுத்துக் கொண்டு... அவன் போட்டோவிற்குத்தான்.. ரசனையோடு முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். அசோக் உள்ளே வந்து.. கதவை மூடிவிட்டு.. அவளருகில் வரும் வரை தெரியவில்லை... திவ்ய பிரியாவிற்கு!

''அம்மா எங்கே பிரியா?'' கேட்டதும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தவள் ''மா..மாமா வீ.. வீட்டுக்கு'' என்று நாக்கு குழறினாள். கையிலிருந்த போட்டோவை பின்புறமாய் மறைத்தாள். பின்னர் சமாளித்து...

''என்ன இந்த நேரத்தில்?''

''உன்னைப் பார்க்காமல் இருக்க முடியலையே!''

''பொய்தானே? இன்னும் பத்துநாளில் உங்க பக்கத்திலே தானே இருக்கப்போறேன்!'' கொஞ்சலாக கேட்டாள்.

''பிரியா... நான் சொல்வதைக் கேட்டு வருத்தப்படக்கூடாது!''

''என்ன சஸ்பென்ஸ் எல்லாம் பலமா இருக்கு!''

''நாங்க புதுசா ஆரம்பிக்கப்போற தொழிற்சாலை தொடர்பா ஏற்கனவே கவர்மென்ட்ல பரிசீலனைவிட இருந்திச்சு நாளை டெல்லிப்போறேன். அனேகமாய் கல்யாணத்துக்கு முதல் நாளோ... இரண்டு நாள் முன்னதாகவோ வந்துடுவேன். அதை சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்!'' அவன் வருத்தத்துடன் கூற...


''என்ன அசோக்? எனக்கு பயமா இருக்கே! இப்படி ஒரு பெரிய குண்டைத் தூக்கி போடறீங்களே!'' கண்கலங்கினாள்.

''ஒன்னும் பயம் வேண்டாம்! அண்ணா, அண்ணி இருக்காங்க! உன்னை அழைத்துப் போய் வேண்டிய நகையும், துணியும் எடுத்து தருவாங்க?''

''நகையும், சேலையும் யார் இல்லேன்னு அழுதா? எனக்கு நீங்க மட்டும் போதும்! என் பக்கத்திலே இருங்க. என்னை விட்டுட்டு போக வேணாம்!'' அழுதாள்.

''சீக்கிரமே வேலை முடித்து வருவேன்! இங்கே பார் பிரியா! எதுக்கு பயப்படறே? வரமாட்டேன்னா?''





''ம்கூம்...?''

''பின்னே? பைத்தியக்காரி! பயப்படாமல் கல்யாண கனவு கண்டுகிட்டு இரு. அப்படியே உன் மச்சான் சீக்கிரமே வேலையை முடித்து.. உன்னைப் பார்க்க ஓடோடி வருவேன். என்ன கலக்கம் போயிடுச்சா? இந்த அழுமூஞ்சியைப் பார்க்கவா இவ்ளோ தூரம் வந்தேன்! கொஞ்சமாய் சிரிக்கக்கூடாதா?'' அவள் எதிரே கட்டிலில் அமர்ந்தவன், கேட்டான்.

''அம்மா எப்போ போனாங்க?''

''இப்போதான், வர்றதுக்கு பத்துக்கு மேல் ஆகும்!''

''நான் துணையிருக்கவா?''

''கட்டுசோறுக்கு பெரிய எலி துணையா? சர்க்கரைக்கு காவலா? வேணாம் சாமி.. சொல்லிட்டீங்க இல்லையா? கிளம்புங்க'' அவனை விரட்டப்பார்த்தாள்.



ஏய் மிஸ்டர்! என் மேலே எதுக்கு உரிச்ச நிலக்கடலையை தூக்கி போட்டுக்கிட்டே இருக்கே?

ஹி! ஹி!! உங்க கிட்டே கடலை போட்டுக் காட்டுறேன்னு பிரண்ட்ஸ்கள் கிட்டே சவால் விட்டிருக்கேன்.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

''போறேன், அதுக்கு முன்ன கையில என்ன போட்டே? என்னோடது தானே! நிழலுக்கு முத்தமிடுவது! ஆனால் நிஜத்துக்குத்தான் தரமாட்டே.... இல்லையா? அண்ணாவும், அண்ணியும் அடிக்கற கூத்தைப் பார்த்து... என்னால் முடியலே பிரியா! ஒரு முத்தத்துக்கு கூட தகுதியில்லாதவனா? அவ்வளவு கேவலமானவனா?''

''என்ன இது பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்கு! முதல்ல கிளம்புற வழியைப் பாருங்க!'' விபரீதம் உணர்ந்து அனுப்ப முற்பட்டாள்.

''என்ன பிரியா? வெளியூர் போறேன்! திரும்பி வர நாளாகும். உன்னை ஒவ்வொரு நிமிடமும் மறக்க முடியாமல் இருக்க.. ஒரே ஒரு சின்ன முத்தம் கேட்டால் பிகு பண்றீயே! கல்யாணமும் நிச்சயமாயிடிச்சி! இந்த மூன்று வருடமா உன் நகத்தைக்கூட தொட அனுமதிச்சது இல்லே! நம்ம காதல் சைவமா இருந்துடிச்சே! அசைவத்துக்கு இடம் கொடாத அரக்கி.. இந்த உலகில் நீ ஒருத்தி மட்டும் தான் இப்படி இருப்பே! நான் என்ன கெஞ்சினாலும் மனம் இறங்கமாட்டே! எனக்குத் தெரியும். எனக்கு உன் மேல் பயங்கர கோபம்! ராட்சஷி.. நான் போறேன்டா!'' என்று கோபத்தோடு புயலாய் வெளியேற இருந்தவனை.. தென்றலாய் இழுத்து அணைத்தாள். கன்னம், நெற்றி, உதடு என மாறி, மாறி முத்தமிட்டாள். அசோக் எதிர்பாராத இவளின் செயலால் திக்குமுக்காடிப் போனான்.

''போதுமா? போதுமா? பத்திச்சா? பத்தலையா? இன்னும் வேணுமா? ராட்சஷா... நீ அசர அசர உன்னை என்ன செய்கிறேன் பார்.



சைவம், சைவம்னு புலம்பினியே! இனி புலம்புவாயா? அரக்கியா நான்? ராட்சஷியா நான்? ராட்சஷி என்ன செய்வான்னு தெரியுமா? இப்படித்தான் கடிச்சி குதறுவா! இனி உன் வாழ்நாளில் முத்தம் வேணுமின்னு கேட்பாயா?'' வெறியோடு முத்தமிட்டு.. அவன் உதட்டை கடித்து வைத்தாள். அவனை விலக்கி நிறுத்தினாள். பெருமூச்சு வாங்கினாள்.

அவன் உடம்பில் குப்பென தீப்பற்றிக் கொண்ட உணர்வு. அவன் ஒரு மாதிரி ஆனான். அவளைத் தாவி அணைத்துக் கொண்டான்.

''வேணாம்.. வேணாம் அசோக்! விடுங்க'' அவள் அவனிடம் விடுபட நினைத்து அவளையும் அறியாமல் அவன் கழுத்தில் கைகோர்த்து தன் வசம் இழுத்தன.

''இப்பவே நீ எனக்கு வேணும்டா! அதுவும் முழுசா! இன்னும் பத்துநாளில் நீயும் நானும் புருஷன், பொண்டாட்டி! அதுவரைக்கும் என்னால் தாங்க முடியாது! இப்போதே நீ எனக்கு மனைவியா வேணும்! என் பொண்டாட்டியானால் என்ன சுகத்தை கொடுப்பாயோ.. அந்த சுகமெல்லாம்.. இப்போதே.. இந்த நொடியே வேணும்! நான் சொன்னால் கேட்பாய்தானே! நீ வேணும்டா செல்லம். கண்ணம்மா.. உன்னையும் என்னையும் இனி பிரிக்கவே முடியாதுன்னு தெரிஞ்ச பின்னாடி.. அப்புறமும் என்ன தயக்கம்? ம்?'' அவன் அணைப்பை மேலும் நெருக்கமாக்கினான்.

''வேணாம் அசோக். தப்பு.. இது தப்பு! தாலியில்லாமல்.. இதெல்லாம் தப்புடா.. விடுடா என்னை?'' ஒரு நொடி ஆவேசம் வந்தவளாய் பிடித்து தள்ள முயன்றாள்.

''ஒரு மஞ்சள் கயிறுதான்.. உன்னையும், என்னையும் இப்போ பிரிக்குதுன்னா.. அந்த மஞ்சள் கயிற்றையும் இப்பவே கட்டத்தயார்! சாமி ரூம்ல ஏதாவது மஞ்சள் கயிறு இருந்தா கொண்டு வா..''

''உளறாதீங்க.. பெரியவங்கள் இல்லாமல் திருட்டுத்தனமாய் கட்டுவது தாலி அல்ல.. அது வெறும் கயிறாயிடும்! போங்க..'' முதல்ல இங்கிருந்து போயிடுங்க'' கையெடுத்துக் கும்பிட்டாள்.

''இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்னு எல்லாப் பெண்களுமே தயாராய்.. ரெடிமேடாய்.. ஒரு வார்த்தையை சொல்லிட நீங்களே எனக்கு நீ..! உனக்கு நான்! என்று ஆனப்பின்னாலும் விரட்டுரீயே பிரியா? இது நியாயமா?''

''ஏதாவது பேசி என் மனசை எதிர்பார்க்காதீங்க! அப்புறம் இந்த தப்புக்கும் துணை போனவளாயிடுவேன்! போ.. போங்க.. ப்ளீஸ்.. கெஞ்சினாள்.

அவன் மீண்டும், மீண்டும் ஆசையாய் அணைக்க.. அவளும் கள்ளுண்டவள் போலானாள்.

''என் உடல் நீ! என் உயிர் நீ! என் ஆத்மாவும் நீ! அத்தனையும் நீ தாண்டி ராஜாத்தி! நீயே நானாய் இருக்க.. நம்மை இனி யாராலுமே பிரிக்க முடியாது! வாடி... இப்போ நான் பசிச்சி இருக்கேன். பசிச்சப்ப சாப்பிட்டாத்தானே ஆனந்தமாய் இருக்கும். புரிஞ்சுக்கோ என் குட்டிச் செல்லம்! உன்னைப் பிரிஞ்சி ஒரு நிமிடம் உயிர் வாழ்வேனா? என்

அம்மாவின் பேச்சைக் கேளாமல்.. மதியாமல் உன்னைத்தான் பண்ணிப்பேன்னு அடம் பிடித்தவள் நான்! செத்துடுவேன்னு மிரட்டிய அம்மாவை... சாவுன்னு அலட்சியம் பண்ணிவிட இந்த அசோக் கேட்டால் தர மறுக்கிறியே! எல்லாமே உனக்காகத்தான் செய்தேன். என் காதல் எவ்வளவு ஆழம்னு உனக்குத் தெரியும் தானே! அப்படி தெரிஞ்சவளே.. அனுபவபூர்வமாய் அறிந்தவளே.. என்னை நம்பலேன்னா என்ன அர்த்தம்?

''எதுவும் பேசாதீங்க.. போங்க!'' அவள் வேகம் கண்டு மிரண்டான்.

''இது என்னடி வீம்பு? இது என்னடி அடம்? ம்? திரும்பவும் கேக்கறேன். என்னை நீ நம்பலையா? இவன் ஏமாத்துக்காரன்னு நினைச்சுட்டியா?'' அவள் முன்பு மடிந்து.. மண்டியிட்டு கெஞ்சியவனைத் தூக்கி.. தாள முடியாமல் அணைத்துக் கொண்டாள்.

அவளை அவன் ஆட்கொண்டான். 5 நிமிடங்கள் மவுனமாய் கழிந்தன. உலகத்து சுகத்தையெல்லாம் அனுபவித்த திருப்தியில் எழுந்தான்.

அவள் எழுந்து அமர்ந்து.. அழுதாள். விக்கி.. விக்கி... விம்மி.. விம்மி அழுதாள்.

''ஏய்.. ஏய்.. கண்ணம்மா.. பிரியா.. இங்கே பார்டா! என்னடா இது அழுகை? இப்போ உன் முன்னாடி இருப்பதும், உன்னை விட்டுப் போகப்போறதும் வெறும் அசோக் இல்லே! உன் புருஷன் அசோக்! பிரியா குட்டியோட புருஷனைத்தான் இப்போ டெல்லிக்குப் போறேன்! உடனே வேலையை முடித்து சீக்கிரமே.. திரும்பி.. இந்த சங்கு கழுத்தில் தாலிகட்டி.. கைப்பிடிப்பேன். கலங்காதே! என்னை நம்பு! உன்னைத்தவிர.. இந்த ஜென்மத்துல இல்லே.. ஏழேழு ஜென்மத்துக்கும் உன் புருஷன் நான்தான்! என் பொண்டாட்டி நீதான்!'3

அவள் அழுகை அதிகமானது.

''அந்த கடவுளே குறுக்கே நின்னாலும்.. நம்மைப் பிரிக்க முடியாது! சத்தியம் பிரியா. உன் அசோக்கை மூன்று வருடமாய் தெரியும் தானே! நான் தப்பானவனா? உன் மேல் என் விரல் நகம் பட்டிருக்குமா?''

அவள் இதயமே வெடித்து விடும் அளவு கதறி.. அவன் மடியில் விழுந்தாள். அவன் மெல்லத் தட்டிக் கொடுத்தான்.

''பைத்தியக்காரி! திரும்பவும் அழுதா என்ன அர்த்தம்? என்னை நம்பலேன்னு தானே! நான் கிளம்பணும், சிரிடி.. சிரிச்சுட்டே விடை கொடு! உன் அசோக்.. உடனே வேலை முடிஞ்சி.. உன் மேல் பைத்தியம் கொண்டு ஓடி வருவேன். உன் கணவனாகவும், காதலனாகவும் ஒன்றே, ஒன்று சொல்கிறேன். கேட்கறியா? ஜென்மா, ஜென்மத்துக்கும் தேவையான சந்தோஷத்தை அனுபவித்த உணர்வு! திருப்தி! நான் போயிட்டு வர்றேன்'' என்று எழுந்தான்.

அவள் மீண்டும் அழ...

''ஏய் பிரியா..நான் உடல்னா.. நீ என்னோட உயிர்டா! உயிர் பிரிஞ்சி உடல் வழுமா? அது போல அசோக்கும், பிரியாவும் பிரிக்கவே முடியாத கலவைகள்! நம் காதல் உண்மைக்காதல்! உன்னதமான காதல்! நாம் ஜெயிப்போம்!''



அசோக் நினைத்துக் கொண்டவனாய்.. தன் பையிலிருந்த செக் புக்கை எடுத்து.. இரண்டு லட்சத்துக்கான செக். உனக்குத் தேவையானதை வாங்கிக்கோ பிரியா!''

''இப்போ சந்தோஷப்படுத்தினதுக்கான கூலியா? அதெல்லாம் வேண்டாம்'' என மறுத்தாள்.

''சேச்சே.. என்னை என்ன அந்த அளவு கீழ்த்தரமானவன்னு நினைச்சியா? உனக்கு வேண்டியதை, விரும்பியதை யார் தயவும் இல்லாமல் வாங்கிக் கொள்வாய் என்று தான் கொடுத்தேன். தப்பான அர்த்தம் வர்றதா இருந்தா.. நான் தரலே பிரியா...'', என்றவன் அதை சுக்கல் சுக்கலாய் அவள் முன்பு கிழித்துப் போட்டான்.

''என்னை ஏமாத்திட மாட்டீங்களே?'' உருக்கமாய் கேட்டாள்.

''நான் அந்த அளவு கொடூரனா? ஏமாற்ற நினைத்து இருந்தால் இது நாள் வரை ஏன் காத்திருக்கணும்? கல்லூரியில் படிக்கும் போதே அனுபவிச்சி.. விட்டிருக்க மாட்டேனா? உன்னைப் பார்த்த பின்னால் தான் காதலே வந்தது! என் வாழ்க்கை முழுக்க.. நீ வேணும்டா பிரியா குட்டி! இப்பவே நாம புருஷன், பொண்டாட்டி ஆயிட்டோம். திரும்பவும் சந்திக்கும் போது.. நாம் இருவரும் எல்லோரும் வாழ்த்துற கணவன், மனைவியா இருப்போம்! பயப்படாதே! நான் வரட்டுமா? இந்த நாள் என் வாழ்நாளிலே.. மறக்கவே முடியாத நாள்டா தங்கம்! தேங்க்ஸ்.. தேங்க்ஸ்டா பிரியா!'' அவள் கையைப்பற்றி அழுத்திச் சொன்னான்.

''நான் வரட்டுமா?''

''ம்..'' என்று அவனை விழுங்கி விடுபவள் போலப்பார்த்து தலையசைத்தாள்.

கதவு வரை சென்ற அசோக்.. மீண்டும் அவள் அருகே வந்து.. அவள் எலும்பெல்லாம் நொறுங்கி விடும் அளவு அணைத்து.. முத்தமிட்டு விட்டு.. பிரிய மனமில்லாமல் பிரிந்து போனான்.

அவன் புன்னகை புரிந்து.. கையசைத்து விட்டுச் சென்றான். இனி அவன் வாழ்க்கையில் விதித்திருப்பது வேறு விதமாய் கேலியாய், புன்னகைக்கப்போவது தெரியாமல்!

## ௯

அழகிய இளமாலை நேரம்!

அந்த பெரிய பங்களாவின் உள்ளே.. தவ நகரீக இளம் புயல் ஒன்று உள்ளே புகுந்தது. அந்த புயலின் பெயர் கிருத்திகா!

அந்த பெரிய போட்டோவில் இருக்கும் இளைஞன் அவளைக் காந்தமாய் கவர்ந்தான். வசீகரிக்கு புன்னகையுடன் இருந்த அசோக்கையே வைத்த விழி எடுக்காமல் பார்த்தாள்.

''அடடே.. கிருத்திகா குட்டியா? அமெரிக்காவுல இருந்து எப்போ வந்தே? உட்காருடி!'' என்று ரம்யா

வரவேற்க..

''யார் அக்கா இது?''

''என் மச்சினன்! உன் சின்ன அத்தான் அசோக்குமார். நீதான் என் கல்யாணத்துக்கு வரலியே! அத்தே.. அத்தே!'' என்று குரல் கொடுக்க.. சாரதா வந்து பார்த்தவள் புரியாமல்..

''யார் ரம்யா இது?'' என்றாள்.

''என் சித்தப்பா பெண்! என் கல்யாணத்துக்கு வரமுடியல. அமெரிக்காவுல மெடிக்கல் படிக்கறா.'' என்று ரம்யா அறிமுகப்படுத்த..

''சின்ன சம்பந்தி சண்முகம் பொண்ணா? அட... எவ்வளவு அழகாயிருக்காளே'' என்று வியந்து போனாள்.

''என் மகன்தாம்மா, என்ன அப்படி பார்க்கிறாய்?''

''என்ன செய்கிறார்?''

''பிசினஸ் செய்கிறான். என் பிள்ளை ரொம்பவே திறமைசாலி! புதுசா பெங்களூர்லஒரு பாக்டரி ஆரம்பிக்கப்போறோம். அது தொடர்பான வேலையா இன்று தான் டெல்லி கிளம்பினான்.

ரம்யா ஆர்வமுடன் சொன்னாள்.

''ஏய் கிருத்திகா... என் மச்சினனுக்கு அடுத்த வாரம் கல்யாணம்! பெண் இந்த ஊர்தான். அவர் படிச்ச காலேஜ்ல படிச்சாளாம். படிக்கறப்போவிலிருந்து லவ்வாம். அத்தை ஒத்துக்கலே மகனோட பிடிவாதத்துக்காக.. பிடிக்காமலேயே கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்க.''

''என்ன ரம்யா உன் தங்கையை உட்கார வைத்து உபசரிக்காமல்.. பேசிக் கொண்டிருக்கிறே? அம்மா என்ன சாப்பிடறே? கூல்டிரிங்ஸ் கொண்டு வர சொல்லவா?

''நோ.. தாங்க்ஸ் ஆண்ட்டி!'' என்று சொல்லி ஷோபாவில் அமர்ந்து.. செல்போனில் நம்பரைத் தட்டி.. அவளுடைய தந்தையை லைனில் பிடித்தாள்.

''நான் கிருத்திகா. என்னடாடி பண்றீங்க?''

''என்னடா கிருத்திகா? நான் முக்கியமான மீட்டிங்க்ல இருக்கேன். எதுனா முக்கியமான விஷயமா? அப்புறம் பேசலாமே! ப்ளீஸ்டா..'' அவர் கெஞ்சினார்.

''ரம்யா அக்கா வீட்டுக்கு வர எவ்வளவு நேரமாகும்.. நம்ம ஆபிஸ்ல இருந்து?''

''ஒரு பத்துநிமிடம் போதும்! ஏன்? என்னடா? அங்கிருந்து தான் பேசறியா?'' பதற்றமாய் கேட்டார்.

''ஆமாம், என்ன செய்வீங்களோ தெரியாது! மீட்டிங்கை கேன்சல் பண்ணிட்டு.. அடுத்த பதினொன்றாவது நிமிடம் இங்கிருக்கணும்.''

''என்னடாம்மா விஷயம்? முடியாதுடா, வாரிடா கண்மணி!''

''இந்த முடியாதுங்கிற பேச்சுக்கே இடமில்லை! உடனடியா வரணும். வரலேன்னா நடப்பதே வேறு! வந்து சேருங்கள்! தாமதம் எனக்கு பிடிக்காதுன்னு தெரியுமில்லையா?'' என்று கட்டளையாய் கூறிவிட்டு.. அவர் எதிர் முனையில் கெஞ்சுவதை அலட்சியம் செய்து.. செல்லை



அணைத்தாள்.

''ஏய் கிருத்திகா... எதுக்கு இப்போ அவசரமா சித்தப்பாவை வரச் சொல்றே? அவர் ஏதோ மீட்டிங்கில் இருப்பதாய் கெஞ்சறார். அறிவில்லையா? இங்கே அப்படி என்ன தலை போறப்பல காரியம் நடந்துடிச்சிரும்?''

''பேசாதே! சும்மா இரு!'' கிருத்திகா எரிச்சல் பட்டாள். நகத்தைக் கடித்துத் துப்பினாள்.

''என்னம்மா...?'' என்று தயக்கமாய் இழுத்த சாரதாவைப் பார்த்து...

''கொஞ்சநேரம் சும்மா இருக்கீங்களா ஆண்ட்டி? ப்ளீஸ்..'' சொல்லிவிட்டு... அசோக்கையே பார்த்துக் கொண்டிருக்க... இருவரும் புரியாமல் தலையை பிய்த்துக் கொண்டிருக்க....

கொஞ்ச நேரத்தில் சண்முகம் வாட்சைப் பார்த்துக் கொண்டு ஓடி வர...



'மதியம் தினமும் கரெக்ட்டா ஒரு மணிக்கு ஒரு போன் பண்ணு'

'எங்க?'

'லஞ்ச் டைமுக்கு ஆபீஸ்ல யாரும் என்னை எழுப்ப மாட்டேங்கிறாங்கடி!'

-எம். அசோக்குமார், அரவக்குறிச்சிப்பட்டி.

''கிருத்திகா.. ஏன் என்னை இங்கே வரவழைச்சே முக்கியமான மீட்டிங்கல இருக்கும் போது.. இப்படியா கேன்சல் பண்ணிட்டு வரவழைப்பாய்! பிசினஸ்ல எவ்வளவு லாபம், நஷ்டம் பிரச்சனைகள்.

''சும்மா எதையாவது அறுக்காதீங்க! உங்க பெண்ணோட சந்தோசத்தை விட.. பிசினஸ் பெரிசா? இது யார்?'' என்று போட்டோவை கைகாட்டி கேட்டாள்.

முட்டாள் பெண்ணே! ரம்யா சொல்லலையா?'' கடுப்புடன் கேட்டார்.

''நீங்க சொல்லுங்க?'' அதிகாரமாய் கேட்டாள்.

''நம்ம சின்ன மாப்பிள்ளை அசோக்குமார்!''

''இந்த சின்ன மாப்பிள்ளை.. உங்க மாப்பிள்ளை ஆகணும்!''

''என்ன சொல்றே?'' அவர் புரியாமல் கேட்க.. சாரதா, ரம்யாவுக்கும் இதே நிலை தான்!

''உங்க மாப்பிள்ளைப்பா அவர் இனிமேல்! உங்க பெண்ணைக் கட்டிட்டா.. உங்கள் சொந்த மாப்பிள்ளை தானே! இந்த கிருத்திகாவுக்கு அத்தானை ரொம்ப, ரொம்ப பிடிச்சிருக்கு!''

''அவனுக்கு இப்பத்தான் கல்யாணம் கூடப் பேசி முடிச்சிட்டாங்களே!'' என்று சண்முகம் பதற்றத்துடன் கூற...

''எனக்கு அதெல்லாம் தெரியாது! எனக்கு இவர் தான் வேணும்! என்

புருஷனா வேணும்! கட்டினால் இவரைத்தான் கட்டிப்பேன்'' அவள் முடியாமல் கூறினாள்.

''உன் படிப்பு முடியலையே! அதுக்குள்ளே மேரேஜுக்கு என்ன அவசரம்?''

''இவரை மேரேஜ் பண்ணிட்டு படிப்பை கன்டினியூ பண்றேன்!''

''என்ன பெண்ணம்மா நீ?''

''நான் இவர் இல்லைன்னா.. காலம்பூராவும் கல்யாணமே வேணாம்னு இருப்பேன்! சம்மதமா? உங்களுக்கு என்னை விட்டால் வேறு பிள்ளைங்களே இல்லை! உங்க பரம்பரை.. குலம் என்னோட வே முடிஞ்சிடும். உங்க குலம் தழைக்கணும்னா.. எனக்கு இவர் வேணும் டாடி! என்னைப் பற்றி தெரியுமில்லையா? மனசை மாத்திக்கமாட்டேன்! பிடிவாதம் பிடித்தால் விடமாட்டேன்! ஒன்றை நினைத்தால் ஜெயிக்காம விடவே மாட்டேன்னு தெரியும்தானே? ஆன்டியிடம் பேசுங்கள்! அவரை எனக்கு மாப்பிள்ளையா கேளுங்கள்!''

''வேணாம்மா.. ஒரு கல்யாணம் நடக்கப்போகும் போது குறுக்கே நுழையலாமா? மாப்பிள்ளைக்கும், அவளுக்கும் காதல் வேற! காதல் ஜோடியைப் பிரிக்க வேண்டாம்! ஒரு பெண்ணின் பாவம் வேண்டாம்! மாப்பிள்ளை இதுக்கு ஒத்துக்க மாட்டார். பிடிவாதக்காரர், வேண்டாம் கிருத்தி. உன் முடிவை மாற்றிக் கொள். போகலாம் வா.'' அவர் எழ.. அவரைப் பிடித்து அமர்த்தினாள்.

''உங்களை இப்படி வேதாந்தம் பேசவா வரவழைத்தேன்! எனக்கு தெரியாது! ஆனால் இவர் எனக்கு கண்டிப்பா வேண்டும்! அவங்க குறித்த தேதியில்.. அசோக் அத்தான் என் கழுத்தில் தான் தாலியைக் கட்டணும்! எனக்குத்தான் மாப்பிள்ளையாகணும்! நான் முடிவு பண்ணிட்டேன். என் முடிவை மாற்றிக் கொள்வதாய் இல்லை!'' வேகமாய் பேசி முடித்தாள்.

''இப்படி பிடிவாதம் பிடிப்பாய் என்று தெரிந்தால்.. தெரிந்திருந்தால்... முன்பே பேசி முடிக்கலாமே!''

''எனக்கு தெரியுமா? இப்படி ஒரு அழகான சின்ன அத்தான் இருப்பார் என்று! அத்தையிடம் நீங்கள் பேசுகிறீர்களா? நான் பேசட்டுமா?

''பத்திரிக்கை அடிக்க கொடுத்தாச்சி! எங்க அசோக்கை பற்றி உனக்கு தெரியாதுடி'' ரம்யா சொல்ல...

''நான் இந்த வீட்டு இரண்டாவது மருமகளாய் வருவது பிடிக்காமல் தானே.. பேசுகிறாய்!''

''ஏய் ஆசே! என்ன பேசுகிறாய்? அப்படி ஒரு அதிர்ஷ்டம் உனக்கிருந்தால்.. முதலில் மகிழப்போவது நான் தான்!''

''அத்தை, நீ, பெரியத்தான் மூவருமாய் நினைத்தால் முடியும்! எல்லோரும் அவரைக் கட்டாயப்படுத்தினால்.. உங்களை மீறி எங்கே போயிடுவார்? ம்? என் மனம் அவரை நாடி விட்டது. போட்டோவிலேயே இத்தனை கம்பீரமாய்... அழகாய்... ஆண்மையாய் இருப்பவர்.. இன்னும் நேரில் பார்த்தால் எப்படி இருப்பாரோ! எனக்கு இந்த அழகு தேவன் வேண்டும்! என்னை மணந்து கொள்ள இவர் ஒருவருக்கு மட்டுமே தகுதி



உண்டு! என்னை கோபப்படுத்தாதீர்கள்! என் பொறுமையை சோதிக்காதீங்களே டாடி!'' நான் கத்திடுவேன் டாடி! உங்களுக்குத்தான் அவமானம். பிளீஸ் டாடி.. உங்க பெண்ணோட ஆசையை நிறைவேத்துங்க!'' கெஞ்சினாள், கடைசியாய்.

கொஞ்ச நேர யோசனைக்குப்பின் சாரதாவைப் பார்த்து சொன்னார்.

''சம்மந்தியம்மா.. என் குழந்தையை தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்! சின்ன வயசுல இருந்தே அவள் ஆசையை, தேவையை நிறைவேற்றி பழக்கியதால் வந்த கெட்டபழக்கம்.. இந்த பிடிவாத குணம்! என் பெண்ணோட சந்தோஷம்.. மகிழ்ச்சிதான்.. எனக்கு முக்கியம். ஒற்றைப் பெண்! ஏக போக சொத்துக்கு உரிமைக்காரி! மாப்பிள்ளையை அவளுக்கு பிடித்து விட்டபின்.. ஒரு தகப்பனாய் இருந்து.. அடுத்த பெண்ணுக்கு பாவம் பார்க்க முடியலை! இந்த கல்யாணத்தை நிறுத்திட்டு.. குறித்த தேதியில் என் பெண் கழுத்தில் தாலி கட்டச் சொல்லுங்க! அதற்கு அடுத்த வினாடியே.. அத்தனை சொத்தையும் மாப்பிள்ளையிடம் தூக்கி கொடுத்து விடுகிறேன் என்னம்மா?'' என்று மனசாட்சியே இல்லாமல் கேட்டார்.

''பத்திரிக்கை அடிக்க கொடுத்தாச்சு, இவளை விட அவனும் பிடிவாதக்காரன்!

''நான் புதுசா... அதைவிட காஸ்ட்லியா.. லட்சம் பத்திரிக்கை அடிக்கக் கூட ஏற்பாடு செய்கிறேன்.''

''அதெல்லாம் இருக்கட்டும் அவன் வேறு இப்ப ஊரில் இல்ல. இல்லை! அவன் சம்மதிக்காம செய்ததை ஒத்துப்பானாங்கறது சந்தேகம்'' ''ரொம்ப வசதியாப் போச்சு! கல்யாண மேடையில உன்னைப் பார்த்துக்கட்டும். நாலுபேர் முன்பு பிடிவாதம் செய்ய முடியாது என்ன?''

''எனக்கும் உன்னைப் பார்த்துமே ஆசைதான். ஆனா இந்த அசோக் பயலை நினைச்சாத்தான் வயிற்றில் புளியைக் கரைக்குது!'' சாரதா இழுக்க..

''என்னம்மா இப்படி பயப்படுகிறீர்கள்? கட்டுடா தாலியை என்றால்... கட்டவிழ்த்துக் கொண்டா ஓடிவிடுவார்!

எங்கள் கிருத்திகா இஷ்டப்பட்டு விட்டாள். நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்''

''எனக்கும் இஷ்டம்தான். ஆனால் அந்த பெண்ணை என்ன செய்வது?

''பக்குவமாய் பேசுங்கள். படியலேன்னா மிரட்டி.. ஊரைவிட்டே அனுப்பிவிடுங்கள்! என்ன?''

''சரி செய்கிறோம்! என்னம்மா கிருத்திகா சந்தோசமா?

என் இரண்டாவது மருமகள் நீதான்! அவளை சமாதானமா பேசி ஏதாவது பண்ணி பணிய வச்சிட வேண்டியதுதான்!

அவர்களை அனுப்பிய கையோடு ரம்யாவும், சாரதாவும் திவ்யா வீடு நோக்கி புறப்பட்டனர்.

10

மாலை மறைய இருட்டி விட்டது.

சாரதாவும், ரம்யாவும்... இடியாய் அந்த செய்தியோடு வரப்போவது தெரியாமல்... திவ்யா அசோக்கின் போட்டோவோடு மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

கார் சத்தம் கேட்டு.. அசோக்கோ என்று துள்ளலாய் ஓடிவந்தவள்... இவர்களைப் பார்த்து ஏமாந்து... பின்னர் சமாளித்து '' வாங்க அத்தே... வாங்க அக்கா'' என்று வரவேற்க... கடுவன் பூனையாய் முகத்தை வைத்துக் கொண்டு நுழைந்தனர். மரகதமும் ஓடிவந்து வரவேற்றாள்.

''இங்கே வா... உட்கார் மரகதம்! நீங்களும் வாங்க! நான் சொல்வதைக் கேட்டு அதிர்ச்சியோ... வருத்தமோபடக்கூடாது...'' என்று பீடிகையோடு சொல்லி... சண்முகம் வந்தது... கிருத்திகாவை தன் மகனுக்கு பேசி அனுப்பியது வரை கூறி முடித்தாள்.

''ஐயோ...'' என்று அலறினாள். துடிதுடித்துப் போனாள். கண்ணீர் கட்டுக்கடங்காமல்... கன்னத்தில் வழிந்தது திவ்யாவுக்கு.

''கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணாதே! உன் தகுதிக்கு தக்கதாய் ஆசைப்பட்டிருக்கணும்! அதை விட்டுட்டு பேராசைப்பட்டால் இப்படித்தான் ஆகும்!''

''அத்தே... வேண்டாம் அத்தே! அவர் இல்லாமல் என்னால் வாழ முடியாது! எங்களை பிரிச்சிடாதீங்க! ப்ளீஸ்...'' என்று கையெடுத்து கும்பிட்டாள்.

மரகதம் பேசமுடியாமல் வாயில் முந்தானையை வைத்து விம்மினாள்.

''நான் செத்துடுவேன்! அவர் இல்லையென்னால் செத்துடுவேன்!'' மீண்டும் கதறிக் கொண்டே... சாரதாவின் காலைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''எங்களை பிரிச்சிடாதீங்க! அசோக் இல்லேன்னா நான் இல்லை! அக்கா சொல்லுங்கக்கா... அத்தையிடம் எடுத்து சொல்லுங்கக்கா. ப்ளீஸ்...'' ரம்யாவின் காலிலும் விழுந்து அழுதாள்.

சாரதா கத்தினாள்.

''இங்கே பாரடி! நீ விழுந்து புரண்டாலும் கண்ணீரால் என் காலை கழுவினாலும் நான் மாறமாட்டேன்! நீ அசோக்கை உண்மையாக காதலிச்சிருந்தா உன்னை விட வசதியான அழகான பெண்ணை அவன் கட்டிக்கிட்டு ஆனந்தமா வாழறதுக்காக காதலை தியாகம் செய்வது கூட ஒருவித காதல் தியாகம்தாண்டி! உன் காதல் நிஜமான காதல்னா அசோக்குக்கு கிடைக்கிற நல்ல வாழ்க்கையை தடுக்கக்கூடாது. நீ என் மகனை காதலித்தாயா? அல்லது அவன் பணத்தை காதலித்தாயான்னு இதிலேயே தெரிஞ்சிடும்.''

''அத்தை... அத்தை...'' இதயம் வெடிக்க விம்மினாள். நெருப்பில்





''உங்க சன் இங்கிலீஷ்ல ரொம்ப வீக்கா இருக்கான்''

''தமிழ்ல எப்படி இருக்கானு சொல்லுங்க''.

''தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வ லு வி ழ ந் து காணப்படுகிறான்''.

-ஆர்.மதுமதி, மதுரை.

விழுந்த வண்ணத்துப் பூச்சியாய் துடிதுடித்தாள்.

''அவனுக்கு ஒரு பெரிய சாம்ராஜ்யமே காத்திட்டு இருக்கு! இளவரசி கணக்காய் கிருத்திகா இருக்கா! அவளை பண்ணிட்டா இளவரசனாட்டம் என்பிள்ளை வாழ்வான்! உன்னை கட்டிகிட்டா என்ன வாழ்க்கை? உன் அழகும், கவர்ச்சியும் தோலின் மினுமினுப்பும் ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்னு அலுத்துடுவான். அப்புறமாய் என் பிள்ளை ஒரு பணக்காரியை கட்டிக்காமல் விட்டோமேன்னு வருந்துவான். எல்லாம் தேவையா?

காட்டுக் கத்தலாய் கத்தினாள்.

''எங்களை பிரிச்சிடாதீங்க அத்தை!'' நெஞ்சில் கை வைத்து பிடித்துக் கொண்டாள். நிற்க முடியாமல் தள்ளாடி விழுந்தாள்.

''திரும்பவும் உன் புராணத்தை கேட்க போரடிக்கிறது! நடிக்காதே! நம்பமாட்டேன்! அசோக்கை நீ விட்டுக் கொடுத்தால் அவன் ஆனந்தமாய் வாழ்வான்''

''மாட்டார்.. மாட்டார்'' நெஞ்சில் அடித்துக் கொண்டாள்.

அதையும்தான் பார்ப்போமே! நீ அவன்தான் வேணும்னு அடம் பிடித்தால் தன் மகளுக்கு கிடைக்காதவன் வேறு யாருக்கும் வேணாம்னு அவனை இல்லாமலேயே ஆக்கிடுவார் அப்பா! இதெல்லாம் நடக்கிற காரியமான்னு பார்க்கறீயா? ....அவர் ரொம்ப கோபக்காரர். நினைச்சதை முடிக்கிற செல்வாக்கு உள்ளவர். எனக்கு உன் பிள்ளை உயிரோடு வாழணும். உன் காதல் எனக்கு முக்கியமில்ல! ஒழுங்கா ஓடிப்போயிடு! நீ அவனுக்கு இல்லேன்னு எப்பவோ கடவுளே தீர்மானிச்சுட்டார்! அதான் கிருத்திகாவை நேரம் பார்த்து அனுப்பியிருக்கார்! கடவுள் தீர்மானிச்சுட்டது தெரியாமல் வீணாய் அவன் மேல் ஆசை வச்சிருக்கே! காதல் பண்ணியிருக்கே! என்ன நான் பேசுவது உன் காதில் விழுகிறதா? மூளையில் உறைக்கிறதா? குறித்த தேதியில் கிருத்திகாவோடுதான் அசோக்குக்கு கல்யாணம்! நீ இப்படி இடைஞ்சலாய் இங்கேயே இருந்தால் உன்னை ஒன்னுமே செய்ய மாட்டார். கிருத்திகாவுக்காக அவன் அப்பா டெல்லிக்கே ஆள் அனுப்பி உன் பிள்ளையை கொல்லக்கூட தயங்க மாட்டார். என் பிள்ளை உயிரோட வேணும். அவனை மறந்துட்டு ஊரைவிட்டே ஓடு சிங்கமாய் உறுமினாள்.

''சரித்தே! அவரை ஒண்ணும் பண்ணிடாதீங்க!'' கதறினாள்.

''இது இதுதான் உண்மைக்காதல்! நீ நெஜமாகவே அவனை நேசிச்சிருக்கே. ஆனா அவனோட வாழ உனக்கு தகுதி இல்லையே! பேச்சு மூச்சு இல்லாம இன்னிக்கோ, நாளைக்கோ ஊரைவிட்டே போயிடணும். என் பிள்ளைக்கு போன் மூலம் தெரிவித்தால்- குழப்பம் உண்டாக்கினால் பொல்லாதவளாயிடுவேன்! உன்னை ஒண்ணுமே செய்யமாட்டோம். எல்லாம் அந்த தறுதலைப் பயலைத்தான்! தேவையா? உன்னை காதலித்த பாவத்திற்கு அவன் சாகணுமா? நாளை இந்த நேரம் நீங்கள் இங்கே இல்லாமல் காலி செய்திருக்கணும்! எங்கோ.. ஒதுக்குபுறமான ஏரியாவில் உன் மாமன் இருக்கானாமே... அங்கே போவாயோ, எங்கே போவாயோ எனக்கு தெரியாது எங்கள் கண்ணில் படவே கூடாது என்று கொக்கரித்துவிட்டு போயே... போய்விட்டாள் சாரதா.

மரகதம் மகளை கட்டிக் கொண்டு கதறினாள். கொஞ்ச நேரத்திற்கு பின்.. திவ்யாவின் அழுகை நின்று.. சோர்ந்து படுக்கும்போது சொன்னாள்.

''திவ்யா.. பெரிய இடத்து புத்தியை காட்டிட்டாங்க! இப்படிப்பட்ட ராட்சஷியிடம் போய் வாழவும் முடியாது. நான் அந்த பையனை குறை சொல்லலே! தங்கமான பிள்ளை! அவனுக்கு இவர்கள் குழி தோண்டியதே தெரியாமல்.. புதையப் போகிறான் பாவம். இவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருக்க... எதிர்த்து அவனால் ஒன்றுமே செய்யமுடியாது. நாம் இங்கேயே இருந்தால் நமக்கும் ஆபத்து அது அவனுக்கும் ஏதாவது விபரீதமாய் நடந்துடலாம். நாம் போய்விடலாம். மாமாவிடம் போய்விடலாம். சொந்தம்னு சொல்லிக்க அவனைத் தவிர யார் இருக்கா?''

''வேண்டாம்மா.. இந்த கல்யாணம் நின்றதில் அதிகமாய் சந்தோஷப்படுபவர் அவராத்தான் இருக்கும்! என்னை அவருக்கு கட்டி வைக்கச் சொல்லி பாடாய் படுத்தியவருக்கு உங்களால் மீண்டும் திரும்பவும் சமாதானம் சொல்லி மாளாது!''

''என்னை மீறி அவனால் ஒண்ணுமே செய்ய முடியாது. அம்மா ஆதரவாய் பேசினாள். ''வேண்டாம்மா.. நம்ம தலையில் நாமே கொள்ளியை வச்சிட்டாப்ல ஆயிடும்! நான் அசோக்கை தவிர யாரையும் நினைத்துக்கூட பார்க்க மாட்டேன்! இந்த பிறவி முழுக்க.. இப்படியே இருந்துடறேன்! வேறு எங்காவது போயிடலாம். நான் வேலை செய்து உன்னை காப்பாத்தறேன்!''

''என்னடி புரியாமல் பேசறே? நமக்கு இப்போ பாதுகாப்பு என் தம்பிதான் இவங்களால நமக்கு ஆபத்து வந்தாலும் என் தம்பி பாதுகாப்பா இருப்பான். அவனுக்கு போன் பண்ணிட்டு வந்துடறேன்!'' காசோடு வெளியே போனாள்.

நிஜமாகவே இந்த செய்தி கேட்டு அதிகம் சந்தோசித்தான். இன்னும் நிறையவே குடித்துவிட்டு.. உருண்டு புரண்டான்.

சந்தோசத்தோடும்..: நிம்மதியோடும் திரும்பி வந்தாள் மரகதம். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் புயல் வீசப்போவது தெரியாமல்..!



# 11

திவ்யப்ரியா, மரகதம் வந்து இரண்டு மாதங்களுக்கு மேலானது. சேகர் நல்ல பிள்ளையாய் நடந்து கொண்டான். குடிக்காமல் வேறு இருந்தான். அக்காவிடம் பாசமாய் இருந்தான். ப்ரியாவிடம் பிரியமாய் நடந்து கொண்டான். அக்காவிடம் திவ்யாவை தனக்கு கல்யாணம் பண்ணி வைக்குமாறு பேசி... மரகதம் மனதை கரைத்தான். அவளும் அவனுடைய வெல்லக்கட்டிப் பேச்சில் மயங்கி... திவ்யப்ரியாவிடம் தினமும் வற்புறுத்தவும் செய்தாள்.

''திவ்யா நான் சொல்வதைக் கேள் எல்லாம் உன் நன்மைக்குத்தான்! உன்னை காதலித்தவன் உன்னை கைவிட்டுவிட்டு ஒரு பெண்ணை மணந்து மகிழ்ச்சியாய் வாழும்போது உனக்கு மட்டும் ஏன் இந்த பிடிவாதம்? இவனை பார் குடிக்கிற எல்லா பழக்கத்தையும் விட்டுட்டு திருந்திட்டான் பாரேன்.''

''...... அசோக்கை நினைச்ச மனசால் வேறு ஒருத்தனையும் நினைத்துப் பார்க்க முடியாது. என்னை வற்புறுத்தாதே! நான் செத்துடுவேன்! எனக்கு கல்யாணம்னு ஒன்று நடந்தால் அது நான் பிணமான பின்புதான்! பிணத்துக்கு வேண்டுமானால் தாலிகட்டச் சொல்லு மாமனை'' பதிலுக்கு எரிந்து விழுந்தாள்.

''எனக்கு ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா உனக்கு வேற யார் இருக்கா?''

''அம்மா! நான் உனக்கு எப்படி விளங்க வைப்பேனோ. தெரியலையே!'' தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். அதன் பிறகு மரகதம் வாயை மூடிக்கொண்டு நகர்ந்துவிட்டாள்.

''அன்று..

''காலையிலிருந்து வயிற்றை புரட்டிப் புரட்டி குடலெல்லாம் வெளியே வந்துவிழும் அளவு ஓங்காரமாய் வாந்தி வந்தது. பச்சைத் தண்ணீர் பல்லில் பட்டாலும் அப்படியே குமட்டிக்கொண்டு வெளியேறியது.

''என்னடி... என்ன?'' என்று தாய் பதறினாள்.

''ஒண்ணுமில்லேம்மா ராத்திரி சாப்பிட்டது ஒத்துக்கல போல!'' என்று கூறிவிட்டு போய் போர்வையை போர்த்திக் கொண்டு சுருண்டு படுத்தாள். கண்களில் நீர் வழிந்தது! கதறினாள் உள்ளுக்குள்ளேயே!

''எப்படி மறந்தேன் இந்த மூன்று மாதமும் என் வயிற்றில் வளர்வதை... கடவுளே நான் வெளியே இதை எப்படி சொல்வேன்? எனக்குள் என் குட்டி அசோக் வளர்வதை! அன்றைய தப்பின் பலனாய் அசோக்.. அசோக் உனக்கு தெரியுமா? உன் பிள்ளை என் வயிற்றில் வளர்ந்திருக்கிறானே.. எனக்கே தெரியாமல்! அசோக் இப்போது என்ன செய்வேன்? நம் காதலின் பலனாய் உன் நேசத்தின் பிரதிபலிப்பாய்.. என்னால் உன்னை மறக்கவே முடியாத அளவு செய்துவிட்டாயே! அசோக்

நம் காதலின் நினைவுச் சின்னத்தை என்ன செய்வது? சொல் அசோக்? உன் நினைவால் உருகி தவிக்கும் எனக்கு இது நீ கொடுத்த காணிக்கையா?"

'அசோக் நம் காதலில் மலர்ந்த கண்மணியை நான் பெற்றெடுக்கப் போகிறேன்! எனக்கு நீ தந்த பரிசைப்பார்த்தே... மீதி காலத்தையும ஓட்டிவிடத்தான்.. இப்படி ஒரு பிச்சையை போட்டாயா? அன்று என்னமாய் உருகினாய்! பிரிவு வரும் என்று தெரிந்துதான்... என்னைவிட்டு பிரியாமல் மருகினாயா?'

'அசோக் என் கண்ணே! உன்னைப் பிரிந்து தவிக்கும் எனக்கு நீ கொடுத்த பரிசு ரொம்பவே பிடித்திருக்கிறதடா! பிரியப்போவது தெரிந்துதான் என்னுள் மலர்ந்தாயா?'



''ஓடிபோன என் கணவர் எங்கிருந்தாலும் வரவும்னு விளம்பரம் கொடுத்திருக்கியே. உன் புருஷன் மேல அவ்வளவு பாசமா?''

''ஹூம்...ஹூம். ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு போர் அடிக்குது.''

-இரமணி, மதுரை.

அசோக் எனக்கு அச்சமே இல்லைடா! என் தலையில் வானமே இடிந்து விழுந்தாலும் பயப்படமாட்டேன்! என்னுள் எனக்கு சக்தியளிக்க தெம்பூட்ட ஒரு குட்டி அசோக் இருக்கிறான்!' அன்று என்னைக் கட்டிக் கொண்டு நன்றி சொன்னாய்! இன்று நான் உனக்கு என் உயிரில் உருகி நன்றியை தெரிவிக்கிறேன்!'

அசோக் நீ எனக்கு கிடைக்கவில்லையே என்று ஏங்கினேன், துடித்தேன், பதறினேன், கலங்கினேன், கதறினேன். அதற்கெல்லாம் பிரதிபலனாய் என்னுள் என்பிள்ளையாய் துணையிருக்க வந்துவிட்டாயா? ஜென்மா ஜென்மத்துக்குள் என்னை விட்டு பிரியமாட்டேன் என்றாயே! அதனை நிரூபித்துவிட்டாயா? உன்னையும் என்னையும் பிரிக்க ஆண்டவனாலும் முடியாது என்றாயே! எவ்வளவு சத்தியமான வார்த்தைகள்! அந்த கடவுளாலும் பிரிக்க முடியாமல் என்னுள் பிள்ளையாய் வந்துவிட்டாயே!

அசோக்.. அசோக்.. என் வாழ்நாளிலே மறக்க முடியாத நாள் அன்றுதான் என்றாயே! இன்று உனக்கு நான் சொல்கிறேன். என் வாழ்நாளிலே இன்றுதானடா என்னால் மறக்கவே முடியாத நாள்'.

அப்படியே அழுகையும், சிரிப்புமாக புலம்பிப் புலம்பி அழுதுசோர்ந்து நன்கு உறங்கியே விட்டாள். எத்தனை நேரம் தன்னை மறந்து உறங்கினாளோ.. அது அவளுக்கே தெரியாது! விழித்து எழுந்தபோது அது அவளின் கண்ணில் பட்டது.



புதிய மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தங்கத்தாலி அவள் கழுத்தில் மஞ்சள் கிழங்கின் வாசனையுடன் மஞ்சள் கயிறு தொங்கிக் கொண்டிருந்தது.

''ஐயோ..!'' தேளை மிதித்தவள் போல் வீறிட்டாள். நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதாள். கத்தினாள், கதறினாள், அலறினாள், துடித்தாள், புரண்டாள்

சேகரும், மரகதமும் மிரட்சியுடன் அவளை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நீயெல்லாம் ஒரு தாயா? எனக்கு இப்போ எமனாயிட்டியே! நான் என்ன சொல்வேன்? அதை எப்படி சொல்வேன்? பாவி.. அவசரப்பட்டுட்டையே! அசோக்கோட பிள்ளை என் வயிற்றுல வளருது! எனக்கு மறுஜென்மம், புனர் ஜென்மம் கொடுங்க.. என் நெஞ்சை அறுத்து கூறுபோட்டுட்டீங்களே! நீங்க நல்லா இருப்பீங்களா?''

சேகர் முன்னாடி வந்தான். ''என்னடி... என்னடி சொல்கிறாய்?'' அவனுக்கும் இந்த செய்தியால் அதிர்ச்சி.

''என் பிள்ளையா அசோக் பொறக்கப் போறான்டா!

என் மகனாய் பிறக்கப் போறான்டா. என் காதலுக்கு அவன் தந்த பரிசுதான்.. இந்த குட்டி அசோக்! என் பிள்ளையாய் பிறந்து என்மேல் அன்பு செலுத்தப் போறான்! எங்கள் நேசத்தை பிரிக்கவே முடியாதுன்னு காட்ட... என் குட்டி அசோக் பொறக்கப் போறான்டா.''

மரகதம் இதையெல்லாம் கேட்டு அதிர்ச்சியில் பேசமுடியாமல் உட்கார்ந்து விட்டாள்.

''ச்சீ வாயை மூடுடி! நான் இப்போ உன் புருஷன்'' கத்தினான்.

''நீயாடா என் கணவன்? தூங்கிட்டு இருந்தப்போ என் நினைவில்லாமல், இருந்தப்போ.. ஒரு கயிறு கட்டிட்டா அது தாலியாடா? அதனை புனிதம்னு கும்பிடுவேன்னு நினைச்சியா? தூங்கினால் எழுந்தாத்தான் உண்டு! நான் பிணமாய் இருந்தப்போ பிணத்துக்கு தாலிகட்டியிருக்கியே!'' அழுதாள்.

பின்னர் விழுந்து விழுந்து சிரித்தாள் கண்ணீரோடு!

''ஒரு கெட்டதிலும் எனக்கு நன்மையே விளைஞ்சிருக்குடா! கல்யாணம் ஆகாமலேயே கர்ப்பமாகி... மான அவமானப்பட இருந்தேன்.. இந்த சமுதாயத்தில் அந்த அவமானத்தை காப்பாத்த தாலி கட்டி இருக்கிற.'' பேய் சிரிப்பு சிரித்தாள்.

'ஏய் உன்னை ஆசைப்பட்டு மணந்திருக்கேன் தூங்கிட்டு இருந்தப்போ தாலி கட்டியவனுக்கு உன்னை ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டுப்போய் அபார்ஷன் பண்ண எவ்வளவு நேரம் பிடிக்கும்? என்னடி பூச்சாண்டி காட்டுறியா? எனக்கு சொந்தமானவுடன் .... அடுத்தவன் வாரிசு வளர விட்டுடுவேனா? உயிரோடு விடுவேனா? வேரோடு பிடுங்கி எறிந்திடுவேன்!'' சவால் விட்டான். சவாலுக்கு சவாலாய் அவனை எதிர்த்து திவ்யபிரியா கத்தினாள்.

மரகதம் செய்வதறியாது திகைத்து நின்றாள்.

## 12

சேகர், திவ்யப்ரியாவை அடித்தான். காலாலேயே எட்டி எட்டி உதைத்தான். கொடுமைப்படுத்தினான். எத்தனை அடிகளையும் முதுகு, மண்டையில் வாங்கிக் கொண்டு தன் பிள்ளைக்கு அடிபடாமல் தன் உயிரைக் கொடுத்து காப்பாற்றினாள்.

அவள் பிடிவாதம் கண்ட சேகரின் கொடுமைக்கு அளவேயில்லை. சிகரெட்டால் அவள் உடலில் சூடு வைத்தான்.

அப்போதெல்லாம் ''அசோக் அசோக் ஐ லவ்யூ அசோக்' என்பாள். அவளின் தாரக மந்திரம் 'அசோக் ஐ லவ் யூ!'' என்று ஆனது.''

அசோக்கின் பெயரைக் கேட்டாலே இன்னும் பேயாட்டம் ஆடுவான். பேங்கில் இருந்த லட்சரூபாயையும் தரச்சொல்லி.. அக்காவை அடித்து மிரட்டி வாங்கி கண்ட மேனிக்கு செலவு செய்து அழித்தான்.

இதையெல்லாம் பார்க்க முடியாமல் ஒருநாள் மரகதம் உயிரையே விட்டுவிட்டாள்.

திவ்யபிரியாவுக்கு இருந்த ஒரு துணையும் போகவும் குளிர்விட்டவனாய் சாப்பாடு போடாமல் குடித்துவிட்டு வந்து மேலும் மேலும் துன்புறுத்தினான். அவன் அடித்தால் 'ஐயோ அம்மா' என்று கதறுவதற்கு பதிலாய் 'ஐயோ அசோக்..' என்று கத்துவாள்.


'அசோக் இத்தனை கொடுமைகளையும், துன்பங்களையும், சித்ரவதைகளையும் உன் சந்தோசத்திற்காகவே தாங்கிக் கொள்கிறேன். நீ உன் மனைவியோடு சந்தோசமாய் இருக்கிறாயா? வேறு பெண்ணைப் பற்றி பேசினாலே எத்தனை கோபம் வந்து உன்னிடம் ஆடுவேன். எப்படித்தான் இப்படி ஆனேன் என்றே தெரியலையே! உன் மனைவியும் என்னைப்போல் கருவுற்று குட்டி அசோக்கை சுமந்து இருப்பாள். அவளை கீழே விடாமல் தாங்குவாய்! வளைகாப்பு செய்திருப்பாய்! அசோக் என்னை நினைப்பாயா? என்னை தேட முயற்சி செய்தாயா? நான் மணமேடையில் இல்லையென்றதும் துடித்தாயா? என் அளவு நேசம் உனக்கும் இருந்ததடா?''

'உன் ஆனந்த வாழ்வுக்கு விட்டுக் கொடுத்து இப்படி துன்பப்படுவதிலும் சுகமிருக்குடா! உன் ஒருவனுக்காக என் வாழ்வு அழிந்தது என்றாலும் நான் உன்னுக்குள் சந்தோஷமாய் இருக்கிறேன். நீ என்னுள் இருந்து சக்தி அளிக்கிறாயே!'

'எனக்கே தெரியாமல் தாலிகட்டி என் அவமானத்தை போக்கியவனுக்கு நான் வழங்கப்போவது என்ன தெரியுமா அசோக்? என் பூவையும், பொட்டையும், மஞ்சளையும்தான் அவனுக்கு காணிக்கையாய் கொடுக்கப் போகிறேன்! சமுதாயத்தில் அவமானப்பட இருந்த என்னை காத்தவனுக்கு இதைகூட செய்யவில்லையென்றால் நான் பெண்ணே அல்ல!'

'அவன் போட்டோவை எடுத்து பார்த்துக் கொண்டு புலம்பும்போது







பேச முடியாதபடிக்கு மூச்சு முட்டுது டாக்டர்

ஹார்ட் அட்டாக்குக்கான அறிகுறியா இருக்குமோ?

ம் ஹூம்! நீங்க யூஸ் பண்ற செண்ட் மட்டமானதுன்றதுக்கான அறிகுறி.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

ஒருநாள் சேகர் கண்டுவிட்டான்.

அதனைப் பிடுங்கி அசோக்கின் கன்னம், உதடுகளில் சிகரெட்டால் சுட்டான்.

''டேய் என் அசோக்கு வலிக்கும்டா! கொடுடா வேணாம்டா! அவனால் வலியைப் பொறுக்க முடியாது. என்னை சுடு! அந்த போட்டோவை என்னிடம் கொடுத்துவிடு! என்னிடம் இருக்கும் என் ஒரே ஆதாரம் ஆதரவு எல்லாமே அந்த போட்டோதான்!' அவள் கெஞ்சி அழ.. சுக்கல் சுக்கலாய் கிழித்து அவள் மூஞ்சியில் வீசினான்.

நல்ல தூக்கமில்லாமல் பாவி தூங்கினால் தூக்கிபோய் அபார்ஷன் பண்ணிவிடுவானோ என்று தவித்து தூங்காமலேயே காலத்தை தள்ளியவள் எட்டு, ஒன்பதாம் மாதத்தில் நிம்மதியாய் தூங்கினாள். இனி ஒன்னும் செய்யமுடியாது என்று. வலியெடுத்தது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அழகான ஆண்குழந்தை கட்டித்தங்கமாய் பிறந்தது.

'சனியன் அவனாட்டமே அவனையே உரித்து பிறந்திருக்குடி! இவனை கொல்லாமல் விடமாட்டேன். இத்தனை நாளாய் வயிற்றுக்குள் பொத்தி பொத்தி வளர்த்தாய். இனி வெளியே வந்துடிச்சி! நான் கொல்வதற்குமுன் யாரிடமாவது தூக்கி கொடுத்துவிடு. அல்லது துளி விஷம் வைத்தோ கழுத்தை நெரித்தோ கொன்றுவிடு. உன்னால் முடியவில்லை என்றால் நாளை காலையில் அவனுக்கு நான்தான் எமன். நான் சொல்றது நிஜம் என்று போனவன் எதிர்க்க வந்த லாரியில் ஆட்டோவோடு நசுங்கி கூழ்கூழாகி செத்தே போனான்.

அவள் நிம்மதி பெருமூச்சுவிட்டாள்.. போலீஸோடு டாக்டர் வந்து சொன்னதைக் கேட்டு!

'அந்த கயவனிடம் எமனிடம் இருந்து என்குட்டி அசோக்கை காப்பாற்றிய கடவுளே! உனக்கு நன்றி.'

அங்கிருந்த நர்ஸ் பார்க்க.. பார்க்க..

'நேற்று ஆசையாய் வாங்கி சூடிய ரோஜா காய்ந்து கருகிப் போய் இருந்ததை எடுத்து வீசினாள்.

தன் பொட்டை அழித்துக் கொண்டாள்.

கழுத்தில் தொங்கிய மஞ்சள் கயிற்றை தங்க தாலியோடு கழற்றி குப்பைக் கூடையில் வீசினாள்.



''குழந்தையின் தகப்பன் பெயர் என்ன?'' என்று கேட்ட டாக்டரிடம் 'அசோக்' என்றாள் ஆனந்தமுடன். என் பிள்ளையின் இன்ஷியல் 'ஏ' என்றாள்.

13

'என்னுயிரில் கலந்து உருவான உன் உயிருக்கு எந்தவித பாதிப்பும் இல்லாம மரணப் போராட்டத்தை சந்தித்து கஷ்டப்பட்டு உன் பிள்ளையை பெற்றுவிட்டேன் அசோக்!'

'உனக்கு தெரியுமா அசோக்! உன்னவனுக்கு, உன்னுடைய தகப்பனாரின் பெயரான சிவக்குமார் என்று பெயரிட்டு.. சிவா என்று சுருக்கமாய் அழைப்பது'

'என்னுள் விதையாகி விருட்சகமாய் வளர்ந்த உயிரை பெற்றெடுக்க எத்தனை அவமானங்கள்-வலிகளைத் தாங்கிக் கொண்டேன், தெரியுமா அசோக்? சுட்டு ஆறாத புண்ணிலேயே மீண்டும் சிகரெட்டால் சுடுவானே! எல்லாம் உன் உயிரை உன் ஜீவனை... நம் காதலை பெற்றெடுக்க இன்னும் எவ்வளவு வேதனை அலைகள் முட்டி மோதினாலும் சமாளித்து இருப்பேன்! ஏனென்றால், உன்னிடம் அப்படி ஒரு காதல் எனக்கு!'

'என் பிள்ளையை நல்லமுறையில் வளர்க்க எனக்கு சக்திகொடு அசோக்! என்னால் எவ்வளவு வலிகளையும் தாங்கிக் கொள்ள முடியும் என்றுதான் கடவுள் இப்படி ஒரு வாழ்க்கையை கொடுத்திருக்கிறார். ஆனால் உன்னல் முடியாது அசோக்! உன் மனம் தொட்டாலே வாடிப்போகும் அனிச்சமலர் போன்றது! என் அசோக்கைப் பற்றி எனக்கு தானே தெரியும்!'

'நான் அநாதையாய் குழந்தையோடு அலைந்தாலும் உனக்கொரு நல்ல வாழ்க்கை அமைந்ததை எண்ணி மகிழ்கிறேன்!'

'நம் காதலுக்காக என் எதிர்காலத்தையே தியாகம் செய்தேன்! ஆனால், நீ என்னை மட்டும் தானே தியாகம் செய்தாய்! இதில் யார் தியாகம் உயர்வு? இதிலும் உன்னைவிட ஒருபடி மேலே போய் வென்றுவிட்டேன் அசோக் உன்னை!'

'என்னுள் காமம் செத்துவிட்டது. காதலே வாழ்கிறது!'

'நான் இந்தப் பிறவியில் சாகும்வரை உன்னைப் பார்க்கக் கூடாது. பார்த்தால் கட்டுப்படுத்த முடியாமல் உன் மடிதேடி வருவேன். அந்த தலைசாய உரிமையுடைய ஒருத்தி இருக்க என்னால் உரிமை கொண்டாட முடியுமா?'

'நானும் என் பிள்ளையும் வாழ்வதற்காக... விடையே தெரியாத வீட்டில் பூச்சியாய் கேள்விக்குறியான என் பயணம் முற்றுப் பெறுமா அசோக்? 'உன்னிடம் ஒரே பார்வையில் விழுந்துபோன அதுவும் போட்டோவைப் பார்த்து விரும்பிய பெண் நிச்சயமாய் உன்னை நன்கு

இருப்பாள். நீ நல்லவனா? கெட்டவனா? என அறியாமலேயே உன் மீது பற்று கொண்டவள் நிச்சயமாய் பண்புள்ளவளாகவும், பாசமுள்ளவளாகவும்தான் இருப்பாள்.

'அசோக் நான் உன்னைப் பார்க்கக்கூடாது. சாகும் வரை பார்க்கக்கூடாது! நீ செய்யும் கைமாறு இது ஒன்றுதான் அசோக்! என் கண்ணிலும், கருத்திலும் படாமல் இப்போது போலவே எப்போதுமே இருந்துவிடு அசோக்! ப்ளீஸ் அசோக்' வாய்விட்டே அழுதுவிட்டாள்.

'என்னம்மா என்ன? நடந்துச்சு? வம்மா அழறீங்க?' என்று ஆட்டோ டிரைவர் கேட்க தன்னிலை உணர்ந்து சட்டென்று கண்ணைத் துடைத்து இயல்பாய் இருக்க நினைத்தும் நீர் ஊற்றாய் வழிந்து கொண்டிருந்தது.....

'என்னம்மா?' என்று மீண்டும் அக்கறையாய் கேட்க 'ஒண்ணுமில்லே! ஒண்ணுமே இல்லை!' என்று கூறினாள்.

'இறங்க வேண்டிய இடம் வந்தாச்சும்மா!' என்று கூற திவ்யபிரியா குழந்தையோடு இறங்கி பர்ஸ் பிரித்து பணமெடுக்க

'வேண்டாம்மா உங்களைப் பார்க்க பாவமாய் இருக்கு! காசெல்லாம் வேண்டாம். நான் வாரேன்' என்று கூறி ஆட்டோ டிரைவர் சென்றுவிட்டார்.

'இன்னும் சில மனிதர்களில் இரக்கம் கருணை சாகாமல் வரம் பெற்று வாழ்கிறது!' நினைத்துக் கொண்டாள்.

பெரியதும் இல்லாமல் சிறியதும் இல்லாமல் அழகான பங்களாவின் கேட்டைத் திறந்துவிட்டு உள்ளே போக... தாடியும், மீசையுமாய் ஒரு இளைஞன் ஓடி வந்தான்.

'என் ப்ரியாவை பார்த்தாயா? என் ப்ரியா எப்போது வருவாள்? எனக்கு என் பிரியா வேண்டும்! என் அன்புக்காதலி ப்ரியா வேண்டும்!' என்று கேட்டவனை உற்றுநோக்க திவ்யா பேரதிர்ச்சிக்கு உள்ளானாள். நெஞ்சு வெடித்து இதயமே வெளிவரும் அளவு அவளை அதிர்ச்சி தாக்கியது. கால்கள் தரையில் நிற்க மறுத்து தொய்ய ஆரம்பித்தது. பெட்டியை கீழே போட்டவள் குழந்தையையும் விட்டிருப்பாள். கடைசி நேர விழிப்பால் பிள்ளையை விழாமல் அணைத்துக் கொண்டாள்.

'அவன் அசோக்! கண்களில் மட்டும் பழைய ஒளிமங்காத அவளுடைய அசோக்!

'ஐயோ..' என்று அலறினாள்.

'அ... அசோக்.. நீ.. நீங்களா? இ.. இப்படி உ.... உங்களைப் பார்க்கவா இவ்வளவு தூ.. தூரம் பயணம் பண்ணி வந்தேன்' என்று கேட்டவள் பெரிய பாறாங்கல் தலையில் விழுந்த கணக்காய் கதறி அழக்கூட முடியாமல் ஊமையாய் உள்ளுக்குள் அழுதாள். கண்ணீர் பொங்கி பொங்கி வழிந்தது.

'என்ன கொடுமையிது? என் அசோக் பைத்தியமா? என் அசோக்கை பார்த்துக் கொள்ளத்தான் இத்தனை தூரம் வந்தேனா? உன்னை சாகும்வரை பார்க்கக்கூடாது என கடவுளையெல்லாம் வேண்டிக்கொண்ட என் வேண்டுதல் பொய்த்துவிட்டதே! உன்னை இந்த நிலைமையிலா பார்க்க வேண்டும்?



உன் மனைவி எங்கே? உன் கிருத்திகா என்ன ஆனாள்? எதனால் அசோக் உனக்கு பைத்தியம் பிடிச்சது? உன் மனநலம் பாதிக்கும் அளவு அப்படி என்ன கொடுமை நடந்தது? இத்தனை நான் இருந்து உன்னை இந்த கோலத்திலா காண வேண்டும்! என்னால் முடியலையே! ஐயோ நிற்க முடியலை! ஐயோ நிற்க முடியலையே! பேச நா வரலையே!'

திவ்யபிரியா அவனைப் பார்த்துக் கொண்டு நிற்க.. 'ஐ தம்பி கொடு என்கிட்ட கொடுங்க!' என்று அசோக் கைநீட்ட குழந்தை அவனைக்கண்டு சிரிப்புடன் அவனிடம் தாவியது.

'யாரது?' என்று வாசலுக்கு வந்த பெண்மணி அசோக்கின் ஜாடையில் இருந்தாள். திவ்யப்ரியா அவசரமாய் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

'வாங்க நீங்க திவ்ய பிரியா தானே?' என்று கேட்க

'ஆமாம்மா!' என்றாள். தன்னைக் கட்டுப்படுத்த பெருமுயற்சி செய்தாள்.

'நான் ஜெயந்தி. இவன் என் தம்பி அசோக். உள்ளே வந்து உட்காருங்க.' என்று அழைத்துச் சென்று ஷோபாவைக் காட்ட உள்ளே போனவள் பொத்தென்று விழுந்தாள்.

'அசோக் நீ உள்ளே போ!'

'மாட்டேன். இந்த தம்பிப்பாப்பா எனக்க வேணும்! இதை எனக்கு கொடுங்க. நான் விளையாடத்தான் வந்திருக்கு! அதுக்கு பசிக்குமில்லையா? பால் குடிச்சிட்டு வரும். நீ போய் சமத்துப் பிள்ளையாய் படுத்தால் நானே கொண்டு வந்து தரேன். நீ நல்ல பிள்ளையில்லையா? போப்பா!' என்று கூறவும் உள்ளே போனான்.

'திவ்யா பார்த்தீங்களா? இவனைத்தான் பார்த்துக்கணும்! சரியான அடம் பிடிப்பான்! அழுவான்! படுத்து புரளக்கூட செய்வான்! எதையாவது சொல்லி சமாதானப் படுத்தறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும். எங்கம்மா மரகதம் இதுவரை பார்த்துட்டாங்க. சமீபமாய் இறந்துட்டாங்க. அதுக்கும் பிறகு இரண்டு மூன்றுபேரை நியமிச்சு எல்லோரும் முடியாதுன்னு போயிட்டாங்க. நீங்க ரொம்பவே சின்னவயதாய் இருக்கீங்க. உங்களால் முடியுமா?' சந்தேகமாய் ஜெயந்தி கேட்டாள்.

'முடியும்.. முடியும்! என்னால் முடியும்!' திடமாய் சொன்னாள்.

'குழந்தையோட பேர் என்ன?' 'சிவக்குமார் கருக்கமா சிவா!' 'அட எங்க அப்பாபேர் கூட அதானே! ஆமாம் சென்னையா? என் அம்மா ஊர்கூட சென்னைதான். ரொம்ப நாளா போக்குவரத்து இல்லை. எங்க திருமணம் லவ் மேரேஜ்! கணவர் என்ஜினீயரா இருக்கார். இவன் திருமணத்தின்போது ஒரு எஸ்டேட் வாங்கிப்போட... எங்கள் தகுதி கொஞ்சமாய் உயரவும் கொஞ்சமாய் போக்குவரத்து உண்டு. ஆமாம் படிச்சிருக்கீங்களா? எதுவரை?'

சொன்னாள்.

'அட என் தம்பியும் அங்கேதான் படிச்சான். பார்த்திருக்கீங்களா?'

கலங்கிப்போனாள். பின்னர் சுதாரித்து 'பார்த்திருக்கேன். என்னோட சீனியர்! அவ்வளவா பழக்கமில்லை!'



''அந்த போலீஸ்காரர் ஏன் கண்கலங்கி நிற்கிறாரு''

''இவர் ஏரியா திருடன் அவன் கட்டின வீட்டுக்கு இவர் பேரை வச்சிருக்கானாம்.''

-இரமணி, மதுரை.

'ரொம்ப சின்ன வயதாய் தெரிகிறாய்! எப்படி உன் கணவர் இறந்தார்? பேர் என்ன?' எனக் கேட்கவும் அழுதே விட்டாள்.

'அழாதீங்க. சொல்லப் பிடிக்கலைன்னா வேண்டாம். நாலைந்து பேர் நேற்று வந்தார்கள். இவன் அவர்களிடம் சென்று பேசும்போது 'ச்சீ பைத்தியமோ' என்று அருவெறுத்தார்கள். ஆனால் நீங்க அவனை கேவலமா பார்க்கவில்லை. ஒருமையில் கூப்பிடலாமா? உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. விருப்பமானால் வேலை செய்யலாம் நான், அசோக், என் மகள் கௌசல்யா, ஒரு வேலைக்கார பையன் இவ்ளோ பேர்தான் இங்கே!

உனக்கு தனியா பின்னாடி அறை இருக்கு. எங்களோடு சாப்பிட பிடித்தால் சாப்பிடலாம். இல்லேன்னா... தேவையான பொருட்கள் வாங்கித்தரேன். சமைத்து சாப்பிட்டுக்க. எங்கள் அசோக்கை நல்லமாதிரியாய் பார்த்துக் கொண்டால் போதும்! நான் உன்னுடைய குழந்தைக்கு எந்த குறையுமே இல்லாமல் பார்த்துக்கிறேன். எனக்கு எஸ்டேட்டை கவனிக்கவே நேரம் போதல. இல்லையென்றால் அசோக்கை நானேப் பார்த்துக் கொள்வேன். பொறுப்பானவளாயும், பொறுமையானவளாயும் தெரிகிறாய். உன்னை எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு. அசோக்கை பார்த்துக்கொள்வாயா?'' கண்களில் நீர் மின்ன ஜெயந்தி கேட்டாள்.

''எனக்கும், என் மகனுக்கும் போக்கிடம் எதுவுமே இல்லை. இங்கே இடம் கிடைத்தால் எனக்கும் சந்தோஷம்!'' என்றவள் தயங்கி பின் கேட்டாள்.

''இவரை பெற்றவர்கள் எல்லோரும் அடிக்கடி வந்துப் பார்ப்பார்களா?''

''ம்கூம். இவனை விட்டுட்டுப் போய் ஒன்றரை வருஷம் ஆயிடுச்சு. வரவேயில்லை. உன் அப்பா கொஞ்சம் கல்மனசுதான். அதனால்தான் இவன் வாழ்க்கை வீணாயிடுச்சு!''

''அப்படியா? ஏன் இப்படி மனநிலை சரியில்லாமல் போனது?''

''அது பெரிய கதை திவ்யா...'' என்று சொல்ல ஆரம்பித்தாள் ஜெயந்தி.

அந்த கண்ணீர் கதையைக் கேட்டு திவ்யப்பிரியா துடிதுடித்துப் போவாள் எனத் தெரியாமல்!



# 14

அசோக் டெல்லியில் எவ்வளவு சீக்கிரமாய் வேலையை முடிக்கப்பார்த்தாலும் இழுத்தடித்தது.

மணநாளுக்கு முதல்நாள் இரவு பிளைட் பிடிச்சி... மண்டபத்திற்கு வந்து சேரவே ... இரவு பதினொரு மணிக்கு மேல் ஆனது. அவசரமாய் உள்ளே நுழைந்த அசோக்குக்கு பிரியாவை உடனடியாய் பார்க்க வேண்டும் என்ற தவிப்புடன் தூங்குறவங்களைக் கடந்து மணமகள் அறையை நோக்கி போகவும்... அம்மா சாரதா எதிரில் வந்து பிடித்துக் கொண்டாள்.

''வா அசோக்! வேலை சுமுகமா முடிஞ்சதா? சீக்கிரம் படு! காலையிலே எழுந்தாகணும்'' அவசரப்படுத்தினாள்.

''நான் பிரியாவைப் பார்க்கணும்மா. பார்த்துட்டு படுத்துடறேன். பிளீஸ்ம்மா...'' என்று வேகமாய் கெஞ்ச...

''கத்தாதே! எல்லோரும் தூங்குகிறார்கள். முழிச்சிடப் போறாங்க. டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். அவளும் நல்லாத்தூங்கறா. அவளைச் சமாதானப்படுத்தி... வந்துடுவான்னு ஆறுதல் படுத்தி தூங்க வைக்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சி. அசந்து தூங்கறா. அவளை தொந்தரவு பண்ண வேண்டாம். நீ போய் படு. விடியற்காலையிலேயே எழணும். ம்?'' என்று கட்டளையிட்டாள்.

''அம்மா... பிளீஸ்ம்மா... தூரவே நின்னு ஒரே ஒரு தடவை அவள் முகத்தை ஆசைத்தீரப் பார்த்துட்டு வந்துடறேன். என்னை புரிஞ்சுக்கோம்மா!'' கெஞ்சினான்.

அதெல்லாம் வேண்டாம். காலையில் பார்த்துக்கலாம். போ.. போடா...சொன்னா கேட்கமாட்டாயா?'' என்று அவள் விடாப்பிடியாய் விரட்ட, அம்மாவின் பேச்சை தட்ட முடியாமல்... அரைமனதாய் சென்று படுத்தான்.

விடியற்காலையிலேயே மண்டபம் அமளிதுமளியாய் காணப்பட்டது. அவனுடைய நண்பர்கள் தினேஷ், ராம், கிஷோர் அனைவருமே வெளிநாடுகளில் வேலைப்பார்க்கும் நண்பர்கள் அவர்கள் யாரும் இல்லாமலே தனயொருவனாய் டிரஸ் பண்ணி மணவரைக்கு வந்தமர்ந்தான். பிரியா அம்மா வேறு கண்ணில் படாதது சங்கடமாய் இருந்தது. அண்ணா பிரபாகரோ... அருகில் நிற்காமல் தூரவே இருந்தான். அக்கா ஜெயந்தி எஸ்டேட் வாங்கி... அந்தஸ்து உயர.. அப்பா குடும்பத்துக்குள் அம்மாவை சேர்த்து கொண்டார். அவள் வந்திருந்தது சந்தோஷமாய் இருந்தது. அக்கா அவன் முடியை பாசமாய் ஒதுக்கி... பட்டுத் துண்டை தோளில் சரியாய் போட்டு... நினைத்துக் கொண்டவளாய் கண்ணில் இருந்த மையை விரலால் தொட்டு... தம்பியின் கன்னத்தில் திருஷ்டிப் பொட்டு வைத்தாள். அவளை அவனுக்கு அதிகமாய் பிடிக்கும்.

அய்யர் ''பெண்ணைக் கூப்பிடுங்க'' எனவும் மெழுகு

பொம்மையாய்... அலங்கரித்து... அழகாய் வந்தவள் கிருத்திகா. அசோக்கின் அருகில் அமர்ந்திருந்தவளை... மெதுவாய் திரும்பிப் பார்த்து... லேசாய் கண்ணடித்து குறும்பு செய்தவள் அதிர்ந்தாள்.

''அம்மா...'' என்று அலறிக்கொண்டே ... மாலையும் கழுத்துமாய் எழுந்து கத்தினான்.

அம்மா, ரம்யா, பிரபாகர், சண்முகம் என அனைவரும் இப்படி ஒரு விபரீதம் வரும் என்று தயாராய் இருந்தவர்கள்... அருகில் வந்து கூடிவிட...

''இவள் யார்? இவள் எப்படி மேடைக்கு வந்தாள்? என் பிரியா எங்கே? எவளை கொண்டு வந்து மணவறையில் உட்கார வைக்கிறீர்கள். என் பிரியா... என் உயிர் எங்கே?''

''பிரியா வரமாட்டாள். ஏனென்றால் உன்னைவிட பணக்காரனாய் கிடைத்துவிட.... இந்த பத்துநாளில் அவனை திருமணம் பண்ணிகிட்டு போயே விட்டாள்! நம் மானம் காக்க... நம் மரியாதை கப்பலேறிவிடாமல் காப்பாற்ற உன் அண்ணியின் சித்தப்பா தன் பெண்ணை பேசி முடித்து... இப்போது அவளும் மணவறைவரை வந்துவிட்டாள். உனக்கு அவள்தான் இனி எல்லாமே! அசோக்! இவள் கழுத்தில் தாலியை கட்டு! உட்கார்!'' என்று அம்மா சத்தம் போட்டாள்.

''நான் நம்பமாட்டேன். என் பிரியா அப்படி பட்டவள் அல்ல! அவளை என்ன செய்தீர்கள்? ஏன் இது கட்டுக்கதை?

அவளிடம் என்ன சொல்லி விட்டீர்கள்? என்ன சொல்லி மிரட்டினீர்கள்? சொல்லுங்கள்? பொய் சொல்லாதீர்கள்?'' அவனுக்கு படபடப்பாய் இருந்தது.

''ஆமாம்... மிரட்டினேன் தான்! என்னடா செய்வே? இப்போ மரியாதையா இவள் கழுத்தில் தாலியைக்கட்டு!'' என்று கத்த...

''அண்ணா... என்ன இதெல்லாம்? உங்களுக்கு தெரியாமலா நடந்திருக்கும்? என்ன அண்ணா இதெல்லாம்? என்று பிரபாகரைப் பார்த்துக் கேட்டான்.

''அவளை என்னடா கேட்கிறாய்? நீ எவளோ ஒரு பிச்சைக்காரியை கைக்காட்டுவே... உனக்கு அவளையே செய்து வைக்க நாங்கள் என்ன முட்டாளா? இதோ பார் அவளை விட எல்லாவற்றிலும் சிறந்தவள் இந்த கிருத்திகா. ஏராளமான சொத்துக்கு ஒரே வாரிசு! சொந்தத்துக்கு சொந்தம்! அமெரிக்காவுல மெடிக்கல் படிக்கிறாள். உன் போட்டோவையே பார்த்துட்டு... கட்டினால் இவரைத்தான் கட்டுவேன்னு ஒத்தைக்காலில் நின்றாள். இப்படி ஒரு சம்பந்தம் வரும்போது... இந்த நல்ல சந்தர்பத்தை கை நழுவ விடுவேனா? ஒழுங்காய் கிருத்திகாவின் கழுத்தில் தாலியை கட்டு!'' இன்னும் சத்தமாய் பேயாட்டம் ஆடினாள் சாரதா.

''அம்மா... என்னம்மா இது அநியாயம்?'' என்று விஷயம் புரிந்து அசோக்கு பரிந்து பேச வந்த ஜெயந்தியைப் பார்த்து கத்தினாள்.

''உன்னை அழைத்ததே பெரிசு! நீ இந்த கிறுக்கனுக்கு வக்காலத்து வாங்கிகிட்டு வராதே! உன் வாயை மூடிட்டு தூரப்போ!'' மிரட்டினாள்.

''அம்மாவா? இல்லே நீ எமனா? பணத்தாசை பிடித்த பேயே! உன் ஆசைக்கு ஏன் என்னை பலிகடாவக்கறே! இங்க இருக்க ஆஸ்தி, அந்தஸ்து, பணம் போதாதா? உனக்கு பணம்தானே வேணும். காலம்



முழுவதும் உனக்கே உழைத்து.. மூட்டை மூட்டையாய் நான் கொண்டு வந்து கொட்டறேன். என்னால் முடியும். எனக்கு என் பிரியாவை மட்டும் கொடுத்துடு! எனக்கு என் பிரியா வேண்டும்! என் மனைவின்னா அது பிரியாதான்! என் பிரியாவைத்தவிர வேறொருத்தியை தொட மாட்டேன். கண்டவளோடு எல்லாம் என்னால வாழமுடியாது.'' அசோக் மாலையை பிய்த்து எறிந்தான். கிருத்திகாவைப் பார்த்துக் கேட்டான்.

''நீயெல்லாம் ஒரு பெண்ணா? கேவலம் உன் பணத்தைக் காட்டி... ரெண்டு மனசை பிரிக்கப்பார்த்தாயே! நானும் பிரியாவும் எவ்வளவு உயிராய் இருந்தோம்னு தெரியுமாடி தாயே! எந்திரிடி! என் பிரியா உட்கார வேண்டிய இடம்! போ.. போயிடு...'' அவளைப் பிடித்து தள்ளினான். அவள் தள்ளிபோய் விழுந்தாள்.

''என் பிரியாவை அழைத்து வாங்க...'' அம்மாவைப் பார்த்து சத்தம் போட்டான்.

''அவள் வரமாட்டாள்! அவ இந்த ஊரிலே இல்லை! இல்ல உலகத்தை விட்டே போயிட்டாளோ என்னவோ! அவளைக் கொண்டு வான்னு அடம் பிடித்தால் என்ன செய்வது?''

''என்னால் முடியல அசோக்! எல்லாம் அம்மாவும், ரம்யாவும் சேர்ந்து செய்த சதி! என்னால் தடுக்க முடியலைடா, மானம் போகுது. கட்டு அசோக் தாலியை!'' பிரபாகர் கெஞ்சினான்.

''ச்சே! பணத்துக்கு உன் தம்பியை விலைபேசி இருக்காங்களே... அவனுக்குன்னு ஒரு மனம் இருப்பது தெரியாமல்!''

''அசோக்... வேதாந்தம் பேசியது போதும்! உட்கார்...''

''ச்சே..நீ அம்மாவா? உன்னை இனி அம்மான்னே கூப்பிடமாட்டேன்... என் உயிர் உள்ளவரை! என் பிரியாவைத் தவிர வேறு ஒருத்தியை கனவில் கூட நினைக்கமாட்டேன்! என் பிரியாவை என்கிட்ட இருந்து பிரிப்பது... என் உயிரை பிரிப்பது போலடா பிரபாகர்! நான் ஆறுன்னா... அவள் கடல்! கடலில் சங்கமித்த.. கலந்த ஆற்றையும், ஆற்று நீரையும் உங்களால் பிரிக்க முடியுமா? முடியாதில்லே! அது போலத்தான் என்னையும், பிரியாவையும் பிரிக்க முடியாது! என் அன்புக் காதலியை திருப்பி கொடுத்துடுங்கடா! என் பிரியாவை என்னிடமே கொடுத்திடுங்கடா! அவளில்லாமல் என்னால இருக்க முடியாதடா! என் பிரியாவை வேணும்! என் பிரியா வேணும்டா பாவிகளா...! இந்த ஜென்மம் இல்லே... எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என் மனைவின்னா... அது பிரியாத்தான்! உங்கள் தப்புக்கு ஒரு நாளும் துணைப்போக மாட்டேன்! என்னை விட்டுடுங்கடா....'' அப்படியே அதிர்ச்சியில் மனம் குழம்பி சரிந்தான்... மூர்ச்சையாகி!

உடனடியாக அவசர ஊர்தியில் ஏற்றி... ஆஸ்பத்திரியில் சேர்க்க.. மனநலம் பாதிக்கப்பட்டு... பைத்தியமானான் என டாக்டர் சொல்ல... அத்தனைப் பேருமே அதிர்ச்சியில் உறைந்தனர்.

ஜெயந்தி சொல்லி முடிக்க.... விவரிக்க முடியாத வேதனையில் அப்படியே கண்கள் கலங்கி... ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது திவ்யபிரியாவுக்கு.

''என் பிரியா வேணும்னு கத்திட்டே இருந்தான். உடல்நிலை

கொஞ்சமாய் தேறி வீட்டுக்கு அழைத்து வர... அசோக்கை பார்த்துக் கொள்ள என் அம்மாவோ, ரம்யாவோ முன் வராமல் போக... அண்ணன் பிரபாகர் மனநலம் பாதிக்கப்பட்டவர் இல்லத்தில் சேர்க்க முயற்சி செய்யும் போது... அசோக்கை என்னோடு அழைத்து வந்தேன். டாக்டர் வாராவாரம் செக் பண்ணி... மாத்திரை கொடுத்துட்டுப் போவார். முன்பு போல் அடம் இல்லைனாலும்... இவனைக் கட்டுப்படுத்துவது கஷ்டம்தான். அசோக் பூரண குணமாகணும்! உன்னைப் பார்த்தால் நல்லவளாய் தெரிகிறாய்! இவனுக்கு தேவை அன்பும்... அரவணைப்பும் அந்த அன்பு, பாசம், உன்னிடமிருந்து நிச்சயமாய் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இளவயதாய் இருந்தாலும் உன்னிடம் பக்குவம் காணப்படுகிறது. அவனுக்கு தோழிக்க தோழியாய்... தாய்க்கு தாயாய்... தாதிக்கு தாதியாய் பார்த்து கொள்ள வேண்டும் அம்மா செய்வீயா?'' என்று கண்ணீர் மல்க கேட்ட ஜெயந்திவிடம் ''நிச்சயமாய்... கட்டாயமாய் !'' என்று வாக்களித்தாள்.

''கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியுமா? என்பது தெரியாமல்!

## 15

திவ்யபிரியா அசோக்கை கண்ணுக்கு கண்ணாய் பார்த்துக் கொண்டாள்... தன் பிள்ளையை விட! அவன் கேட்கும் கேள்விகளுக்கு சலிக்காமல் பதில் சொல்வாள். அவன் அடம் பிடித்தால்... பக்குவமாய் சொல்லி புரிய வைப்பாள். சாப்பிட வைத்தாள். தூங்க வைத்தாள். அவனுக்கு மாத்திரை கொடுப்பதுதான் பெரும்பாடு. ''நீயும் முழுங்கினால்தான் நானும் மாத்திரை முழுங்குவேன்!'' என்று அடம்பிடிக்க... மறுநாளே ஜெயந்தியிடம் சொல்லி... சில சத்து மாத்திரைகளை வாங்கி வரச் செய்து... அவனுக்கு முன்பு இவள் அந்த மாத்திரையை விழுங்கி... அவனை விழுங்க செய்வாள். அவன் முகத்தில் காடாய் மண்டிக்கிடந்த தாடியையும், தலைமுடியையும் அகற்றி... சீராய் நறுக்கப்பட்ட தலைமுடியிலும்... அளவான மீசையிலும்... அப்படியே அவளைக் காதலித்த அசோக் கண்களுக்கு தெரிந்தான். அசோக் சாதாரணமாய் டி.வி.பார்த்துக் கொண்டிருந்தாலோ... தூங்கினாலோ... யாரும் மனநிலை பாதிக்கப்பட்டவன் என்று சொல்ல முடியாது. அவ்வளவு நார்மலாய் இருந்தான்.

முன்பு மெலிந்து தெரிந்த அசோக்.. திவ்யா வந்த பிறகு எவ்வளவோ மாறியிருந்தான். அவனை மாற்றியது அன்புதான் அவன் போக்கிலேயே விட்டுப் பிடித்து கெஞ்சி, கொஞ்சியாவது உணவை ஊட்டி விட்டு... அவன் உடம்பைத் தேற்றினாள்.

''காலை, மாலை வேலைக்காரப் பையனைவிட்டு குளிக்க வைத்து...





''ஏண்டா, வண்டியை இவ்வளவு வேகமா ஓட்டுற?''
''வண்டியில் ப்ரேக் இல்லை, அதான் ஆக்ஸிடெண்ட் ஆகுறதுக்குள்ள வீட்டுக்கு போயிடம்னு வேகமா ஓட்டுறேன்''.
ஆர். மதுமதி, மதுரை.

வேற்று உடை மாற்றச் செய்வாள்.

வீட்டிலும் ஜெயந்தியை உட்கார வைத்து... வேலை செய்து ...எஸ்டேட்டுக்கு அனுப்புவாள். அவனுடைய இரண்டாம் வகுப்பு படிக்கும் பெண் கௌசல்யாவுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது... ஹோம் ஒர்க் எழுதச் சொல்லிக் கண்டிப்பது... பள்ளிக்கு அனுப்புவது முதற்கொண்டு திவ்யபிரியாதான். திவ்யாவின் படிப்பு முயற்சியால் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்று முதல் ராங்க் வாங்கினாள் கௌசல்யா.

வேலைக்காரனுக்கு அடுப்படியில் உதவ... அவனும் பாசமாய் அக்கா அக்காவென்று ஒட்டிக் கொண்டான்.

எதற்கெடுத்தாலும்... அங்கே திவ்யாதான். எஸ்டேட் கணக்கு வழக்குகளைக் கூட செய்துத்தருவாள்.

திவ்யா வந்து ஒரு மாதத்திற்கு மேலானது. எங்கே சாரதாவோ, ரம்யாவோ, பிரபாகரோ... இவளைப் பார்க்க வந்து விடுவார்களோ என்று பயந்து நடுங்கினாள். அவர்கள் வந்து விட்டால்... இவளைக் கண்டுவிட்டால் இவளால் இங்குத்தான் இருக்க முடியுமா? இது எழுதப்படாத விதியல்லவா!

அசோக் ''பிரியா... பிரியா'' என்று புலம்புவதை விட்டுவிட்டு ''திவ்யா திவ்யா..'' என்று அவளையே சுற்றி வந்தான். அவள் பிள்ளை சிவாவை இவனிடம் விட்டுவிட்டு வேலைச் செய்தால் பொம்மைகளைத் தூக்கிக்காட்டுவான். அவள் செய்வதை பார்த்துக் கொண்டிருந்தவன்...வெறும் பால்பாட்டிலை எடுத்து வந்து வாயில் நுழைப்பான். தூளியில் போட்டு ஆட்டுவான். திவ்யா பார்த்து விட்டு ஓடிவந்து... சிவாவை சரியாய் தூளியில் படுக்க வைத்து விட்டால்... அழகாய் பொறுமையாய் ஆட்டித் தூங்கச் செய்வான்.

ஜெயந்தி... திவ்யாவை இங்கேயே ஒரு அறையில் தாயும் மகனும் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியும்... கேளாமல் அவர்களுக்காய் கொடுக்கப்பட்ட அவுட் ஹவுசில் போய் படுத்துக் கொள்வார்கள்.

ஒருநாள் ஜெயந்தியிடம் தயங்கி தயங்கி கேட்டாள்.

''அந்த பெண் கிருத்திகா...''' இழுத்தாள்.

''அவளை மீண்டும் இன்னும் இரண்டு வருட படிப்பிருக்கிறதல்லவா... படிக்கப் போய் விட்டாள்!''

''என்ன சொன்னாங்க? இவரைப் பற்றி என்ன சொன்னாங்க?'' ஆர்வமாய் கேட்டான்.

''குணப்படுத்தி வையுங்க. என்றைக்கு இருந்தாலும் இவர்தான் என் ஹஸ்பெண்ட்! அதில் மாற்றமில்லே! படிப்பை முடிந்து வரும்போது... இவர் குணமாகி இருக்கணும்னு ஆர்டர் வேறு போட்டு விட்டு போய் இருக்கிறாள்!''

''உங்கள் அம்மா வரவேயில்லையே!''

''அம்மாவா... அவனுக்கெங்க நேரம்! இவன் மேல் வெறுப்பும் அதிகம் பிரபாகர். இவனில்லாமல் வேலை பளுவால் திண்டாடுகிறான். அவன் நல்லவன் எவ்வளவோ கெஞ்சியிருக்கிறான். அம்மா மசியல. அவன் மனைவியோட தங்கையாச்சே கிருத்திகா. இவன் திருமணத்தின் போது பிரபாகர் முடியாமல் தவித்திருக்கிறான். எவ்வளவு சொல்லியும் ...பெண்கள் இருவரும் இவனை காதலித்தவனை துரத்திவிட்டு இன்னொருத்திக்கு முடிச்சுப்போடவும் விதி இவனை பைத்தியமாகிடுச்சி! அந்தப் பெண்ணை எந்த அளவு நேசித்து இருந்தால்... இப்படி பைத்தியமாய் ஆகியிருப்பான். திவ்யா நீ வந்த பிறகு என் தம்பி குணமாயிடுவான்னு நம்பிக்கை வந்துடிச்சிம்மா!'' என்று கண்ணீர் சிந்த.. ஜெயந்தி முன்பு கண்கள் கலங்கி தன்னை காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்து... கட்டுப்படுத்திக் கொள்வான்.

''உனக்கு தெரியுமா? பிரியான்னு ஒருத்தி அவன் படிச்ச காலேஜில படித்தாளாம். அவளைத்தான் உயிருக்குயிராய் நேசித்தானாம்! கேள்விபட்டு இருக்கியா... இவனுடைய காதலை?'' என கேட்கவும்... திணறிவிட்டான். பின்னர் சமாளித்து...

''ம்கூம்... '' என்று தலையாட்டிவிட்டு... அவசரமாய் விலகிப்போய்... தனியிடம் தேடி அழுதான்.

ஒருநாள்... இவள் தோட்டத்தை கொத்தி, சீர்படுத்த... குழந்தை அசோக்கின் அருகில் உட்கார்ந்து பொம்மையை வைத்துக் கொண்டு விளையாடியது.

மாலைக்காற்றின் மயக்கத்தில்... தலைசாய்த்து... தென்றலை தாலாட்டிய ரோஜாக்களை இமைக்காமல் பார்த்தவன் ''பிரியா... பிரியா...'' என்று சொல்லி...செடியருகே சென்றவனை வியப்புடன் நோக்கி.... மண்வெட்டியை போட்டுவிட்டு ... அவனருகே வந்தாள்.

''பிரியாவுக்கு இந்த பூ பிடிக்கும். கலர்கலர் ரோஜான்னா பிடிக்குமே! '' என்றவனை சந்தோஷமாய் பார்த்து கேட்டாள்.

''அசோக் பிரியா யார்? தெரியுமா?''

''ம்..ம்... '' என்று யோசனையாய் தலையை அந்தப்புறமும் இந்தப்புறமும் ஆட்டியவன் ''ம்கூம் ... '' எனக்கூற ... காற்று இறங்கிய பலூன போலானான். ஏதோ நினைவு திரும்புகிறது என சந்தோசப் பட இருந்தவள் ''ம்கூம்'' என்ற பதிலைக் கேட்டு கலங்கினாள்.

''தெரியல திவ்யா. ஆனால் பிரியாவுக்கு ரோஜான்னா இஷ்டம். உனக்கு பிடிக்குமா? '' கேட்டவனிடம் சொன்னாள்.

''கொள்ளைக் கொள்ளையாய் பிடிக்கும். ஆனால் இப்போ இல்லே!''

''அப்படியா? ஏன்? நீ ரோஜா வச்சிட்டா அழகா இருக்குமே! '' என்று



சொன்னதோடு நில்லாமல்... ஒரு ரோஜாவை கிள்ளிக் கொண்டு அருகில் வந்து, அவள் தலையில் சொருக போக...

''வேணாம்... வேணாம்! எனக்கு பிடிக்காது! அதுவும் இல்லாமல் நான் வைக்கக்கூடாது!''

''ஏன்?'' சிறுபிள்ளையாய் கேட்டவனிடம்...

''உங்களுக்கு சொன்னால் புரியாது அசோக்! உடம்பு நல்லாகட்டும் நானே சொல்கிறேன்!''

''நான் நல்லாத்தானே இருக்கேன்'' என்று கூறி... அறியாக் குழந்தையாய் சொல்லும் போது... நெஞ்சை நிமிர்த்தி வேண்டும் போல் இருந்தது திவ்யபிரியாவுக்கு!

இப்போது அவளுக்கு அவன் தேவையே இல்லை. நினைத்தாலும் அவன் இனி கிடைக்க மாட்டான். அந்தத்தகுதியை சேகர் தாலிகட்டிய நொடியே இழந்தாகி விட்டது. அவள் வேண்டுதல் வரம் எல்லாமே அவன் குணமடைய வேண்டும் என்பதுதான்.

''அசோக்கை அடைய வேண்டுமானால் இன்னொரு ஜென்மம் எடுக்க வேண்டும்... அதுவும் பணக்காரியாய்! அப்போதுதானே சாரதா சும்மா இருப்பாள். அசோக் எனக்கும் மறுஜென்மத்தில் நம்பிக்கையே இல்லை! அப்படி இருந்தால் எனக்கு காதலனாகவும்... எனக்கே எனக்கு கணவனாகவும் பிறக்க வேண்டும் கண்ணா நீ! என் பிள்ளைக்கு தகப்பன் தான் நீ! இது என்னாலும் யாராலும் மறக்க முடியாத உண்மையடா அசோக்!''

''உன்னை சரிபடுத்த எவ்வளவு வேண்டுமானாலும் உழைப்பேன்... கஷ்டப்படுவேன் அசோக்! உன்னை குணமாக்கி... அந்தப் பெண்ணிடம் சேர்ப்பதுதான் என்னுடைய முதலும் கடைசியான குறிக்கோள்! என் பிள்ளையெல்லாம் இரண்டாம் பட்சம்!''

கேட்டான்.

அவளோடு நான் முழுக்க இருந்தவன்... நடுஇரவில் எழுந்து ''திவ்யா... எங்கே திவ்யா வேணும்!'' அழுதான்.

''அக்காவோட படுத்துக்கடா கண்ணா... அக்கா கதை சொல்லுவேன்! பாட்டுபாடுவேன்! என்ன?'' ஜெயந்தி சமாதானப்படுத்த...

''வேணாம்... நீ கதை சொன்னால் நல்லாவே இருக்காது. உனக்கு அழகா பாடவே தெரியாது! பொய் சொல்றே நீ! திவ்யா பாடினாத்தான் கேட்பேன்! திவ்யா வேணும்! திவ்யா கிட்டே அழைச்சிப்போங்க! தம்பிகிட்டே



நான் யூரின் பாஸ் பண்ணிட்டு வரேன்

அதையாவது பாஸ் பண்ணித் தொலை

- கிருஷ்ணன், கோயம்புத்தூர்.

அழைச்சிப் போங்க...ம்..ம்'' என்று மீண்டும் குரல் எடுத்து அழவும்...

அந்த நேரத்தில் கதவைத்தட்டி விபரம் கூற...திவ்யா அதிர்ந்துப் போனாள்.

அவனை சமாதானப்படுத்தி தூங்க வைப்பதற்குள் தவித்துப் போனாள்.

## 16

திவ்யாவுக்கு தாங்க முடியாத துக்கம் தொண்டையை அடைக்க... விம்மி விம்மி அழுதாள். வெடித்து வெடித்து அழுதாள். புரண்டு படுத்த அசோக்... இவள் அழுகுரல் கேட்டு எழுந்தவன்... ''திவ்யா... திவ்யா.. ஏன் அழறே?'' என்றவன் லைட்டை மெதுவாய் தேடிப்போட்டான். அந்த அளவு குணமாகியிருந்தான்.

''உங்களுக்கு முந்தானை விரித்து...வேறொருவன் மனைவியான கதை தெரியுமா அசோக்? எனக்கு நடந்த கொடுமைகளை எல்லாம் கேட்டால் துடித்துப் போவீர்களா? எனக்கு தூங்கும் போது தாலிகட்டிய அநியாயம் அறிந்தால் தாங்குவீர்களா? நான் இன்னும் உங்களுடையவளாய்... மாசுமறுவில்லாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன் என்றால் நம்புவீர்களா அசோக்? மாற்றான் வீட்டுத்தோட்டத்தில் அவன் கைபடாமலே வாழ்ந்த மலர் என்றால் ஒத்துக்கொள்வீர்களா அசோக்? அவன் தொட வந்தால் கம்பளிப்பூச்சியை கண்ட ஜீவனாய்... வெறுத்து ஒதுங்கினதையும்... அரிவாள்மனையைத் தூக்கி காட்டியதையும் சொன்னால் நம்புவீர்களா?

'அவனோடு ஒரே வீட்டில் ,அவன் தாலியை கழுத்தில் சுமந்துக் கொண்டு உங்கள் பிள்ளையை வயிற்றில் சுமந்துக் கொண்டு உங்களுடையவளாகவே வாழ்ந்ததைக் கூறினால் புரிந்து கொள்வீர்களா? சமுதாயம் என்னையும், என் வார்த்தைகளையும் நம்பாது. ஆனால் நீங்கள்?'

'பிரியா.. பிரியா... என்று பிரியமாய் சுற்றி வந்த அசோக்கை இனி பார்க்கவே முடியாது. இல்லையா? உங்களை கொன்று விடுவார்கள் என்றதால்... அதற்கு பயந்து ஓடி ஒளிந்தது எவ்வளவு தீமையில் முடிந்துவிட்டது. உங்களை நானே சித்தம் கலங்கி பைத்தியம் பிடிக்க விட்டு விட்டேனே! என்ன பாவம் செய்தோமோ? இப்படி பிரிந்து விட்டோம் அநியாயமாய்! இனி நினைக்கவும் சேர முடியுமா? வாழ்க்கை நடத்த முடியுமா? இதில் எதுவுமே நடக்க வேண்டாம், நீங்கள் மட்டும் பழைய அசோக்காய்.. சித்தம் தெளிந்தால் போகும்!'

''திவ்யா அம்மா போன் செய்தார்கள். அநேகமாய் நாளைக் காலையில் வரலாம் என்று நினைக்கிறேன்'' என்று ஜெயந்தி பெரிய குண்டை தூக்கிப்போட... செய்வதறியாமல் கலங்கியவள்... நிஜமாகவே உடல்நிலை சரியில்லாமல்... அதிர்ச்சியில் ஜுரம் வந்துவிட்டது.



''என் அசோக்குக்கு நான் பணிவிடை செய்வது அந்த கடவுளுக்கே பிடிக்காததால் தான். சாரதாவின் உருவில் இங்கே எமனை அனுப்புகிறேன்'' என்று மனம் வருந்தினாள். நான் இரவெல்லாம் குளிர் ஜுரத்தால் நடுங்கி வாட... அசோக்கும், குழந்தையும் நிம்மதியாய் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு தூங்கினர்.

மறுநாள் ஆறு மணி!

காலையில் திவ்யாவை வந்துப் பார்த்தவள் பதறினாள்.

''இவ்வளோ ஜுரம் இருக்கே வா டாக்டர்கிட்டப் போகலாம் திவ்யா... அல்லது டாக்டரை வரவழைக்கவா?''

''அதெல்லாம் ஒன்னும் வேண்டாம். மாத்திரை போட்டிருக்கேன். சரியாயிடும்! நான் படுத்துகிறேன். முடியவில்லை!'' என போர்வையை தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

''சரி முடியலேன்னா படுத்துக்க! அசோக்கையும், குழந்தையையும் கூட்டிப்போறேன்'' குழந்தை எழுந்து அப்போது அழ அசோக்கும் எழுந்தான்.

''அம்மா அம்மா வந்திருக்காடா. நம்ம அம்மா அசோக்!'' என்று கூட்டிப்போய் சாரதாவின் முன்புவிட அரக்கியைப் பார்த்த கணக்காய் அலறினான்.

''இவ என் அம்மா இல்லை! இவ என் அம்மாவே கிடையாது. திவ்யா... திவ்யா தான் என் அம்மா!'' என்று கூறினான். அசோக்.

''யாருடி திவ்யா?'' என்று சாரதா ஜெயந்திடம் கேட்க..

''இவனைப் பார்த்துகிற பொண்ணும்மா! இவன் அவளோட நல்லா ஒட்டிகிட்டான். யார் சொன்னாலும் கேட்காத அசோக் அவள் சொன்னாக் கேப்பான். அவள் சொன்னால் அடங்கிப் போயிடுவான். அவளும் இவனை ஒரு வேலைக்காரியாய் பார்த்துக்கலே! பிரியமாய் பார்த்துக்கிறாள். உன் பிள்ளை கூடிய சீக்கிரமே குணமாயிடுவான். டாக்டர் ரொம்பவே முன்னேற்றம் தெரிவதாய் சொல்கிறாள். பாவம் சின்னப்பெண், அவள் போதாத காலம். எவனோ அவள் அருமைத் தெரியாதவன் கையில் மாட்டியிருக்கிறாள். சித்திரவதை படுத்தியிருக்கான். கை குழந்தையோட கஷ்டப்பட்டுட்டு இருந்தவள்.. கடைசியாய் இங்கு வந்து சேர்ந்தாள். தங்கமான பெண்! இது அவள் குழந்தை சிவா!'' இடுப்பில் இருந்த குழந்தையைக் காட்டினாள்.

''ஏய் சின்னப் பெண் என்கிறாய்! விதவை என்கிறாய். இவனும் இளைஞன் ரொம்ப பழகவிடாதடி. ஏதாவது விபரீதமாயிடப் போகுது!'' என்று சாரதா பதற்றத்துடன் கூற...

''ஐயோ..சே! புத்தி ஏன்தான் இப்படிப் போகுதோ! உன்னை திருத்தவே முடியாதும்மா! எப்போதான் திருந்துவே? உன்னால் உன் ஆசை மகன் பைத்தியமாய் அலைவது தெரியலையா? உனக்கு அசோக்கைப் பற்றிய கவலை இருக்கா? சீக்கிரம் குணமாகணும். அந்த பெண்ணைக் கட்டி வைத்து... சொத்தோட சொத்து சேரணும்னு நினைக்கத் தெரிந்தவள்... இவனைப் பார்த்துக்கவும். இவனை நல்ல மாதிரியாய் குணப்படுத்தவும். ஒரு துரும்பை கிள்ளிப் போட்டாயா? ம்?'' என்று நாக்கை பிடுங்கிக் கொள்ளும் அளவு கேட்க.. சாரதா திணறிப்

போனான். பின்...

''திருத்துடி! விட்டா நீ பேசிட்டே போவே! என் புருஷன் இருந்தால் எல்லோரும் இப்படி கேவலமாய் பேசுவீங்களா? பேசத்தான் விடுவாரா? '' என்று சாரதா குறைப்பட்டாள்.

''புருஷனைப் பற்றிய கவலை இருக்கா? ஆச்சரியம் தாம்மா'' என்று ஜெயந்தி கூற

''இது என்னடி கருமம்? வேலைக்காரியோட பிள்ளையைபொல்லம் இடுப்பிலே ஏத்திக்கிறே! சே! ஆமாம்.. வேலைக்காரியோடதுன்னு சொல்றே.. குழந்தை அழகா.. கொழுகொழுன்னு இருக்கே'' என்று உற்றுப் பார்த்துச் சொன்னாள்.

''கண்ணு வைக்காதேம்மா! உன் கண்ணுபட்டால் உருபடவே முடியாது!''

''அட நம்ம அசோக் போலவே இருக்கானே! என்ன ஆச்சரியம்? ஏய் ஜெயந்தி.. நம்ம அசோக் சின்ன பிள்ளையில இப்படிந்தான்டி இருப்பான்!'' ஆச்சரியப்பட்டாள்.

அது அசோக்கின் பிள்ளை தான் என்று தெரியாமல்!

''ஓரிரு நாட்கள் வரை திவ்யாவை அவள் சந்திக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது ஆச்சரியம் தான்.

17

அன்று டாக்டர் வந்தார். பரிசோதித்தார். ஊசியை எடுத்ததுமே திவ்யாவின் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டான். இப்போதெல்லாம் ஊசிப் போட்டுக்க கூட மறுப்பதில்லை. ஆனால் அருகில் திவ்யா வேண்டும்.

''அம்மா.. இவனோட மன நிலைய, உடல்நிலையில் ரொம்பவே முன்னேற்றம் தெரியுது! இப்படியே அடைத்து வைக்காமல் வெளியே எங்காவது பார்க்குக்கு கூட்டிப் போகலாமே! இவருக்கு அது பயன்படலாம். செய்யுங்க!'' என்று கூறவும் மெதுவாய் தினமும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு அழைத்துப் போவாள்.

''பின்னர் துணிந்து அருகில் ஆட்கள் நடமாட்டம் உள்ள பூங்காவிற்கு இடுப்பில் குழந்தையோடும்.. கையில் அசோக்கோடும் சென்று தனியான இடம் தேடி அமர்ந்தாள்.

அசோக் ஆச்சரியமாய் சுற்றும் முற்றும் பார்த்தவன் ஒரு வண்ணத்துப் பூச்சியைக் கண்டான். அதனை விரட்டிக் கொண்டேப் போய். அதை பிடித்து விட்ட வெற்றியில் சிரித்துக் கொண்டு திவ்யா அருகே வர.. கண்கலங்கினாள். அன்று கல்லூரியிலும் அப்படித்தான். அவளுக்கு பிடிக்கும் என்று பிடித்துத்தந்தான்.

''திவ்யா.. வண்ணத்துப்பூச்சி பிடிக்குமா?''

''ம்...'' என்றாள் நீர் அருவியாய் விழும் கண்களோடு!





''கரும்பு ஜூஸ் வியாபாரம் எப்படி போகுது?''
'சக்கை' போடு போடுது''
-இரமணி, மதுரை.

''என் பிரியாவுக்கும் பிடிக்கும்! ஆமாம் பிரியா எங்கே? என்னை இங்கே விட்டுட்டு எங்கேப் போனாள்? என்னைப் பார்க்க பிரியா வருவாளா? எப்போ வருவாள்? உனக்கு தெரியுமா திவ்யா? என் பிரியா எப்போது வருவாள்? ஏதோ ஞாபகம் வந்தவனாய் மீண்டும் பிரியாவைக் கேட்டான்.

''அவள் வரவேமாட்டாள் அசோக்!

''பிரியா இல்லன்னா... எனக்கு திவ்யா இருக்கே இல்லே! நீ என்னைவிட்டு போகமாட்டே இல்லையா?

''......''

''என்ன? சொல்லு திவ்யா? என் கூடவே இருப்பாயா?''

அவள் அழவும்.....

''நீ அழாதே! நான் இப்படி கேட்க மாட்டேன். உன்னை தொந்தரவு பண்ணமாட்டேன்.''

''விட்டுடுங்க அசோக்! அது ஒரு உயிர்! பாவம்!'' என்று அவள் கூற.. வண்ணத்துப்பூச்சியை விட்டான்.

அவள் சொல்லே வேதம்!

அன்று மதியம்...

பெரிய வீட்டில் அசோக்கும், சிவாவும் உறங்க.. இவள் வேலையை முடித்துவிட்டு அன்றைய தினசரி பத்திரிகையை புரட்டிக் கொண்டிருக்கும் போது வெளியே ஹாரன் ஒலிக்க எழுந்துபோய் கதவைத் திறந்துவிட... காரிலிருந்து இறங்கிய சாரதா வெறி கொண்டவளாய் ஓடி வந்து... திவ்யா இந்த அதிர்ச்சியை ஜீரணிக்கும் முன், உணரும் முன் ஓங்கி கன்னத்தில் அறைவிட்டாள்.

''நாயே... எப்படி அசோக் இருக்குமிடம் தெரிந்து மோப்பம் பிடித்து வந்தே? என்ன துணிச்சல்? எவ்வளவு திமிர் இருந்தால் என் பையனிருக்கும் இடம் கண்டுபிடித்து வருவாய்? ம்? '' சீறினாள்.

''இல்லேம்மா.. இல்லே!'' என்று கையாட்டி மறுத்தாள்.

''என்னடி இல்லே! நீயெல்லாம் ஒரு பெண்ணா? என் மகன் பித்துப்பிடித்து அலையக் காரணம் நீதான்! நீ உருபடமாட்டாய்! உனக்குத்தான் உன் மாமனோட கல்யாணமாயிடிச்சின்னு கேள்விப்பட்டேனே! அப்போ போனமுறை வந்திருந்தபோது ஜெயந்தி சொன்ன திவ்யா நீதானா? எங்கேடி அவன்? அவனா செத்தானா? இல்லே நீ விஷம் வைச்சி சாகடிச்சியா? அறுத்துப் போட்டுட்டியா?

திவ்யா இதனைக் கேட்டு துடித்துவிட்டாள்.

''வேண்டாம்... வேண்டாம்... மேலே பேசாதீர்கள்!'' கையெடுத்துக் கும்பிட்டாள்.

''என்னடி! நான் அப்படித்தான் பேசுவேன்! நீதான் ஆடு சொரணைக்கெட்ட ஜென்மமாச்சசே! உன் கனவு பலிக்காதுடி! இவன் குணமாகறதா கேள்விபட்டேன்.

முழுசா குணமானதும்.. இவன் தலையில கிருத்திகாவை கட்டிவச்சிட்டுதான்டி மறுவேலையே பார்ப்பேன்! இல்லேன்னா கண்ட கழுதைகள் எல்லாம் என் பிள்ளையை மேய வந்துடுவாளுங்க!''

''போதும். போதும்மா...'' அழுதாள்.

''போதும்னு செல்ல நீ யாருடி? போ.. போய் விடு! நீ ஒரு தப்பான எண்ணத்தில் வரவில்லையென்றால்... உடனே மூட்டையைக் கட்டிட்டு போயிடு!''

''அம்மா... இப்போ அசோக்கு கொஞ்சம் கொஞ்சமா தேறிட்டு வருகிறார். இப்படி குணமாகி வரும் போது நான் போனால்... சரி வராதும்மா. எனக்கு எந்தவித கெட்ட நோக்கமோ.. எண்ணமோ இல்லை. என் பிள்ளைமேல் ஆணைம்மா! அவருக்கு குணமானதும் நானேப் போயிடறேன்!'' கெஞ்சினாள் திவ்யா.

''குணமானால் எப்படி போவே? அவன் உன்னை போகவிடுவானா? உன்னைத் திரும்பவும் பார்த்தால் வேதாளம் முருங்கை மரம் ஏறிக் கொள்ளாதா? அவன் குணமாகும் போது நீ அருகிலேயே இருக்கக்கூடாது! இப்பவே இப்படி திவ்யா பைத்தியமாய் இருப்பவன்..

அப்புறமாய் திவ்யா பிரியா பைத்தியமாய் ஆனாலும் ஆயிடுவான். உன் திவ்யாபிரியாங்கிற ரெண்டு சக்தியும் ஒன்று சேர்ந்து என் பிள்ளையை உருப்படாமல் செய்துவிடும். இதுவரை பார்த்துக் கொண்டது போதும். போ இங்கே இருந்து!''

வேகமாய் சத்தம்போட்டு அலறினாள்.

''அம்மா.... அவங்க ஜெயந்தி வந்ததும் சொல்லிட்டுப் போயிடறேன். ப்ளீஸ்மா...'' கெஞ்சினாள்.

''அதெல்லாம் வேணாம். அவன் அசோக்கை விட பிடிவாதக்காரி! நீதான் அவன் காதலித்த பெண் என்று தெரிந்தால் அவனே உன்னைப் பிடிச்சி அசோக்குக்கு கட்டிவச்சாலும் வச்சிடுவான்.

ஆமாம் இது உன் பிள்ளையா? உயிரோடு இருக்கணுமா? வேண்டாமா?'' என்றவள் தூங்கிக் கொண்டிருந்த பிள்ளையைத் தூக்க... இவ்வளவு நேரம் கெஞ்சியவள். ஓடிப்போய் சாரதாவிடம் இருந்து சிவாவை வெறி கொண்டவள் போல பிடுங்கினாள்.

''நானே போயிடறேன்!'' என்று சொன்ன திவ்யா. வேகமாய் போய் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து. அசோக்கை விழிகளால் நோக்கியவளுக்கு கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் கிளம்பி விட்டாள்.

இந்த உலகில் எதிர்நீச்சல் போ



## 12

ஜெயந்தி கொடுத்த சம்பளப் பணம் இருபதாயிரம் இருந்தது. மீண்டும் சென்னைக்கே வந்தாள். அம்மாவோடு வசித்த தெருவிலேயே ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கினாள். அந்த வீட்டிற்கு முன்பணமாய் பதினைந்தாயிரம் கேட்க... வேறு வழியில்லாமல் இருந்த பணத்தை கொடுத்துவிட்டாள். பக்கத்து வீட்டு ஆயாவிடம் சிறு தொகையைக் கொடுத்து குழந்தை சிவாவை பார்க் கொள்ளச் சொல்லிவிட்டு.. ஒரு மாதமாய் அலைந்ததில் சொற்ப சம்பளத்தில் ஒரு வேலையும் கிடைத்தது.

'அசோக் நான் இல்லாமல் கலங்கினாயா? கதறினாயா? என்னை விட்டுவிட்டு உன்னால் இருக்க முடிகிறதா? நான் இல்லாமல் தவித்தாயா? உன் உடல் மீண்டும் சீர்கெட்டுவிட்டதா?'

'அசோக் உன்னருகில் இருந்து பார்த்துக் கொள்ளும் பாக்கியத்தைக் கூட அந்த கடவுள் எனக்கு கொடுக்கவில்லையே! நான் அப்படி என்ன பொல்லாத பாவம் செய்தேன்?'

'நீயில்லாமல் எனக்கு கஷ்டமாய் இருக்கு அசோக்! இதற்கு முன் உன் மகளைப் பார்த்துப் பார்த்து ஆறுதல் அடைந்தேன். திரும்ப உன்னைப் பார்த்ததும். அதிலிருந்து என்னால் சிவாவைப் பார்த்து என்னைத் தேற்றிக் கொள்ள முடியவில்லை!'

'உனக்கு குணமாகியப்பின் வந்திருந்தாலும்... நான் நிம்மதியாய் இருந்திருப்பேன். அதற்கும் கொடுத்து வைக்கவில்லை. உன்னையே நினைத்து. என்னால் உண்ணவும். உறங்கவும் முடியவில்லை. நீ நேரத்துக்கு அடம் பண்ணாமல் சாப்பிடுகிறாயா? உறங்குகிறாயா அசோக்?

அங்கே அசோக்கை சமாளிக்க முடியாமல் ஜெயந்தி தவித்தாள். எஸ்டேட் பொறுப்பை பார்த்துக் கொள்ள ஒருவரை நியமித்து விட்டு. அசோக்கைப் பார்த்துக் கொண்டாள்.

திவ்யா.... திவ்யா என்று அலறி.. கலங்கி குழம்பியவன் அந்த அதிர்ச்சிலேயே ஒரு நாள் குணமானான்.

ஜெயந்தி, சாரதா, பிரபாகர், ரம்யா என்று அனைவரும் சந்தோசத்தில் துள்ளிக் குதித்தனர்.

சென்னை அழைத்து வரப்பட்டான். திவ்யா அவன் நினைவில் இல்லை. பழைய படி பிரியா... பிரியா என்று புலம்ப.... அவனிடம் அனைவரும் அன்பாய் இருந்தனர்.

பிரியாவிற்கு திருமணம் ஆகிவிட்டது. சந்தோசமாய் இருக்கிறாள் என்று பேசிப்பேசியே சாரதா அவன் மனதைக் கலைத்தாள். இனி பிரியா தனக்கு கிடைக்கப் போவது இல்லையெனத் தெரிய... பிசினஸ் பார்க்க சென்றான். அசோக் மறந்ததை பிசினஸ் தொடர்புகளை சொல்லித்தர

முழு மூச்சாய் பிசினஸ்ஸில் இறங்கினான்.

பிரியாவுக்கு மணமாகி, சந்தோசமாய் இருப்பதாய் கூறவும், பிடிவாதமாய் அவளையும் அவள் நினைவுகளையும் மனதிலிருந்து, மூளையிலிருந்து அழிக்க பெரும் படுபாட்டான்.

ஒருநாள் ஆபீஸ் முடிந்து சாலையில் சென்று கொண்டிருக்கும் போது ''திவ்யா, பிரியா திவ்யாபிரியா'' என்று அழைத்துக் கொண்டு அசோக்கின் நண்பன் ராம் அருகில் ஓடி வந்து நின்றான்.

''என்ன பிரியா நல்லா இருக்கியா? என்ன இது கோலம்? ஏன் இப்படி மெலிந்து... அடையாளமே தெரியாமல் இருக்கிறாய்? உனக்கும், அசோக்குக்கும் கல்யாணம் நடந்ததா? மடையன் நான் அமெரிக்காவுல இருந்தப்போ எனக்கும் பிரியாவுக்கும் கல்யாணம்ன்னு சந்தோசமா சொன்னான். அதன் பிறகு பத்திரிகையும் அனுப்பலே! போனும் பண்ணலே! என்ன... என்ன நடந்தது?'' என்று படபடப்பாய் கேட்டான்.

ராமை கண்டதும் திவ்யாபிரியாவுக்கு சந்தோசமே!

''வா திவ்யா. அந்த காபி ஷாப்பில் உட்கார்ந்து பேசலாம். நீயும் களைத்து தெரிகிறாய்''.

கடையில் ஒரு ஓரமான இருக்கையில் அமர்ந்தனர். சூடான காபி உள்ளே இறங்கியதும் தெம்பானாள்.

ராமிடம் சுருக்கமாய் கூறினாள் கண்ணீரோடு!

''ஐயோ கடவுளே! அசோக் பைத்தியமாயிட்டானா? அதுதான் தகவலே இல்லையோ? அசோக்கிற்கு தெரிந்தால் தாங்கிக் கொள்ளமாட்டானே! அவனுக்கு குணமாயிடிச்சான்னு தெரியணும் அவ்வளவுதானே.. நான் இப்போ அவசரமான வேலையாய் கல்கத்தா போறேன். திரும்ப வந்ததும் அசோக்கை பார்த்துட்டு வந்து அவனைப் பற்றிய தகவல் சொல்றேன். நீ நிம்மதியாய் வீட்டுக்குப் போ! இனி சென்னையில் தான் என் வேலையும் கலங்காதே! வந்த உடனே ஓட்டி போயிட்டுவரேன். என்னை நம்பு திவ்யா. உன்னை என் தங்கையாய்தான் நினைத்து எல்லா உதவியும் செய்வேன்''

அன்றிலிருந்து நிம்மதியடைந்தாள். சனி ஞாயிறானால் வடபழனி முருகன் கோவிலுக்கு சென்று, காலையில் இருந்து மாலை வரை அங்கேயே ஓரமாய் ஒரு சன்னதியில் அமர்ந்து. அசோக்குக்காக வேண்டுவதை வழக்கமாய் கொண்டிருந்தாள், அவனைவிட்டு பிரிந்து வந்ததிலிருந்து.

இங்கே அசோக்கு கல்யாண தேதி அறிவித்து கிருத்திகாவுடன் கல்யாணத்தை சிம்பிளாய் கோவிலில் முடித்துவிட்டு .... வரவேற்பை பெரிதாக தடபுடலாய் செய்துவிடுவது என்று அவன் அம்மா தீர்மானித்துவிட்டாள்.

மணநாள்.

அசோக் முகத்தில் வேதனைரேகை படிந்து.. மனசே இல்லாமல்.. மணவறையில் அமர்ந்திருந்தான். அவன் மனம் பிரியா பிரியா... எனப் புலம்பியது.

சொந்த பந்தம் மட்டுமே அந்த கோவிலில் கூடி இருந்தது. சாரதாவைப்



பார்த்து ஐயர் கூறினார்.

''அம்மா... இவருக்கு தோசமிருப்பதாய் ஜோசியர் கூறியதாய் சொன்னீர்களே. அதற்கு பரிகாரமாய் இரண்டு விதவைப் பெண்களுக்கு பழம், பணம், புடவை வைத்து தட்டில் கொடுக்கப்போவதாய் கூறினீர்களே! ரெடியா? தட்டு ரெடியா? இரண்டு விதவைப் பெண்கள் ரெடி பண்ணிடுங்க'' என்றார்.

சாரதா தலையில் அடித்துக் கொண்டாள்.

''ஐயோ மறந்தே போச்சு! தட்டு ரெடியா இருக்கு! விதவைப் பெண்கள் ரெண்டு பேரை ஏற்பாடு செய்யலையே! யாராவது இருக்கிறார்களா?'' என்று கூறி சுற்றும் முற்றும் பார்க்க.... யாருமே கண்ணில் படாமல் போகவும் சாரதா தவித்தாள்.

''ஐயரே நான் ஒருத்தி இருக்கேன். இன்னும் ஒருவர் இருந்தாலே போதுமே!'' என்றாள் சாரதா.

''ஏய் ஜெயந்தி போடி.. சீக்கிரமே போய்.. யாராவது இருந்தால் அழைத்து வா!'' என விரட்ட

''அம்மா.. நல்ல நேரம் போகுது... சீக்கிரமே வாங்க'' என்று ஐயர் பரபரக்க...

ஜெயந்தி ஓடினாள். அன்று ஞாயிறு என்பதாலும், காலை என்பதாலும் கூட்டமே இல்லாமல் இருக்க ஒவ்வொரு சன்னதியாய் ஓடிப்பார்த்தாள்.

''காலையில் மாலையில் கருத்துடன் நாளும் ஆசாரத்துடன் அங்கம் துலக்கி நேசமுடன் ஒரு நினைவது ஆகிக் கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச் சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்...

என்று பாடிக் கொண்டிருந்த திவ்யபிரியாவை உலுக்கினாள். குழந்தையை ஜெயந்தி ஆசையுடன் தூக்கி முத்தமிட்டாள். கண் விழித்துப் பார்த்த திவ்யபிரியா அதிர்ச்சியுடனான ஆனந்தம் அடைந்தாள்.

''திவ்யா... பேச நேரமில்லே! நீ உடனே வரணும்மா...'' என்று கைப்பிடித்து இழுக்காத குறையாய், எழுப்பி அழைத்துச் சென்றாள்.



தோசைக்கு மாவு அரைக்கும் போது அரிசியுடன் ஒரு கைப்பிடி வெந்தயம் சேர்த்தால் தோசை மொறு மொறுப்பாக இருக்கும்.

-க.வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி.

''எங்கே? எங்கே?'' என கேட்கவும்.. பதில் சொல்லாமல் ஜெயந்தி. கூட்டத்தை தள்ளிக் கொண்டு மணவறைக்கு திவ்யபிரியாவை அழைத்துச் செல்ல..

''தள்ளுங்க தள்ளுங்க...'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்த அசோக்.. நெற்றியில் திருநீறு கோலமாய்... இளைத்து... கறுத்திருந்த திவ்யப்ரியாவை அடையாளம் கண்டு திமிறித்தவன் போல துள்ளி எழுந்தான். பூகம்பத்தில் சிக்கியவன் போல தவித்தான்.

சாரதாவோ பேரதிர்ச்சிக்கு உள்ளானாள். ஜெயந்தியை சபித்தாள்.
''அடி வீணாய் போனவளே! உனக்கு இவன்தான் கிடைச்சானா?''

அசோக்கை மாலையும் கழுத்துமாய் கண்ட திவ்யபிரியா ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

ஜெயந்தியின் கையிலிருந்த குழந்தையையும், பிரியாவையும் மாறிமாறி பார்த்தவன் பேசவே முடியாமல் ஊமையானான். கடலில் மூழ்கி.. மூச்சுமுட்ட முத்தெடுத்தக் கணக்காய் அவன் உள்ளம் துள்ளியது.

## 19

அசோக் என்ற சிலைக்கு உயிர் வந்தது பேசியது.

''பிரியா... திவ்யபிரியா என் பிரியா... என்னை விட்டுட்டு எங்கேயடி போனாய்? உனக்கு கல்யாணமாகி சந்தோசமாய் இருப்பதாய் சொன்னார்களே... அது பொய்யா? இது என் பிள்ளைதானே!'' என்று அவளைப் பிடித்து உலுக்கவும்... ராம் அங்கு அவசரமாய் வந்து சேரவும்....

''ஏய் அவளை விடுடா. நான் எல்லாம் சொல்கிறேன்'' என்றவன் சொன்னான்.

''நீ டெல்லிப்போன மறுநாளே கிருத்திகாவும், அவள் அப்பாவும் தன் சொத்துக்களைக் காட்டி.... உன்னை மாப்பிள்ளையாய் விலை பேசியதும்.. உன் அம்மா வந்து 'உன்னை கொன்றுவிடுவேன்' நீ போகவேண்ணா என்று திவ்யாவிடம் மிரட்ட அவள் பயந்து மாமன் வீட்டுக்கு போய்விட்டாள்.

இவள் தூங்கிக் கொண்டிருக்கும் போது... அந்த கயவன் இவள் கழுத்தில் திருட்டு தாலிகட்ட அதன் பிறகும் அவனை தொட அனுமதிக்காததால் இவளை கொடுமை படுத்தி இருக்கான். இவளை இவளது மாமா செய்த சித்ரவதையை, கொடுமையை பார்க்க முடியாமல் ஒரு நாள் அந்த தாயும் நெஞ்சடைத்து உயிர்விட்டுவிட்டாள். வயிற்றுப் பிள்ளையைக் காப்பாற்ற... நிறைய போராடி இருக்கிறாள். இந்த குழந்தையை நீயே கொன்னுடு! இல்லையென்றால் நாளை நானே இதற்கு எமன்! என்று கூறிச் சென்றவன்... லாரியில் அடிபட்டு இறக்கவும்... கஷ்டப்பட்டு குழந்தையை காப்பாற்ற கையில் காசில்லாமல் தவித்திருக்கிறாள்.

கடைசியாய் உன் அக்கா கொடுத்த விளம்பரம் பார்த்து.. நீதான் என்று தெரியாமலேயே அங்கு வந்து சேர்ந்தாள். நீ பைத்தியமாய் இருந்து செய்த அத்தனை தொல்லைகளையும் தாங்கி உன்னை தெளிய வைக்க படாத பாடுபட்டுக் கொண்டிருந்தபோது... உன் நம்பி வந்து... திவ்யாவை அங்கு கண்டு... குழந்தையை கொன்றுவிடுவேன். போகிறாயா? இல்லையா? என மிரட்டவும் குழந்தையைக் காப்பாற்ற சொல்லாமல்... கொள்ளாமல் இங்கே வந்து சேர்ந்தாள். தற்செயலாய், சமீபத்தில் இவளைப் பார்த்தேன். அன்றே உன்னைத் தேடி வந்திருந்தால் இத்தனை தூரம்



வந்திருக்கமாட்டாய். விளக்கம் போதுமா? இன்னும் ஏதாவது டவுட் இருக்கா? சொல்லுடா? இனியா பண்றேன்!'' இவ்வளவு நேரம் கோர்வையாய் பேசியவன் நிறுத்தி நிதானமாய் சொன்னான்.

''திவ்யபிரியா... தன் மூச்சுக்காற்று கூட அவன் மேல படாமல் தன்னைக் காத்து... உண்மையானவளாய்.. தூய்மையானவளாய்.. தவமிருந்துக் கொண்டிருக்கிறாள். அவள் தவம் வீண் போகக் கூடாது அசோக்!'' கலங்கிய குரலில் கூறினான் ராம்.

''அப்போ... இந்த குழந்தை என் குழந்தை! ஓ... டெல்லி போவதற்கு முதல் நாள்....'' ஞாபகம் வந்தவனாய் ''என் ரத்தம்! என் ஜீவன்! என் உயிர் ஐயோ...


என் பிள்ளையையும், என்னவளையும் அநாதையாய் தவிக்கவிட்டுட்டு... அது தெரியாமல் பைத்தியமாய் அலைந்து இருக்கேனே! ஓ மை காட்! அந்த கேசர் கையில் மாட்டிட்டு எத்தனை சித்திரவதைக்குள்ளானாய் என் பிரியா! இது தெரியாமல்... எனக்கு இங்கே மாப்பிள்ளை வேஷம் போட்டு விட்டார்களே! இவர்களின் கட்டாயத்திற்காக... மனத்திற்கு ஒப்பாமல் தான் ஒத்துக் கொண்டேன். என்னை நம்புடா பிரியா...'' என்று உணர்ச்சி வசப்பட்டு அவள் கைப்பிடிக்க...

''ஐயோ... வேண்டாம்! நான் விதவை! எனக்கும் உங்களுக்கும் பொருத்தமே இல்லை. நீங்க கிருத்திகாவை திருமணம் செய்வதுதான் நல்லது!'' அவள் விடுவித்துக் கொள்ள போராடினாள்.

''அதை நீ சொல்லக் கூடாது கண்ணம்மா. யாரைப் பண்ணிக்கணும்னு எனக்கு தெரியும். அவளை கட்டிக்க ஆயிரம் பேர் வருவான். ஆனால் உன்னையும், என் பிள்ளையையும் காப்பாற்ற யார் வருவார்கள்? என் பிள்ளைன்னு தெரிஞ்சே விட்டுட்டு.. எப்படி வேறு ஒருத்தியை மணப்பேன்?'' அவன் கெஞ்ச....

''இதை ஊர், உலகம் ஏற்றுக் கொள்ளாதே! உங்களை அசிங்கமாய் பார்க்குமே! தூற்றுமே!'' அழுகையோடு சொன்னாள்.

''இந்த ஊரும், உலகுமா இத்தனை நாள் நம்மை கண்கலங்காமல் காப்பாற்றியது? அவர்கள் என்ன சொல்வது? எப்படிப்பட்ட பொக்கிஷத்தை... புதையலை... என் தேவதையை கொஞ்சநேரம் தாமதமாய் நீ வந்திருந்தால் இழந்திருப்பேன். நீ இப்போ வரலேன்னா.... என் வாழ்க்கை ஐயோ கடவுளே... ஏய்



தயா பசடி, சாலட போன்றவை தயார் செய்யும் போது தேங்காய் எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டினால் வாசனை பிரமாதமாக இருக்கும்.

-ஆர்.பிரகாசம், கோவிலூர்.

கிருத்திகா.. பார்த்தாயா? கடவுள் என் பக்கம் இருக்கிறான்! என் உயிரின் உயிரை, என் அன்புக் காதலியை என் கண்முன்னே மீண்டும் நிறுத்தி விட்டார்'' என்று கிருத்திகாவைப் பார்த்து பெருமையாய் கூற...

''ஐயோ அசோக்... என்ன பேசறீங்க? இதையெல்லாம் காதால் கேட்டுட்டு இன்னும் உயிரோட இருக்கேனே'' நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள் பிரியா.

''உன்னால் பைத்தியமானேன். உன்னாலே நீ இல்லையென்ற அதிர்ச்சியாலேயே திரும்பவும் குணமானேன். இனி, நீயில்லாமல் ஒரு நொடி கூட உயிர் வாழ மாட்டேன். நான் செத்துப் போகவா? நீ என்ன சொன்னாலும் சத்தியமாய் கேட்பேன் கண்ணம்மா!'' அழுத்தம் திருத்தமாய் சொன்னான்.

''அசோக்....'' அலறியவாறே அவன் வாயைப் பொத்தினாள்.

திகைத்து நின்றிருந்த சாரதாவை பார்த்து அம்மான்னு கூப்பிடலேன்னு குறைப்பட்டீங்களே? அம்மான்னு கூப்பிட நான் தயார்! என்னம்மா சொல்கிறீர்கள்? அம்மா... உங்க சம்மதம் இல்லேன்னாலும் பரவாயில்லை. பிரியாவைத்தான் மணப்பேன். உங்கமேல் அன்பு காட்ட அண்ணா, அக்கான்னு இருக்காங்க. ஆனால் என் பிரியாவுக்கும், என் பிள்ளைக்கும் யார் இருக்கா? உங்க பேரப்பிள்ளை அநாதையாய் போனால் பரவாயில்லையா?'' என்று சாரதாவைப் பார்த்துக் கேட்க...

''அசோக் வார்த்தையால சுடாதேடா! என் பேரப்பிள்ளை.. என் அசோக்கோட பிள்ளை எனக்கு வேண்டும். கொடும்மா... கொடும்மா ஜெயந்தி'' என்று குழந்தை சிவாவை வாங்கி அணைத்து.. முத்தமிட்டு.. உச்சியினை முகர்ந்து கண்ணீர் சிந்தினாள் சாரதா.

''என்னை மன்னிச்சுடும்மா! தென்றலாய் நீயிருக்க ஒரு புயலையும், பூகம்பத்தையும் அசோக் தலையில கட்டப்பார்த்தேன். அசோக் என் மருமகள் உன் திவ்யபிரியா தான்டா. என் பேரன்.. என் பேராசைக்கு தீ வச்சுட்டான்டா!''

பிரியா முகம் மலர... அசோக் அவள் கழுத்தில் தாலிகட்டினான். அவன் கை மயிலிறகாய் பட... சிலிர்த்துப் போனாள். கிருத்திகா அசோக்கின் காதலைப் பார்த்து அசந்துவிட்டாள். அதிசயப்பட்டாள்.

''எத்தனை கஷ்டம்.. எத்தனை துயரம்.. எத்தனை வேதனை அத்தனையையும் நீ, நான் அனுபவித்து இருந்தாலும், கடைசியில் சேர்ந்திருக்கோமே! நம்ம காதல் உண்மைக்காதல் தானே? சொல்லுடி கண்ணம்மா? பிரியாம்மா வாயை திறடி? ஐ லவ் யூ பிரியா! ஐ லவ் யூடி பிரியா!'' என்று கட்டியணைத்துக் கொண்டான். அவள் அவனுள் சிறைப்பட்டாள் நிம்மதியுடன்!

குழந்தை அதைப் பார்த்து சிரித்து.. அசோக்கிடம் தாவியது- ஆசையுடன் குழந்தையையும் வாங்கி அணைத்துக் கொண்டான்.

உண்மைக்காதல் எத்தனை துயரங்களை அனுபவித்தாலும்... வென்றே திரும்!

****** முற்றும் ******